கார்த்திகை 1990 இதழ்: 23

# சுவடுகள்



கடந்த வருடம் கோழைத்தனமாக சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி ராஜினி திரணகமவை சுவடுகள் பதிப்பகம் 30.09.90ல் நினைவுகூர்ந்தது. தமிழ் மக்களின் மனித உரிமைப் போராட்டத்தில் அக்கறை கொண்ட பல தமிழர்களும், சில நோர்வேஜியர்களும் கலந்து கொண்ட இந்த அஞ்சலிக் கூட்டத்தில் நோர்வே மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளர் அஸ்பியோன் எய்ட, நோர்வே விவசாயப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரியும் பேராசிரியர் ந.சண்முகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். கலந்து கொண்ட அனைவரும் நிகழ்வின் ஆரம்பத்தில் உயிரிழந்த போராளிகள், பொதுமக்களை நினைவு கூர்ந்து மௌன அஞ்சலி செய்தனர்.

இந்த நிகழ்வு பற்றி சுவடுகள் பதிப்பகத்தினரால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் பல இடங்களிலும் திட்டமிட்ட முறையில் இரவோடிரவாக அடையாளம் தெரியாமல் அகற்றப் பட்டிருந்தன. எனினும் சில 'மனிதாபிமானிகள்' தவிர கணிசமானோர் கூட்டத்தில் பங்குபற்றியதன் மூலம் தமிழ் மக்கள் மீது மனித உரிமை மீறல்களை நிகழ்த்துவோர் தனிமைப்பட்டு அம்பலமாகியுள்ளனர்.

---

சுவடுகள் படைப்பாளிகள், வாசகர்களின் சந்திப்பு ஒன்றை டிசம்பர் மாதம் சுவடுகள் பதிப்பகம் நடத்த உள்ளது. டிசம்பர் மாதம் 28ம் திகதி வெள்ளிக் கிழமை மாலை ஆறு மணிக்கு ஒஸ்லோ தொய்யன் தேவாலயத்தில் நிகழவுள்ள இந்த ஒன்று கூடலில் கலந்து சிறப்பிக்குமாறு சுவடுகள் வாசகர்கள் அனைவரையும் வேண்டுகிறோம்.

சுவடுகள் பதிப்பகம்

---

- செய்தியாளன் -

# சில நிகழ்வுகள்

ஈழத்துக் கவி சேரன், தமிழக பத்திரிகையாளர் ரமேஷ் ஆகியோர் சுவடுகளின் அழைப்பை ஏற்று நோர்வே வந்திருந்தனர். சுவடுகள் பதிப்பகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட 'சேரனுடன் ஒரு சந்திப்பு' என்ற நிகழ்ச்சியில் (20.10.90) கலந்து கொண்ட சேரன், 'இனத்துவமும் கலாசார அரசியலும்' என்ற தலைப்பில் உரையாற்றினார். தமயந்தியின் கவிதை ஒன்றைப் பின்னணியாகக் கொண்டு ஒரு சிறு நாடக நிகழ்வும், க.ஆதவன், சேரன், தமயந்தி, விஜயேந்திரன் ஆகியோர் பங்கேற்ற கவிதா நிகழ்வும் நிகழ்ந்தன.

முஸ்லிம் மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் உச்சம் பெற்றிருந்த சூழலில், சேரனின் உரை பலரது மனங்களில் நியாயமான பல கேள்விகளை எழுப்பியது. இது ஆரோக்கியமான விவாதம் ஒன்றும் நிகழ வழிவகுத்தது. பார்வையாளர்கள் மனந்திறந்து நிகழ்த்திய கருத்துப் பரிமாற்றத்தை பேராசிரியர் ந.சண்முகரத்தினம் வழிநடத்தினார். இந் நிகழ்வின் போது கவி வ.ஐ.ச.ஜெயபாலனும் கலந்து ஆரோக்கியமான கருத்துகளை முன்வைத்தார்.

## இலக்கியச் சந்திப்பு

மேற்கு ஜேர்மனியில் வெளியாகும் தமிழ்ச் சஞ்சிகைகளின் ஆசிரியர்களும், வாசகர்களும் தமது ஒன்றுகூடலை வழமைபோல நிகழ்த்திவருகின்றனர். 'இலக்கியச் சந்திப்பு' என அழைக்கப்படும் இந்த நிகழ்ச்சித் தொடரின் 10வது நிகழ்ச்சி டிசம்பர் மாதம் 29ம் திகதி பீலஃபெல்ட் நகரில் நிகழவுள்ளது. நிகழ்ச்சி பற்றிய தொடர்புகட்கு: V.Balachandran, Stapel Brede 54, 4800 Bielefeld 1, GERMANY

*"ஓவியராவதற்கு அடிப்படையாக என்ன தேவை?"*
*"பென்சிலும், பேப்பரும்"*
*- ஸ்ரீதர் பிச்சையப்பா சுவடுகளுக்கு அளித்த பேட்டியில் நகைச்சுவையாகக் கூறியது.*

# நோர்வே வந்திருந்த ஈழத்துக் கலைஞர்

பலதுறைகளில் தன்னைக் கால்பதித்த ஸ்ரீதர் பிச்சையப்பா, கோடைகாலத்தில் பாடகராக, நடிகராக நோர்வே வந்திருந்தார். நண்பர் ஒருவருடனான உரையாடல் ஒன்று பேட்டிவடிவில் பத்திரிகையில் வெளிவந்தபிறகு, பேட்டி என்றாலே சற்றுத் தயங்கும் தன்மை கொண்ட ஸ்ரீதர், சுவடுகளைச் சந்தித்தபோது தனது வழமையான நகைச்சுவை, உற்சாகங் கலந்த பாணியில் கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

ரமணியின் ஓவியங்களைப் பார்த்து ஏகலைவத் தனமாக தன்னை வளர்த்துக் கொண்டவர் ஸ்ரீதர். கவிதை போன்ற துறைகளுக்கு மொழி என்ற ஊடகம் 'தடை'யாக இருப்பதால் பரந்தளவில் அது ரசிகர்களுக்குச் சென்றடையாது, ஆனால் ஓவியம் இவ்வாறு தடைகளைக் கொண்டிராததால் பரந்தளவில் தனது கலை சென்றடையும் என்ற ஓரளவு சுயநலந்தான், தான் ஓவியராக மாறக் காரணம் என்று குறிப்பிட்டார். இசையில் கேள்விஞானம் வளர்வது போல தனது ஓவியம் பார்வை ஞானத்தால் வளர்ந்தது என்கிறார் ஸ்ரீதர்.

"எவ்வாறு உங்களை வளர்த்துக் கொண்டீர்கள்?"

"இந்தக் கேள்விக்கு நான் பதிலளித்தால் நான் வளர்ந்துவிட்டதாக அர்த்தம். உண்மையில் நான் வளர்ந்து கொண்டு இருக்கிறேன். சிறுவயதில் புத்தகங்களிலுள்ள ஓவியங்களைப் பிரதிபண்ணி, பிறகு எனது கருத்துகளை சுயமாகச் சொல்ல வேண்டும் என்ற ஆர்வத்தால் என்னை வளர்த்து வருகிறேன்"

"இலங்கையில் ஓவியத்துறை பற்றி..."

"தமிழில் ரமணி, மார்க்கு மாஸ்டர், கைலாசநாதன் போன்றோர் உள்ளனர். ஆனால் சிங்களத்தில் பலர் - தொகையளவில்- வரைகிறார்கள். தமிழில் ஓவியர்கள் தோன்றாமைக்கு சூழல் முக்கிய காரணமாக அமைகிறது. சிங்களவரிடையே வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. தமிழில் ஓவியத் துறைக்கான அமைப்புகள் எதுவும் இல்லை. சிங்கள மக்களிடையே பல அமைப்புகள் உள்ளன, தொலைக்காட்சியிலும் ஓவியம் பற்றிய பல நிகழ்ச்சிகள் நடக்கின்றன.

எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு தமிழில் 'தேடலும் படைப்புலகமும்' என்ற ஓவியம் பற்றிய நூல் வெளிவந்துள்ளது. சிங்கள ஓவியர்களது பல நூல்கள் ஏற்கெனவே வெளிவந்துள்ளன."

"தமிழரிடையே ஓவியத்துறை பற்றிய ஈடுபாட்டை எவ்வாறு அதிகரிக்க முடியும்?"

"உதாரணமாக தனிநபர் ஓவியக் கண்காட்சிகளை ஏற்படுத்தலாம். ஒருவேளை பத்து வருடங்களுக்குப் பிறகு

இந்த ஈடுபாடு விருத்தியுறலாம். கொழும்பில் சேகர் என்ற ஒரு தமிழரே இவ்வாறான கண்காட்சியொன்றை நடாத்தியுள்ளார். அடுத்த ஒன்று, ஒன்றரை வருடங்களில் இவ்வாறான கண்காட்சியொன்றை நடாத்த நான் முயற்சிக்கிறேன். மார்க்கு மாஸ்டர், கைலாசநாதன் போன்றோரது ஓவியக் கண்காட்சிகளும் நடாத்தப்படுவது அவசியம்."

"புதிதாக உருவாகியுள்ள தமிழ் கலாசார அமைச்சு ஓவியந் தொடர்பாக ஏதாவது செய்கிறதா?"

"சாஹித்திய விழாவில் ஓவியங்களும் இலக்கியங்களுடன் கௌரவிக்கப்பட உள்ளதாக அறிந்தேன். இவ்வாறான முயற்சிகள் எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்."

சில ஓவியர்கள் 'சோக்' பாவித்தும், சிலர் கோட்டுருவங்களையும், சிலர் வண்ண ஓவியங்களையும் விரும்புவர். ஸ்ரீதர் எதை விரும்புகிறார்?

"எல்லாமே ஏறத்தாள ஒருமாதிரித்தான். ஆனால் இந்தியன் மையை மாத்திரம் கொண்டு வரைவது, எல்லாவற்றையும் கறுப்பு- வெள்ளையிலேயே காட்டவேண்டி இருப்பதால் சிரமமானது. ஆனால் வண்ணங்கள் பாவிக்கும்போது ஓவியன் தனது எண்ணத்தை வண்ணங்கள்மூலம் இலகுவாக பிரதிபலிக்கலாம். உதாரணமாக நோர்மன் ராக்கல் என்ற அமெரிக்க ஓவியர் தனது ஓவியங்களை புகைப்படம் போல தத்ரூபமாக உருவாக்குகிறார். ஆனால் பல ஓவியர்கள் வண்ணங்களை வைத்து ஏமாற்றுவது அதிகம்."

"இன்னும் நூற்றைம்பது கேள்விகள் இருக்குமா?" என்று நகைச்சுவையாகக் கேட்ட ஸ்ரீதர், "இன்னும் இரண்டு வாரத்துக்கு வேண்டுமானால் நான் பதில் சொல்லியபடியே இருக்கிறேன்" என்றார்.

"சிங்கள ஓவியர்கள் பற்றி..."

காலம்
Vayal
5, Kutchery lane
Mylapore
Madras 4
S.India

"சிங்கள ஓவியர்களிடையே பலர் நன்கு வரைகின்றனர். சிலர் மிகப் புகழ் பெற்றிருக்கின்றனர். உதாரணமாக சேனக்க சேனநாயக்க மிக அதிகமாக வண்ணங்களைப் பாவித்து வரைவார். இவரது ஓவியங்கள் அழகியலை முதன்மைப் படுத்துபவை. ஆனால் உள்ளடக்கம் எதுவுமே கிடையாது. இவ்வாறான இவரது ஓவியங்கள் ரூபா. ஒரு லட்சம் வரையில் விற்கப்படுகின்றன. தற்போது சில புதிய ஓவியர்கள் வருகின்றனர். இவர்களது படைப்புகள் சிறப்பாக உள்ளன."

"ஓவியங்களில் பொதுவாக அழகியல் முதன்மைப் படுத்தப்படுகிறது., ஆனால் உள்ளடக்கத்தின் முக்கியம் பொதுவாக மறக்கப்படுகிறது. இதை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?"

"எல்லாக் கலைகளிலும் இலக்கியங்களிலும் ஏதாவது செய்ய வேண்டும், ஒரு செய்தியை வெளிப்படுத்த வேண்டும் என்ற உணர்வு இருக்கையில் ஓவியம் மட்டும் இதற்கு விதிவிலக்காகாது. அழகியல் முக்கிய அம்சந்தான். வெறும் அழகியல் மட்டும் ஒரு கலையாகாது. இது ஒரு சமூகத்துக்கான செய்தியாக அல்லது தனிமனித உணர்வாக இருக்கலாம்."

"இலக்கியங்களுக்கு சமகால உணர்வு வலியுறுத்தப்படுகிறது. இதை ஓவியத்துக்கும் விரிவாக்கலாமா?"

"நிச்சயமாக. படைப்புகள், படைப்பாளியை

மட்டுமன்றி காலத்தையும் பிரதிபலிக்கின்றன. உதாரணமாக, விஜிலண்ட் பூங்காவில் சிலைகளைப் படைத்த கலைஞர் விஜிலண்ட், தனது காலத்தில் இவ்வாறான ஒரு பூங்காவுக்காக மாநகரசபையிடம் விண்ணப்பித்தது போன்ற நிகழ்ச்சிகளைக் கூறலாம். இப்போதும் அவரது தேடல் உணர்வை- அந்தக் காலத்தை- சிலைகளில் நாம் காணமுடிகிறது. எந்தப் படைப்பும் தனது காலத்தை பிரதிபலித்தேயாக வேண்டும்."

தமிழ் ஓவியர்களைப் பொறுத்தவரை பெரும்பாலும்- தான் உட்பட- பத்திரிகை ஓவியங்கள்தான் வாய்ப்பாக உள்ளது. இது கட்டுப்பாடு நிறைந்த உலகம், புதிதாக எதையும் சாதிக்க முடியாது. மார்க்கு மாஸ்டர், கைலாசநாதன், ரமணி போன்றோர் சுதந்திரமாக இயங்குவதால் எதையாவது சாதிக்க முடியும் என நம்பும் ஸ்ரீதர், கடந்த தசாப்தத்தில் வந்த ஓவியங்கள் பெரும்பாலும் எதைப் பிரதிபலிப்பதாக நினைக்கிறார்?

"தனிமனித ரீதியிலும், தமிழ்ச் சமூகத்துக்கும் நிகழ்த்தப்படும் கொடுமைகளை வெளிப்படுத்துகின்றன இந்த சமகால ஓவியங்கள்."

"தமிழுக்கு 'நவீன ஓவியங்கள்' (modern art) புதிது என்று நினைக்கிறீர்களா?"

"புதிது என்று கூறமுடியாது, ஆனால் இவை எமது சமூகத்தை சரியாகச் சென்றடையாததால் புதிதுபோலத் தோற்றந் தருகின்றன."

"தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் ஓவியத்துறையில் வளர்ச்சி வேறுபாடுகளை எவ்வாறு காண்கிறீர்கள்?"

"நல்ல ஓவியங்களை பிரசுரிப்பது பொதுவாக சிற்றேடுகள்தான். பெரிய பத்திரிகைகள் இவற்றைப் பிரசுரிப்பதில்லை. தமிழகத்தில் வெளிவரும் அளவில் ஈழத்தில் சிற்றேடுகள் வருவதில்லை. எனவே தமிழகத்தில் வாய்ப்புகள் அதிகம்.

தமிழக ஓவியங்கள் அந்தச் சூழலையும், ஈழத்து ஓவியங்கள் இந்தச் சூழலையும் பிரதிபலித்தாலும், கலாசார ரீதியிலான ஒற்றுமை காரணமாக இந்த ஓவியங்களிடையே சில ஒற்றுமைகளும் உள்ளன."

ஈழத்தில் இலக்கியம் பற்றிய விமர்சகர்கள் வளர்ந்த அளவு, ஓவியங்கள் பற்றிய விமர்சகர்கள்- ஏறத்தாழ எவருமே இல்லை எனும் அளவு- இல்லாது போனது துரதிர்ஷ்டவசமானது என்கிறார் ஸ்ரீதர். 'தேடலும் படைப்புலகமும்' நூலில் எழுதிய அரூபன்தான் ஒரு விமர்சகர் எனக் குறிப்பிடலாம் என்ற ஸ்ரீதர், ஈழத்தில் ஓவியர்கள் என்று பேசப்படுவோர் வடக்கிலும், கொழும்பிலும் மாத்திரம் வசதியோடு இருப்பதாகவும், ஏனைய பிரதேசங்களில் இருந்து ஓவியர்கள் முன்வர வாய்ப்பில்லை என்றும் கவலைப்பட்டார்.

கவிஞர்கள் ஓரமைப்பாக இருந்து தமது படைப்புகளை வெளியிடுவது போல ஓவியத் தொகுப்பு ஒன்றை வெளியிட வேண்டும், ஓவியம் பற்றிய சஞ்சிகை ஒன்றை வெளியிட வேண்டும் என விரும்பும் ஸ்ரீதர், இதற்கான சில முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

ஸ்ரீதர் கவிதை, பாடல் எழுதுகிறார்; பாடுகிறார்; நடிக்கிறார்; ஓவியம் வரைகிறார்; இசையமைக்கிறார். எந்தத்துறையை அவர் நேசிக்கிறார்?

"முதலில் வானொலியில் 'சிறுவர்மலர்' பகுதிக்கு அப்பாவுடன் (ரி.எஸ்.பிச்சையப்பா- இசையமைப்பாளர்) சென்று நடிகனாக நேர்ந்தது. பிறகு, குரல்வளங் காரணமாக ஒரு இசைக்குழுவில் அறிவிப்பாளராக வேண்டிய நிலை ஏற்பட்டது. ஒருதடவை அதேகுழுவில் வராத பாடகர் ஒருவருக்குப் பதிலாகப் பாட நேரிட்டதில் பாடகனானேன். இந்த மூன்றும் தற்செயலானவை.

இலங்கையில் இந்தக் கலைகள் குறுகிய வட்டத்திலேயே உள்ளன. பரந்த இரசிகர் வட்டம் கிடையாது. எல்லாத் துறைகளிலும்

ஈடுபட வேண்டும் என்ற ஒரு ஆர்வந்தான் என்னை இப்படி ஆக்கியுள்ளது.

அடிப்படையில் எனக்கிருந்த ஆர்வம், எனது உணர்வை வெளிப்படுத்த வேண்டும் என்பது மட்டுந்தான். இந்தத் துறைகளில் எதையாவது முக்கியமாக நினைத்தால் ஏனைய துறைகளை கைவிட்டு விடுவேன்"

இவ்வாறு பல துறைகளில் காலடியைப் பதித்திருக்கும் ஸ்ரீதர் பிச்சையப்பா, ஒருதுறை மற்றொன்றுக்கு உதவியாக இருப்பதாக நினைக்கிறார்.

'தேடலும் படைப்புலகமும்' நூல்பற்றி அவர் என்ன கருதுகிறார்?

"இவ்வளவு காலமும் இருந்தவை எப்படியாய் இருப்பினும் இனியாவது ஓவியத்துக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் தொகுப்பு அது.

இந்த நூலில் ஓவியர்கள்பற்றி சில குறிப்புகள் உள்ளன. ஆனால் மொறாயஸ், ஸ்ரீ ஸ்கந்தராஜா, சாமி போன்ற ஓவியர்கள்பற்றி ஒரு குறிப்பும் இல்லை. இவர்களது படைப்புகள் பற்றி காலந் தீர்மானிக்கட்டும். இவர்கள் பற்றி, இவர்களும் ஓவியர்கள் என்று ஒரு குறிப்பாவது எழுதியிருக்கலாம் என்று எனக்கொரு கவலை. ஆனால் இது குற்றச்சாட்டு அல்ல."

இலங்கையில் இருந்து புறப்படுகையில் ஓவியம்பற்றி கொண்டிருந்த அபிப்பிராயம் இலங்கைக்கு வெளியே வந்தபோது பெரிதும் மாறியிருப்பதாக கூறிய ஸ்ரீதர், கார்ல் யோகன்ஸ் வீதியில் உருவப்படங்கள் வரையும் ஓவியர் ஒருவரிடம் பென்சில் பற்றிக் கேட்க, அந்த ஓவியர் தான் வரைந்து கொண்டிருந்த பென்சில் ஒன்றை வழங்கியதை மகிழ்வோடு நினைவு கூருகிறார். இவரை மிகக் கவர்ந்த ஓவியர்கள் ரமணியும் மணியம் செல்வனும்.

தொகுப்பு- சிற்பி

## மீண்டும் குளிர்

மீண்டும் குளிர்காலம்
வெண்பனி,
நிலமெங்கும் படர்ந்து
மெல்ல உருகத் தொடங்கி
ஒரு தொடர் கதையாக...

உயர்ந்து நின்ற
மரங்களிலே
இலைகள் இல்லை;
'கிறிஸ்மஸ்' மரத்தைத் தவிர

பனி கொட்டி
அது ஓய்ந்து
பின் மழை பெய்து
அப் பனியைக் கரைத்து
பின்னும் சில நாளில்
பனி கொட்டி
முடிவிலி...

பனி, மழை, புயல், காற்று
இவற்றுடன் போராடும்
மனிதர்களுள் ஒருவனாய்
வடதுருவத்தில் நானும்
என்னுடன் சிலரும்
பனிப் போரில்.

- யோகன் -

*'நாணல்'*
J.Johnes,
AM Groben Wiel 11,
4800 Bielefeld 1,
West Germany.

# சுவடுகள்

இலங்கையில் கடந்த பல வருடங்களாக வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கும் சிங்கள அரசுக்கும் இடையே இருந்த முரண்பாடு முக்கிய இடத்தைப் பெற்று வந்தது. தற்போது முஸ்லிம் சக்திகளின் எழுச்சி, மலையக மக்கள் மீதான புதிய ஒடுக்குமுறைகள் என்பனவும் முக்கியம் பெற்று வருகின்றன. தற்காலிகமாக ஓய்வைச் சந்தித்திருப்பது போலத் தோற்றம் தரும் யுத்தம் சில பகுதிகளில் தீவிரத் தன்மை பெற்றிருப்பதோடு சில புதிய பரிமாணங்களையும் பெற்று வருகிறது.

இந்தியப் படைகள் வெளியேறும் தருவாயில் விடுதலைப் புலிகள் இலங்கை அரசுடன் இணைந்து தம்மைத் தாக்குவதாகக் குற்றம் சாட்டிய அமைப்புகள் சில இன்று சிங்கள அரசின் துணையுடன் 'புலி எதிர்ப்பு யுத்தம்' ஒன்றில் ஈடுபடுகின்றன. இந்த 'புலி எதிர்ப்பு யுத்தம்' தான் தமிழ் பேசும் பத்து லட்சம் அப்பாவிப் பொதுமக்களை அகதிகளாக்கியது; ஏறத்தாழ ஐயாயிரம் பேரின் உயிரைக் குடித்தது; தமிழர் வாழும் பகுதிகள் யாவற்றையும் சுடுகாடாக்கியது; யுத்தத்துக்கு அஞ்சி அலைகடலைக் கடந்து அயல்நாட்டில் தஞ்சம் கோரச் சென்ற அகதிகளை நடுக்கடலில் குண்டுவீசிக் கொலை செய்தது. இந்த நடவடிக்கைகள் அனைத்தும் 'புலி எதிர்ப்பு யுத்தம்' என அரசால் வர்ணிக்கப் படுகின்றன. எப்போதும் சிறுபான்மை இனத்தவரின் நலன்கள் மீது அரசுக்கு அக்கறை இருந்ததில்லை. 1983 முதல் 'பயங்கர வாதிகட்கு எதிரான யுத்தம்' என்ற போர்வையில் தமிழர்களைக் கொன்று குவித்த அரசு தற்போது 'புலி எதிர்ப்பு யுத்தம்' நிகழ்த்துகிறது.

இன்றைய அவலங்கட்கு அரசியல் கணிப்பீடுகள் தவறிப் போனமை ஒரு முக்கிய காரணமாக இருக்க மறுபுறத்தில் தமிழ்க் குழுக்கள் சில அரசிடம் சோரம் போனமை பாரிய காரணமாக உள்ளது. இவ்வாறு தமிழ் அரசியல்க் குழுக்கள் அரசின் பின் நிற்பதால்தான் சர்வதேச அரங்கிலும் இதைப் புலிகட்கெதிரான யுத்தமாக அரசால் பிரகடனம் செய்ய முடிந்திருக்கிறது. இவர்களின் நோக்கம் தமிழ் மக்களின் விடுதலை என்ற நிலையில் இருந்து வெகு தூரம் போய், புலிகளைப் பழிவாங்கல் என்ற நிலையை அடைந்துள்ளது.

முன்னர் புலிகள் தமது அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்காக அரச துணையுடன் ஏனைய குழுக்களை அழித்த போதும், தற்போதைய சூழலிலும் கொல்லப்படுவது தமிழ் மக்களே. இவர்கள் ஏதோ ஒரு தலைமை தமிழ் மக்களுக்கு விடிவைத் தேடித் தரும் என்று நம்பி அந்த தலைமையின்கீழ் அணிதிரண்டவர்கள். இவர்களை நாங்களே அழித்துவிட்டு ஒரு மலடான எதிர்காலத்தையே எதிர்கொள்ளப் போகிறோம். இன்று அரசுடன் நிற்கும் அமைப்புகள் தமது மனச்சாட்சியையே இப்போது கேட்டுக் கொள்ளட்டும்; எமது மக்களுக்காக நிரந்தர யுத்தத்தைத்தான் இவர்கள் வழங்கப் போகிறார்களா? தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத அரசுடன் எந்த நம்பிக்கையில் தொடர்ந்து பணிபுரிய முடியும்? தமிழ் மக்களின் முதல் எதிரி புலிகளா? இலங்கை அரசா? கொல்லப்பட்ட தமிழ் மக்கள் புலிகளே எனப் பிரசாரம் செய்யும் சிங்கள அரசை சர்வதேச ரீதியில் அம்பலப் படுத்த இவர்கள் எடுக்கும் நடவடிக்கை என்ன?

தமிழ் மக்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சனை உயிர்ப் பிரச்சனை, அடிப்படை உரிமை தொடர்பான பிரச்சனை. வெறுமனே அரசுடன் நிற்பதால் தீர்க்கப்பட முடியாதது என்பதை கடந்த காலங்கள் நிரூபித்துள்ளன. இந்த நிலையில் இருந்து இவர்கள் விடுபடாதவரை இவர்களால் தமிழ் மக்களுக்கு தீமைகளே விளையும்; நன்மைகளல்ல. இது தமிழ் மக்களுக்குத் தெரியும், இவர்களுக்குத் தெரிந்தால் மாத்திரமே எதிர்காலத்திலாவது ஏதாவது இவர்களால் தமிழ் மக்களுக்கு ஏதாவது நல்ல காரியம் செய்ய முடியும். மறுபுறத்தில் மக்களின் அரசியல் ரீதியிலான பங்களிப்பு இல்லாமல் புலிகளாலும் போராட்டத்தில் ஒருபோதும் முன்னேறமுடியாது.

சுவடுகள் 23
கார்த்திகை 1990

- கொழுந்தன் -

# நவம்பர் 15

1948 நவம்பர் மாதம் 15ஆந் திகதி மலையக மக்கள் தமது வரலாற்றில் மறக்க முடியாத நாளாகும். சுமார் மூன்று தலைமுறைகளுக்கு (120 வருடங்கள்) மேலாக இலங்கையில் வாழ்ந்துவந்த தோட்டத் தொழிலாளர்களது குடியுரிமை இலங்கையின் மிகப் பெரிய சிறுபான்மை இனமான வடக்கு- கிழக்குத் தமிழ்த் தலைமைகளது ஆசீர்வாதத்துடன் சிங்களப் பேரினவாதிகளால் பறிமுதல் செய்யப்பட்ட தினமே நவம்பர் 15ஆந் திகதியாகும். சுமார் 45 வருடங்களுக்கு முன் இலங்கையின் தேசிய இனங்களில் ஒன்றான மலையக மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட இந்த ஒடுக்குமுறை இற்றைவரை வெவ்வேறு வடிவங்களில் தொடர்கிறது.

சுமார் 160 வருடங்களுக்கு முன் பிரித்தானிய ஏகாதிபத்திய முகவர்களால் மலையகத் தோட்டங்களில் வேலைசெய்வதற்காக கூலிகளாக அழைத்து வரப்பட்ட இம்மக்களை, கோப்பி ராசாவின் ஆட்சிக் காலந் தொட்டு இன்றைய பிரேமதாசவின் ஆட்சிக் காலம்வரை இலங்கைக்கு அந்நியச் செலாவணியை பெற்றுக் கொடுப்பதில் பெரும் பங்கை வகிக்கின்றனர். இலங்கையின் தேசியச் செல்வத்தில் பெருமளவு பங்கை ஈட்டிக் கொடுக்கும் இம்மக்களது தேசிய செல்வங்களாக இருப்பது வறுமையும் பிணியுமே. உண்மை உழைப்பொன்றையே நம்பி வாழும் இம்மக்களது உழைப்பை உறிஞ்சி, தம்மை வளர்த்துக் கொண்டோர் ஏராளம். ஆனால் தங்களுக்கென சிறுதுண்டு நிலங்கூட வாங்க முடியாத உரிமையற்றவர்களாக, நாடற்றவர்களாக இந்த 20ஆம் நூற்றாண்டின் நவீன கொத்தடிமைகளாக, மாட்டுக் கொட்டில்களைவிட மோசமான லயங்களிலுள்ள சிறு காம்மிராக்களிலேயே இவர்கள் தமது வாழ்க்கையைக் கழிக்கின்றனர்.

இலங்கையின் தேசபிதா(?)வும் தேசிய முதலாளித்துவ இனவாதக் கட்சியான ஐக்கிய(?) தேசியக் கட்சிக்கு தலைமை வகித்தவருமான டி.எஸ்.சேனநாயக்காவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட மலையக மக்கள் மீதான ஒடுக்குமுறையை நடைமுறைப் படுத்துவதில் 1948முதல் சகல தேசிய முதலாளித்துவக் கட்சிகளும் ஓரணியில் நின்றே செயல்பட்டு வருகின்றன. இவ்வினவாதக் கட்சிகள் மட்டுமன்றி சோஷலிசம், பொதுவுடமை, சமவுடமை போன்ற உயர் வார்த்தைகளை எல்லாம் பிரயோகித்த இலங்கையின் புரட்சிகர இடதுசாரி(?) கட்சிகள் யாவுமே மலையக மக்களது கண்ணீரில் பங்குகொள்ளவில்லை.

70ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கூட்டுமுன்னணி அரசு 72இல் கொண்டுவந்த 'சுவீகரிப்புச் சட்டத்தின்' ஊடாக பல தனியார்துறை நிறுவனர்களை

சுவீகரித்து பொதுநிறுவனமாக்கியது. இந் நிறுவனர்களில் கடமையாற்றிய ஊழியர்களும் அரச ஊழியர்களாக்கப்பட்டு பலவித உரிமைகளைப் பெற்றார்கள். ஆனால், இவ்வாறு சுவீகரிக்கப்பட்ட பெருந்தோட்டத் துறையில் மட்டும் ஊழியர்கள் தொடர்ந்தும் தினக் கூலிகளாகவே நடாத்தப்படுகின்றனர். இவ்வரசிலேயே இலங்கையின் புகழ்பெற்ற இடதுசாரிகளான கலாநிதி என்.எம்.பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா போன்றோர் அங்கம் வகித்ததுடன், சுவீகரிப்புச் சட்டம் கொண்டுவர காரணமாகவும் இருந்தனர்.

இன்று வடக்கு- கிழக்கு மக்களின் போராட்டத்துக்கு முக்கியத்துவம்(?) கொடுத்து இலங்கையரசுக்கு உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பலநெருக்கடிகளைக் கொடுத்துவரும் இந்தியப் பேரரசு, அன்று மலையக மக்களது அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டபோது வெறும் கண்டனத்துடன் நின்றுகொண்டது. அன்று உலக அரசியலையே தனது தலையில் வைத்திருந்த ஆசியஜோதி ஜவகர்லால் நேரு முதல் அவரின் பேரன் ரஜீவ் வரை மலையக மக்களுக்கு குறைப்பிரசவ உடன்படிக்கைகளை வழங்கி இலங்கை அரசுக்கு உதவினர். 1947-48இல் டி.எஸ்.சேனநாயக்க- நேரு பேச்சுவார்த்தையும், 1953இல் ஏற்பட்ட கொத்தலாவல- நேரு உடன்படிக்கையும், 1964இல் ஸ்ரீமா- சாஸ்த்ரி உடன்படிக்கையும், 87இல் ரஜீவ்- ஜேஆர் உடன்படிக்கையும் மலையக மக்கள் தொடர்பான இந்தியாவின் தெளிவற்ற நிலைப்பாட்டைக் காட்டுகிறது. இவ் உடன்படிக்கைகள் மலையக மக்களது பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக்காமல் உருவானவை; இரு நாடுகளதும் அரசுகளின் நலன்களை மட்டும் முதன்மைப் படுத்துபவை. ஸ்ரீமா- சாஸ்த்ரி உடன்படிக்கையால் லட்சக்கணக்கான மக்கள் தமது தமது உடன்பிறந்தோரையும் பெற்றோரையும் தாம் வாழ்ந்த நிலத்தையும் பிரிந்து இந்தியாவுக்கு அனுப்பப் பட்டமையும், மலையக புகையிரத நிலையங்களில் அவர்கள் கண்ணீருடன் வழியனுப்பப் பட்டமையும் அக் காலத்தில் தினசரிச் செய்திகள்.

மலையக மக்களின் இன்றைய துயருக்குக் காரணமான ஐ.தே.க.வுடன் சேர்ந்து பவனிவரும் தென்னாசியாவின் மிகப்பெரிய தொழிற் சங்கமான இ.தொ.காவும் அதன் தலைவர் தொண்டமானும் மலையக மக்களை பகடைக்காய்களாக்கி அவர்களின் பாமரத் தனத்தின்மீது சவாரி செய்தபடி இனவாத அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குகிறது. மலையக மக்களைப் பெருமளவில் பிரதிநிதித்துவப் படுத்தும் இ.தொ,கா. கடந்த 12வருடங்களுக்கு மேலாக அரசுடன் இணைந்திருந்து சாதித்தவை அரைகுறை பிரசவ உடன்படிக்கைகளே. ஒப்பீட்டு அடிப்படையில் ஏனைய சமூகங்களைவிட மிகப் பின்தங்கிய நிலையிலேயே மலையக மக்கள் உள்ளனர். இவர்களின் அடிப்படைப் பிரச்சனைகளான கல்வி, வீடமைப்பு போன்றவற்றைக்கூட தொண்டமானால் தீர்த்துவைக்க முடியவில்லை. ஏற்கெனவே இயங்கும் பல பாடசாலைகளில் 5ஆம் வகுப்புக்குமேல் இருப்பதில்லை. வீடமைப்பில் மறுமலர்ச்சிக் காலம் என வர்ணிக்கப்படும் கடந்த 12வருடங்களில் மலையக மக்களின் வீடுகள் எதுவிதத்திலும் முன்னேற்றம் அடையவில்லை. வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு ஏற்ப இவர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப் படுவதில்லை.

இவர்களது பாரம்பரியப் பிரதேசங்களை பிரித்துக் கொடுக்கும் இனவாத அரசின் செயலைக் கண்டித்து மலையகமே போர்க்கோலம் பூண்டது. அதில் உயிரிழந்த தியாகி சிவனு லட்சுமணனின்

*தமிழ் நோர்வே இணைவு கூடத்தின் 1991ம் ஆண்டுக்கான அங்கத்தவர்களாகச் சேருமாறு இணைவுகூடம் அனைவரையும் கேட்டுக் கொள்கிறது. இணைவுகூடத்தின் வாசிகசாலை, தேநீர்ச்சாலை என்பன தற்போது வெள்ளிக் கிழமைகளில் திறந்திருக்கின்றன. அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர்* Bankgiro *மூலம் 30 குறோணர்களைச் செலுத்தி அங்கத்தவராகலாம். இணைவுகூடத்தில் அங்கத்தவராகுமாறு அனைவரையும் அழைக்கிறோம்.*

*வங்கிக் கணக்கிலக்கம்: 16075011133*

*தமிழ் நோர்வே இணைவுகூடம்*

Herslebs Gate 43

0578, Oslo.

தியாகத்தையும் கொள்ளையடித்து உரிமை கோரியது இ.தொ.க. உரிமைப் போராட்டங்களை மக்கள் முன்னெடுக்கும் போது அரசிடம் மண்டியிட்டு எலும்புத் துண்டுகளைப் பெறும் இக்கட்சி, இலட்சக் கணக்கான ரூபாய்கள் செலவில் பொன்விழா, வைரவிழா, பிறந்தநாள் விழாக்களை நடாத்துகிறது.

இலங்கைத் தமிழ் மக்களின் ஓரங்கமாக விளங்கும் மலையக மக்களது ஏக்கங்களையும் அபிலாஷைகளையும் புரிந்து கொண்டு குடாநாட்டுத் தலைமைகள் செயற்படவில்லை. சர்வசன வாக்குரிமையை எதிர்த்து நாட்கணக்கில் பேசிய இராமநாதன் முதல் ஐ.நா.சபையில் இலங்கை சார்பாக மணிக்கணக்கில் பேசியவர்; சர்வசன வாக்குரிமையால் மலையக மக்கள் தேர்ந்த பிரதிநிதிகள் பதவியிழக்க ஒத்துழைத்த ஜீ.ஜீ.ஈடாக இன்று துப்பாக்கிக் கலாசாரத்துக்கு வித்திட்டுள்ள இயக்கங்கள்வரை இவர்களை பகடைக் காய்களாகவே பயன்படுத்துகின்றனர். மலையகம் பற்றி பெரிதாகக் கூக்குரலிட்ட ஈபிஆர்எல்எஃவ், ஈரோஸ் ஆகியவற்றின் அண்மைக்கால செயற்பாடுகள் முன்னைய குடாநாட்டு பிற்போக்குத் தலைமைகளுக்கு எதுவிதத்திலும் குறைந்ததல்ல. குறிப்பாக மலையகம் பற்றி அதிக கரிசனை கொண்டவர்களாகக் காட்டிக் கொண்ட ஈரோஸ், அரசியல் விபத்தால் பாராளுமன்றத்துக்குச் சென்றபோதும் மலையக மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக ஒரு கண்டனத் தீர்மானத்தைத் தானும் கொண்டுவரவில்லை.

மலையக மக்களின் உரிமைப் போர்பற்றி எதுவித அக்கறையும் இல்லாதிருந்த புலிகள், அரசின் நாடு கடத்தல் உத்தரவை எதிர்த்து ஹர்த்தால் நடாத்தியதுடன் அம்மக்களை வடக்கு- கிழக்கில் குடியேற்ற தயாரென அறிவித்துள்ளனர். புலிகளது இவ்வறிவிப்பை இருவழிகளில் நோக்கலாம்.

1. பாரம்பரியமாக, தலைமுறை தலைமுறையாக அவர்கள் வாழ்ந்த பிரதேசத்தில் இருந்து வெளியேறுமாறு விடுக்கப்படும் கோரிக்கை, அவர்களை விரட்டியடிக்கும் இலங்கையரசின் நோக்கத்துக்கு எதுவிதத்திலும் குறைந்ததில்லை.

2. இம்மக்களை தமிழீழத்தின்(?) எல்லைப் புறங்களில் குடியமர்த்தி, அம்மக்களை இனவெறியரசின்

இராணுவத்துக்கு பலியிட்டு அரசியல் ஆதாயந் தேடுவது. மலையக மக்களை வடக்கு- கிழக்கில் குடியேறக் கோரும் புலிகள், குடாநாட்டினுள் அம்மக்களை குடியேற்றுவார்களா?

மலையகம், மலையகத்தவர்க்கே. அம்மக்களின் இரத்தத்திலும் வியர்வையிலும் உயிர்வாழும் இலங்கையின் ஏனைய இனங்களுக்கு உள்ள சகல உரிமைகளும் அவர்களுக்கு மலையகத்திலேயே வழங்கப்பட வேண்டும். காலாவதியான மற்றும் அரைகுறை உடன்படிக்கைகளைக் காட்டி அம்மக்களை நாடுகடத்தும் எந்த நடவடிக்கையும் எதிர்க்கப்பட வேண்டும். அவர்களது யதார்த்த பூர்வமான பிரச்சனைகளை உலகுக்கு தெரியப்படுத்தி 42வருடங்களுக்கு மேலாக நீதியின்றி கொத்தடிமைகளாக வாழும் அவர்களின் துயரம் நீங்க சகல முற்போக்கு சக்திகளும் அணிதிரண்டு போராடுவதுடன் சந்தர்ப்பவாத, துரோக சக்திகளை அகற்ற முன்வர வேண்டும்.

---

## 'மா:பியா' செய்திகளுக்கு மறுப்பு!

- அவதானி -

அண்மையில் நோர்வே தொடர்புச் சாதனங்களில் புலிகள் தமிழரை மிரட்டிப் பணம் சேகரிப்பதாகச் செய்தி வெளிவந்திருந்தது. இது தொடர்பாக அல்ரா மாநகரசபையைச் சேர்ந்த 45 தமிழர்கள் கையெழுத்திட்ட கடிதம் ஒன்றைத் தொடர்புச் சாதனங்களுக்கு அனுப்பியுள்ளனர். அதில், அவ்வாறு பிழையான முறையில் பணம் சேகரிக்கவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

அல்ரா அகதிகள் தொடர்பாக அகதிகள் தொடர்பாளர் சிஸ்ரன் காள்ஸ்ரோம் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்ததாகவும், பணத்துக்குப் பதிலாக பெறுமதி வாய்ந்த பொருட்கள் பெறப் பட்டதாகவும் கூறியுள்ளார். ஆனால் பின்மார்க் தமிழ் வட்டாரங்கள் தமது சொந்த விருப்பிலேயே இவற்றைத் தாம் வழங்கியதாக பத்திரிகைகளிடம் கூறியுள்ளன.

இது இவ்வாறிருக்க அல்ரா, போட்ஸ்பியோட், மெஹாம் மாநகரசபைகளின் அகதிகள் தொடர்பாளர்கள் தொடர்புச் சாதனங்களில் வெளியிட்ட செய்திகள் தொடர்பாக வார்டோவைச் சேர்ந்த 50 தமிழர்கள் தாம் மிக அதிர்ச்சி அடைவதாக, கடிதம் ஒன்றின் மூலம் அகதிகள் தொடர்பாளர்களுக்கும் பின்மார்க் தமிழ் அமைப்புகளுக்கும் தெரிவித்துள்ளனர். இவ்வாறான செய்திகள் பரவுவது தமிழருக்கும், நோர்வேஜியர்களுக்கும் இடையிலான நல்லுறவைப் பாதிக்கும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்செய்திகள் வடபகுதியில் இருந்து வரும் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. தாங்கள் புலிகளுக்கு ஆதரவு வழங்குவதாக சிலர் குறிப்பிட்டதாகவும்; புலிகளுக்கு ஆதரவு வழங்காத ஒருவர், தான் புலிகளுக்கு ஆதரவு வழங்காவிடினும் இவ்வாறாக மிரட்டிப் பணம் சேகரிக்கப்படவில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புவதாக எழுதியுள்ளதாகவும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

## இலங்கைப் படைகளையும் தமிழ் கெரில்லாக்களையும் ஒரே முகாமில் பயிற்றுவித்த இஸ்ரேல்

- சத்தியன் -

"நான் ஒரு நிருபருடன் பேசிக் கொண்டிருந்தேன். இஸ்ரேலியப் பிரதமர் ஷமீர், 'பலஸ்தீனர்கள் மக்களே அல்லர்' என்று கூறியதாக அந்த நிருபர் கூறினார். மேற்குக் கரையில் (இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசம்) நடந்து கொண்டிருந்தேன். நான் ஏராளமான பலஸ்தீனர்களைக் கண்டேன். அவர்கள் மக்கள் போலவே எனக்குத் தோற்றமளித்தனர். அவர்களுக்கு கால்கள் இருந்தன, கைகள் இருந்தன.

- பேட்டி ஒன்றில் ஒஸ்ரரோவ்ஸ்கி -

இஸ்ரேல், தமிழ் கெரில்லாக்களையும் இலங்கை அரசபடைகளையும் ஒரே இடத்தில் ஒரே காலத்தில் வைத்து இராணுவப் பயிற்சி வழங்கியதாக முன்னாள் மொசாட் உளவாளி ஒருவர் தனது நூலில் எழுதியுள்ளார். 'By way of deception; The making and unmaking of a mossad officer' என்ற தனது நூலில் விக்ரர் ஒஸ்ரரோவ்ஸ்கி என்ற மொசாட் உளவாளி இந்த அதிர்ச்சிதரும் தகவலை வெளியிட்டுள்ளார்.

மொசாட்டில் நான்கு வருடம் பணிபுரிந்த ஒஸ்ரரோவ்ஸ்கி கனேடிய யூதத் தந்தைக்கும், இஸ்ரேலிய தாய்க்கும் பிறந்தவர். இஸ்ரேலில் வளர்க்கப்பட்ட இவர், இஸ்ரேல் இராணுவத்தின் மிக வயதுகுறைந்த அதிகாரயாக 18வயதில் ஆயுதச் சோதனையாளராகப் பணிபுரிந்து, இஸ்ரேலின் உளவுப் படையான மொசாட்டின் கடுமையான பயிற்சிக்குப் பின் 'கற்சா' என்றழைக்கப்படும் அதிகாரியாகப் பணியாற்றி, மொசாட்டிலிருந்து அதிருப்தியுடன் வெளியேறியவர். மொசாட்டிலிருந்து வெளியேறியபின் தனது அனுபவங்களையும், மொசாட் பற்றிய தகவல்களையும் எழுதி கிளெயர் ஹொய் என்ற கனேடியரோடு சேர்ந்து வெளியிட்டார். இந்த நூலில் வெளியான பல தகவல்கள் பல அதிர்ச்சி தருபவை. நூல் வெளியாகுமுன் ஒஸ்ரரோவ்ஸ்கியை இந்த நூலை வெளியிடாது தடுக்க இஸ்ரேல் பெரிதும் முயன்றது. நூலாசிரியர் தலைமறைவு வாழ்க்கைக்குச் சென்று நூலை வெளியிட்டபின் தற்போது மொசாட் அவரைக் கொல்வதாகச் சவால் விட்டுள்ளது.

நூலிலிருந்து இலங்கை பற்றிக் குறிப்பிட்டுள்ள சில முக்கிய தகவல்களை இவை:

"1977ல் ஜெயவர்த்தனா அரசு பதவிக்கு வந்தபோது விவசாயிகளிடையே அமைதியின்மை நிலவியது.இப் பிரச்சனையைத் தீர்க்க மொசாட்டின் உதவி நாடப்பட்டது. மொசாட் அதிகாரியான அமி யார் இந்த விஷயத்தைக் கையாண்டார். அதிருப்தியுற்ற விவசாயிகளை அவர்களது இடங்களில் இருந்து மாற்றும் வேலைகள் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் நடாத்தப்பட்டன. 7,50,000 ஏக்கர் புதிய நிலம் சாகுபடி செய்யப்படலாம், நீர்மின்வலு இரட்டிப்பாகலாம் என்ற காரணங்கள் காட்டப்பட்டு 30வருடத் திட்டம் துரிதமாக நடைமுறைப் படுத்தப்பட்டது.

பொருளாதார, விவசாய துறைகளில் நிறமைவாய்ந்த இருவர் மொசாட்டின் சார்பில் இத்திட்டத்தின் நன்மைகள் பற்றி உலக வங்கிக்கு எழுதியிருந்தனர். உலகவங்கி அதிகாரிகள் மகாவலி கங்கைத் திட்டம்பற்றி பார்வையிடச் சென்றபோது, மொசாட்டின் கட்டளைப்படி, இலங்கையரசு திட்டம் 'அபிவிருத்தி' அடைவதுபற்றிப் பிழையான இடங்களைக் காட்டித் தகவல்களையும் கூறினர்.

பின்னர் ஜெயவர்த்தனாவின் மருமகள் பென்னி இஸ்ரேல் வந்தபோது 'சிமொன்' என்ற பெயரில் நான் அவர்களுடன் இடங்களைச் சுட்டிக் காட்டினேன். இந்தப் பயணம் இரகசியமாக இருந்தது. நாங்கள் பொதுவாகவே பேசிக்கொண்ட போதும், மகாவலித் திட்டத்துக்காக வாங்கிய பணம் ஆயுதங்கள் வாங்கப் பயன்படுவதாக பென்னி குற்றஞ் சாட்டினார். உண்மையில் மகாவலித் திட்டம் 'கண்டுபிடிக்கப்'பட்டதே ஆயுதங்களுக்குப் பணம் பெறத்தான்"

"யூலை 84 பகுதியில் லண்டனில் இருந்து இஸ்ரேல் வந்த 9இலங்கையரை நான் விமான நிலையம் சென்று வரவேற்கவேண்டி இருந்தது. அப்போது மி யார் 'அவர்களிடம் இருந்து பெரிதாக எதையும் எதிர்பார்க்க வேண்டாம், அபிவிருத்தி அடையாத இடத்திலிருந்து வரும் அவர்கள் குரங்குகள் போல இருப்பார்கள், மரங்களில் இருந்து அவர்கள் நீண்டகாலம் கீழ் இறங்கவில்லை' என்றான். அந்த 9பேரும் 50பேர் கொண்ட தொகுதியின் முதற்குழுவினர். அவர்கள் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட இருந்தனர்.

(1) பயங்கரவாதத் தடுப்புக்குழு- கடத்தப்பட்ட விமானம், பஸ் போன்றவற்றைக் காப்பாற்றுவது, ஹெலியில் இருந்து கயிற்றில் இறங்குவது, கடத்தல் காரருடன் பேரம் பேசுவது போன்ற பயிற்சிகள் பெறுவதோடு இஸ்ரேலிய ஊஸிக்களையும் கிறனைட் போன்ற உபகரணங்களையும் வாங்குவது இவர்களின் வேலை.

(2) அது பெருமளவில் ஆயுதங்கள் வாங்க வந்த குழு. அவர்கள் ஏழெட்டு P Tபடகுகளையும்- பாக்குநீரிணையில் ரோந்து புரிய- வாங்கினர்.

(3) உயர்மட்ட அதிகாரிகள் குழு- ராடார் போன்ற உபகரணங்களைக் கடற்படைக்காக வாங்கியோர்.

---

* இலங்கையர்களைக் 'குரங்குகள்' என இஸ்ரேல் அதிகாரி ஒருவர் வர்ணித்ததுபற்றி நூலில் எழுதவா வேண்டாமா என்று யோசித்த ஒஸ்ரோவ்ஸ்கி, இது இலங்கையர்களைக் கவலைப்படுத்தும் என்றாலும், இஸ்ரேலிய அதிகாரிகள் இவ்வாறான அபிப்பிராயமே கொண்டிருந்தார் என்பதை வெளிக்காட்டவே தான் அதனை எழுதியதாக அவர் கூறியுள்ளார். இத்தகவலை இலங்கைப் பத்திரிகை ஒன்றுக்கு கனடாவில் அவரது மறைவிடம் ஒன்றிலிருந்து அளித்த தொலைபேசிப் பேட்டியில் கூறியுள்ளார்.

---

பென்னியை அழைத்துக் கொண்டு திரிந்தபின் இலங்கை இராணுவ உயரதிகாரிகள் கொண்ட குழுவை நான் கொண்டு சென்றேன். இவர்களுடன் ராடார் தயாரிப்பாளரான அல்ரா என்பவரை அணுகியபோது, அவர் இலங்கையர்கள் பற்றி மிக அதிருப்தியுற்றுக் காணப்பட்டார். ஏனெனில் அவர்கள் ஏற்கெனவே பிரிட்டிஷ் ராடார் நிறுவனம் ஒன்றுக்கு விஜயஞ் செய்து அதுபற்றிய குறிப்புகளை வைத்திருந்தனர்.

ஹீப்ரு மொழியில் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்த போதே நானும்

அல்ராவும் இதுபற்றிப் பேசி, இவர்களுடன் வேடிக்கை புரிவதாகத் திட்டமிட்டோம். துறைமுகங்களில் எண்ணெய் சிந்திவிட்டால் துப்பரவு செய்யும் பெரிய துப்பரவாக்கி (Vaccum Cleaner) ஒன்றின் அழகிய வரைபடங்கள் அல்ராவிடம் இருந்தன. இவற்றின் விளக்கங்கள் ஹீப்ரூ மொழியில் இருந்தன. அல்ரா இவற்றைக் காட்டி 'இது ஒரு உயர்தர ராடார், கடலின் அடியில் நீந்தும் ஒருவனையும் இதனால் கண்டுபிடிக்கலாம், அவனது சப்பாத்தின் அளவு, அவனது பெயர், முகவரி, ரத்தவகை போன்றவற்றையுங் கூடச் சரியாகச் சொல்லிவிடலாம்' என்றான். என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. அல்ரா கூறிமுடித்தபிறகு இலங்கையர்கள் அவனுக்கு நன்றிகூறியதோடு, இந்த ராடாரின் தொழினுட்பம் வியக்கத்தக்கது எனவும், ஆனால் இதனைத் தமது படகுகளில் பாவிக்க முடியாது எனவும் கூறினர். அத்தோடு தமது படகுகளைப் பற்றியும் விபரிக்கத் தொடங்கினர். நல்லது, அவர்கள் விபரிக்கும் படகுகளைக் கட்டியவர்களே நாங்கள்தான்.

இதன்பின் இலங்கையின் விசேட படையினர் பயிற்சிபெற்ற இடமொன்றுக்கு, அவர்களை டெல் அவிவ் அழைத்து வருவதற்காக நான் சென்றேன். இந்த இடத்தில் பணியாற்றிய யோஸி என்ற அதிகாரியுடன் ஆலோசித்துக் கருமமாற்றுமாறு எனக்குப் பணிக்கப்பட்டது. யோஸியும் ஒரு குழுவினருக்குப் பயிற்சி வழங்கிக் கொண்டிருந்தார். எனது குழுவினரும் (விசேட படையினர்) யோஸியின் குழுவினரும் ஒருவரையொருவர் சந்திக்கக் கூடாது. ஏனெனில் யோஸியின் குழுவினர் தமிழர்கள். தனிநாடு கோரிப் போராடும் தமிழ்க் குழுக்களின் போராட்டத்தால் யுத்தம் தீவிரமடைய பல தமிழர்கள் தமிழ்நாட்டில் தஞ்சம் அடைகின்றனர். இந்தியாவே தமிழர்களுக்கு ஆயுதமும் பயிற்சியும் வழங்குவதாக இலங்கையரசு குற்றஞ் சாட்டுகிறது. உண்மையில் மொசாட்டையே அவர்கள் குற்றஞ்சாட்ட வேண்டும்.

அந்த கொமாண்டோ பயிற்சி நிலையத்தில் தமிழர்கள் ஊடுருவும் தந்திரோபாயம், நிலக்கண்ணி தயாரிப்பு, தொலைத் தொடர்பு, நாங்கள் அரசுக்கு வழங்கிய கடற்படைப் படகுகளை நிர்மூலமாக்குவது போன்ற துறைகளில் பயின்றனர். யோஸி தமிழர்களை ஹைபாவுக்கும், நான் சிங்களவரை டெல் அவிவுக்கும் கூட்டிச் செல்வதாகத் தீர்மானித்தோம். எனவே முகத்துக்கு முகம் தமிழர்கள் சந்திக்க வேண்டியதில்லை.

இந்த இடத்தில் பயிற்சி ஆரம்பித்த இருவார காலத்தில் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளாமலே தமிழர், சிங்களவர் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தனர். ஒருதடவை ஒட்டப் பயிற்சி பெறுகையில், இரு குழுவினரும் சிலயார் இடைவெளியில் ஒருவரை ஒருவர் கடந்து சென்றனர்.

## 'தமிழ் நாதம்'

'Radio Immigranten' *இன் தமிழ் ஒலிபரப்பான 'தமிழ் நாதம்' தற்போது ஞாயிறு தோறும் மாலை ஆறு மணிக்கு பண்பலை வரிசை* (FM) *101,1 மீற்றரில் ஒலிபரப்பாகிறது. விரைவில் புதிய நிகழ்ச்சிகளை எதிர்பாருங்கள்.*
*செய்தியாளன்*

அடிப்படைப் பயிற்சிகள் முடிந்ததும் கடற்படை முகாம் ஒன்றுக்கு சிங்களவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு, தமிழர்களுக்கு வழங்கப்பட்ட தொழினுட்பங்களை (கண்ணி, ஊடுருவல், தொலைத் தொடர்பு) எவ்வாறு வெற்றி கொள்வது எனப் பயிற்சி வழங்கப்பட்டனர்.

அமியின் இவ்வாறான நடவடிக்கைகள் (இரு குழுக்களுக்கும் ஒரே இடத்தில் பயிற்சி வழங்குவது) இரு குழுவினரும் சந்தித்திருந்தால் இஸ்ரேலின் அரசியல் நிலமைகளையே நாசமாயிருக்கும். இவ்வாறு இருதரப்பினர்க்கும் பயிற்சி வழங்கப்படுவது பற்றி (பிரதமர்) பெரஸ் அறிந்திருப்பின் இரவில் தூங்கியிருக்க மாட்டார் என உறுதியாக நம்புகிறேன். ஆனால் அவருக்கு இதுபற்றி எதுவுமே தெரியாது.

பயிற்சி மூன்றுவார காலம் முடிந்தபின் இரகசிய கடற்படைத் தளமொன்றுக்கு சிங்களவர் அழைத்துச் செல்லப்பட்டனர். அவ்விடத்தில் நிகழ்ந்த பயிற்சிக்கு, என்டமே விமானநிலையத் தாக்குதலை நிகழ்த்திய விசேட புலனாய்வுப் படையினர் பொறுப்பாக இருந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அமி கூறினார் 'இந்தியாவில் இருந்து 27 SWAT வீரர்கள் பயிற்சிக்காக வருகிறார்கள்'

'அட கடவுளே! என்ன இது? சிங்களவர்கள், தமிழர்கள், இப்போது இந்தியர்கள், அடுத்தது யார்?' என்றேன்."

ஒஸ்ரோவ்ஸ்கி போல முன்பும் பிரிட்டிஷ் உளவுத்துறை அதிகாரி ஒருவரது அனுபவங்கள் பற்றிய நூலான 'Spycatcher' அவுஸ்திரேலியாவில் வெளிவந்தபோது பிரிட்டிஷ் அரசு அதைத் தடைசெய்ய முயன்றது. தடையை வென்று வெளிவந்த Spycatcher பெருமளவில் விற்பனையாகியது. அவ்வாறே இந்த நூலும் பெருமளவில் விற்பனையாகலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இது தற்போது நோர்வே புத்தகசாலைகளில் கிடைக்கிறது●

<u>இடைவெளி</u>

*எனக்கொரு ஆசை*
*அந்தப் பூத்துக் குலுங்கும்*
*மலர்களோடு பேசவேண்டும்*
*நான் மலர்களைத் தேடிப் போகிறேன்*
*மலர்கள் எரிந்து கொண்டிருக்கின்றன.*

*எனக்கொரு ஆசை*
*ஆற்றில் இறங்கி இந்த ஆடை களைந்து*
*நீந்த வேண்டும்*
*ஆற்றைத் தேடிப் போகிறேன்*
*ஆறு திசைமாறி ஓடத் தொடங்குகிறது.*


*எனக்கொரு ஆசை*
*வெறுமையான மாலைநேர*
*நீலவானத்தில்*
*ஓடும் பஞ்சுத் தீவுகளை*
*பச்சைப் புற்றரையில் சாய்ந்திருந்து*
*காதலியின் ரோஜா இதழ்களை*
*முத்தமிட்டபடி*
*பார்த்து ரசிக்க வேண்டுமென்று.*
*வானத்தைப் பார்க்கிறேன்*
*பஞ்சுத் தீவுகள் மறைந்துபோகின்றன.*

*ஏன் என்று*
*இயற்கையைக் கேட்கிறேன்.*
*இயற்கை பேசியது*
*நான் என்றும் எங்கும் மாறி*
*மலர்ந்தும் புணர்ந்தும்*

*துளிர்த்தும் இயற்கையாய் இருக்க*
*நீயோ என்னைப் புரிந்தும்*
*நீயும் என்னுள்*
*ஒன்றே என்பதை*
*மறந்த மனிதனாய்...*

*- ச.தில்லைநடேசன் -*
*(பிரான்ஸ்)*

# நோபல் பரிசு




பலரும் எதிர்பார்த்தபடியே இம்முறை சமாதானத்திற்கான நோபல் பரிசு சோவியத் அதிபர் மிஹய்ல் கொர்பச்சேவுக்கு வழங்கப் பட்டுள்ளது. இன்றைய உலகின் அதிவேக மாற்றங்கட்கு இவரே முக்கிய காரணமாகக் கருதப்படுகிறார். இவரின் பதவிக் காலத்தில்தான் வல்லரசுகட்கிடையே ஆயுதக் குறைப்பு முயற்சி குறிப்பிடத் தக்க கட்டத்தை அடைந்தது. நவம்பர் 20ல் பாரிஸில் நிகழ்ந்த 32 நாடுகளின் சந்திப்பில் தலைவர்கள் ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இதில் மேற்கு, கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்த தலைவர்கள் கலந்து கொண்டனர். இதுபற்றி பத்திரிகைகள் கடந்த 45 வருடங்களாக நிகழ்ந்த பனிப் போர் முடிவுக்கு கொண்டுவரப் பட்டதாக பத்திரிகைகள் புகழாரம் சூட்டியுள்ளன.

இந்த ஒப்பந்தத்தை ஆழ நோக்கினால் எமக்கு ஏமாற்றமே மிஞ்சும், காரணம் ஐரோப்பாவில் அதிக ஆயுதபலம் கொண்டிருந்த வோர்சோ அணி (சோவியத் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள்) பலம் குறைக்கப்பட்டு மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பலத்துடன் சமமாக்கப் பட்டுள்ளது.

அணுவாயுதங்களும் கொலைக் கருவிகளும் தொடர்ந்தும் மிரட்டலாகவே உள்ளன. நாம் நினைப்பது போல இவ்வாயுத குறைப்பு பெரியளவில் உலக ரீதியில் சமாதானத்தை உறுதி செய்யக் கூடிய நிலையில் ஏற்படவில்லை.

இந்த ஆயுதக் குறைப்பு சமாதான ஒப்பந்தம் சகல நாடுகளின் தலைவர்களும் உள்ளடங்கிய ஒப்பந்தமாக இல்லாததால் உலக சமாதானத்தை இது உறுதி செய்யுமா என்ற கேள்வி பெரிதாக எழுகிறது. ஐரோப்பிய, அமெரிக்க தலைவர்களே இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். உலகின் ஏனைய பகுதிகளில் இருந்து எந்தத் தலைவர்களும் கலந்து கொள்ளவில்லை.

நோபல் பரிசு வழங்கும் நிகழ்ச்சி அடுத்த வருடம் வெகு சிறப்பாக நிகழ உள்ளது. காரணம் அடுத்த வருடத்துடன் நோபல் பரிசு தனது 90 ஆண்டைப் பூர்த்தி செய்யவுள்ளது.

1885ம் ஆண்டு அல்பிரட் நோபல் என்ற

செல்வந்தர் தனது பெரும் செல்வங்களை மனித குலத்தின் மேம்பாட்டுக்காக உழைப்போருக்காக பரிசாக வழங்குமாறு உயில் எழுதியிருந்தார். அதன்படி 1901 முதல் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த வருடம் பரிசு பெறும் கொர்பச்சேவ் தான் நேரடியாகக் கலந்து கொள்ள முடியாமல் இருப்பதால் அடுத்த வருடம் மே மாதம், ஒஸ்லோ வந்து பரிசைப் பெற்றுக் கொள்வதாக நோபல் பரிசுக் குழுவுக்கு எழுதியுள்ளார். எனினும் இவரது விசேட காரணங்களுக்காக பரிசளிப்பை பிற்போட பரிசுக்குழு மறுத்துள்ளது. பரிசளிப்புக்கான வைபவம் வழமை போல டிசம்பர் 10ம் திகதி ஒஸ்லோவில் நிகழும்.

அடுத்த வருடம் சிறப்பாக நிகழ உள்ள நோபல் பரிசளிப்பு சிறப்பு நிகழ்வில் சமாதானத்திற்கான பரிசு பெற்ற 22 பேர் உட்பட 200 நோபெல் பரிசாளர்கள் கலந்து கொள்வர். இவர்கள் நோர்வே பல்கலைக் கழகங்களில் சிறப்புரையாற்றுவர். இந்த நிகழ்வில் கலந்து கொள்ள பரிசு பெற்ற மூவர் மறுத்துள்ளனர்.

முன்னாள் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹென்றி கிஸிங்கர் (இவரோடு அண்மையில் காலமான வியட்னாமைச் சேர்ந்த லீ டு தோ 1973ல் பரிசு பெற்றார்), இஸ்ரேல் முன்னாள் பிரதமர் மெனாக்கிம் பெகின் (1978), வட அயர்லாந்தைச் சேர்ந்த பெட்டி வில்லியம்ஸ் (இவரோடு சேர்ந்து மய்ரிட் கொரிகனுக்கு 1976ல் வழங்கப் பட்டது) ஆகியோரே சமுகமளிக்க மறுத்து விட்டனர்.

சமாதானி

## காத்தான்குடி'90

– அந்நியன்–

என்ன?
உங்கள் ஒவ்வொருவருக்கும்
தான்
ஆயுதம் தந்தாயிற்றே.
பிறகுமென்ன?
மாறிமாறித் தலைகளைச்
சீவிக் கொள்ளுங்கள்.
ஏன் இந்த குடியிருப்புகளை
விட்டுவைத்தீர்?
யாருக்காக?
வயல்வெளிகளுக்குக்கூட
நெருப்பு வையுங்கள்.
பள்ளிவாசலும் கோயிலும்
புனிதமென்று
யார் சொன்னார்கள்?

தெறிக்கிற குருதி
குர்ஆனையும்
வேதங்களையும்
கறைப்படுத்தட்டும்.
நாகரிகம் வளர்ந்த பின்னும்
இன்னும்
மிருகங்களையா
பலியிட்டுக் கொண்டிருக்க
முடியும்?
எல்லாவற்றையும்
"அவர்கள்"
அபகரித்துக் கொள்ளும்வரை
போரிட்டுக் கொண்டிருங்கள்!
பிறகு
பூட்டிக்கொள்வர்
வண்டியின் நுகத்தில்
உங்களை
எருமைகளாய்.

நன்றி: சரிநிகர்



பல வருடங்களுக்கு முன் உயிரிழந்த இரு விடுதலைப் புலிகளின் மறைவு தினத்தை மாவீரர் தினமாக அறிவித்த புலிகள், இவ்வருடம் இதையொட்டி சிறப்பு நிகழ்ச்சிகளை வெகு விமரிசையாக ஏற்பாடு செய்திருந்தனர்.

ஒருவார காலம் இவ்விழாவைக் கொண்டாடுவதென அறிவிக்கப் பட்டிருந்தது. பலாலி முகாமின் விஸ்தரிப்புகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டபின், இந்த மாவீரர் தினவாரம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட உள்ளதாக புலிகளது தலைமையகம் அறிவித்தது. வடக்கை மையப்படுத்தித் திட்டமிடப்பட்ட இந்த மாவீரர் வாரத்தில் எல்லா வீடுகளிலும் 20ஆம் திகதிமுதல் 27ஆம் திகதிவரையும் அகல் விளக்குகளை ஏற்றும்படியும், யாழ்க் கோட்டையுள் 2000 அகல் விளக்குகளை ஏற்றும்படியும் விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர்.

மாவீரர்தின நிகழ்ச்சிகள் அறிவிக்கப் பட்டதோடு அரசு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பித்ததுடன், மக்களைக் கோயில்களுள் இருக்குமாறும் விமானத் தாக்குதல்களை நடாத்தப் போவதாகவும் அறிவித்துள்ளது.

இக் கொண்டாட்டங்கள் தொடர்பாக தற்போது கோண்டாவிலில் இயங்கும் 'தற்காலிக கல்வி அமைச்சு' (தமிழீழம்) சகல பாடசாலைகளுக்கும் சுற்று நிருபங்களை அனுப்பியுள்ளது. இதில் பாடசாலைகளும் மாணவர்களும் ஆசிரியர்களும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றிய கட்டளைகள் விளக்கப்பட்டுள்ளன.

மாவீரர் இறந்த நேரமான இரவு 12.10க்கு எல்லா ஆசிரியர்களும் மாணவர்களும் கூடவேண்டும் எனவும், அங்கு 'தேசியக் கொடி' 20அடிக்கு குறையாத உயரத்தில் பறக்கவிடப்பட வேண்டும் எனவும் இந்த சுற்றறிக்கை தெரிவிக்கிறது.

மாவீரர் தினத்துக்கு சகல மாணவ மாணவியரும் சமூகந்தர வேண்டும் எனவும், மாணவர்களும் ஆசிரியர்களும் வேட்டியுடனும், மாணவிகளும் ஆசிரியைகளும் மஞ்சள் அல்லது சிவப்பு நிறச் சேலையுடனும் வரவேண்டும் எனவும் புலிகள் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

மாவீரர் தினத்தையொட்டி மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றையும் நடாத்தவிருப்பதாக புலிகள்

அறிவித்துள்ளனர். இந்தக் கொண்டாட்டங்களுக்காக வவுனியாவுக்கு அப்பால் வீதிகள் சந்திகள் முழுவதும் சப்பறம், வாழை, தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டுள்ளன.

மாவீரர் தினந் தொடர்பாகவே பாடசாலைகள், பல்கலைக்கழகம் இயங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், கொண்டாட்டங்கள் முடிந்த பின்னர் அவை மீண்டும் மூடப்படலாம் எனவும் வடக்கே அபிப்பிராயம் ஒன்று நிலவுகிறது. தற்போது அனேக பாடசாலைகளில் மாணவர் வரவு மிகக் குறைவாகவே இருப்பதாகவும், வராத மாணவர்கள் புலிகளால் 'கவனிக்கப் படுவர்' எனவும் யாழ். மக்கள் அஞ்சுவதாக செய்திகள் வந்துள்ளன. யாழ்ப் பல்கலைக்கழகம் பெரும்பாலும் நவம்பர் 27க்குப் பின்னர் மீண்டும் மூடப்படலாம் என நம்பப்படுவதால், வடக்கில் இருந்து வெளியேறி கொழும்பில் தஞ்சமடைந்த யாழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள் எவரும் அங்கே திரும்பிச் செல்லவில்லை.

** மாவீரர் தினத்தில் தேசியக் கொடி(?)யை மறைந்த மாவீரர் ஒருவரின் மனைவி அல்லது தாயாரே ஏற்றவேண்டும் எனவும், மாவீரர் இறந்த நள்ளிரவு 12.10இற்கு மணியடித்து விளக்கேற்றி அஞ்சலி செய்ய வேண்டும் எனவும் புலிகள் உத்தரவிட்டுள்ளனர்.*

மன்னார்ப் பகுதியில் நீண்டகாலமாக வசித்து வந்த முஸ்லீம் மக்கள் அப்பகுதியை விட்டு வெளியேற்றப் படுவதற்கு, மாத்தையா கிழக்குக்குச் சென்று அங்குள்ள தமிழர்களது கஷ்டங்களைப் பார்த்தமையே காரணம் என புலிகளது உள்தகவல் ஒன்று கூறுகிறது. இந்த அவலங்களை பார்த்து மனம் பொறுக்காமல், முஸ்லீம் மக்களை வெளியேற்றும் உத்தரவை மாத்தையா பிறப்பித்ததாக தகவலறிந்த வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்துள்ளன.

இதேவேளை மன்னாரில் முஸ்லீம் மக்கள் பாதுகாப்பாக வாழமுடியும் என ரஞ்சன் கூறியுள்ளார். அங்கு 500 முஸ்லீம் ஊர்காவற் படையினர் அனுப்பப் பட்டுள்ளதாகக் கூறிய அவர், இதுவரை (19.11.90) எவரும் அங்கு திரும்பிச் செல்லவில்லை என்றார். சிலாபத் துறையில் புலிகளால் முஸ்லீம் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டதாகக் கூறிய அவர், நானாட்டான் மற்றும் கிழக்கே கொக்கட்டிச் சோலை, மண்டூர்ப் பகுதிகளில் புலிகளுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

** நல்லூருக்கு 'திலீபன் நகர்' எனப் புலிகள் பெயர் சூட்டியுள்ளதாகவும், அந்தப் பெயரைத் தாங்கிவராத கடிதங்கள் எவையும் விநியோகிக்கப்படக் கூடாதென நல்லூர் தபாற்கந்தோருக்கு அவர்கள் உத்தரவிட்டுள்ளதாகவும், யாழ்ச் செய்திகள் தெரிவிக்கின்றன.*

இலங்கையில் முதன்முறையாக புத்தளம், மன்னார் வீதியிலுள்ள திறந்த வெளியொன்றில் மார்க்க அறிஞரான மௌலவி அப்துல்லா ஆலிம் கையில் துப்பாக்கி ஏந்தியபடி ஜம்ஆ பிரசங்கம் நிகழ்த்தியுள்ளார். இடம்பெயர்ந்து வந்த அகதிகள் உட்பட 2000 பேர் இதில் பங்கேற்றனர். பெண்கள் இதில் பங்கேற்க விசேட ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. வழமையாக 'ஆசா' என்றழைக்கப்படும் கோலைப் பிடித்தபடியே நிகழ்த்தப்படும் இப்பிரசங்கம், யுத்தகாலங்களில் வாள், துப்பாக்கி ஏந்தியபடி முஸ்லீம் நாடுகளில் நிகழ்த்தப்படுவது உண்டு. ஈரானில் இயந்திரத் துப்பாக்கியும் பாவிக்கப்படுகிறது.

கிழக்கில் பல்கலைக்கழகம் மீண்டும் தொடங்கியுள்ளது. இங்கு பயிலும் 500பேரில் பாதியளவிலான முஸ்லீம்கள் ஏற்கெனவே தும்பறையில் தமது கல்வியைத் தொடர்கின்றனர்.

ஏனையோரில் வெளிமாவட்ட மாணவர்கள் தவிர்ந்த அநேகமானோர் முதல்நாள் விரிவுரைகளுக்கு வந்திருந்தனர். மட்டக்களப்பில் க.பொ.த(சா/த) பரீட்சையை நடாத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் ஷெல் தாக்குதல்கள் மீண்டும் தொடங்கியுள்ளன. கிழக்கில் தமிழ்ப் பகுதிகளில் அரச படைகளது ஆதரவுடன் ரெலோ இயங்குகிறது. திருக்கோயில் வீரமுனைப் பகுதிகளின் பாதுகாப்பு இவர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

** துணுக்காய்ப் பகுதியில் இயங்கிய புலிகளது தடைமுகாம் சாவகச்சேரிக்கு மாற்றப் பட்டுள்ளதாகவும், தடைமுகாம்களில் இருக்கும் 'தீவிர' கைதிகள் பதுங்கு குழிகளிலேயே நிரந்தரமாக பேணப்படுவதாகவும், இயற்கை உபாதைகளுக்கு பொலித்தீன் பைகள் வழங்கப்படுவதாகவும் ஒரு செய்தித்தாபனம் அறிவித்துள்ளது. நான்கு பிணையாளர்களை சமர்ப்பித்த சிலர், இந்தச் சிறைகளில் இருந்து விடுவிக்கப் பட்டதாகவும், விடுதலையானோர் தலைமறைவானால் பிணையாளரின் சொத்துகளில் 40% புலிகளால் அபகரிக்கப்படும் எனவும் அந்தச் செய்தித்தாபனம் கூறியுள்ளது. விடுதலை செய்யப்பட்டோர், முகாம்களில் நிகழும் சித்திரவதைபற்றி எதுவும் பேசக்கூடாது என எச்சரிக்கப் பட்டுள்ளனர்.*

கிழக்கில் முஸ்லீம்களுக்கு தனிக் கவுன்ஸில் என்பது உட்பட வடக்கு-கிழக்கு இணைப்பை ஈபிடிபி தவிர்ந்த தமிழ்- முஸ்லீம் கட்சிகள் ஏற்றுக் கொண்டுள்ளன. இந்த நிலைப்பாட்டை சர்வகட்சி மாநாடு அங்கீகரிக்கும் என நம்பப்படுகிறது. ஐ.தே.க. செயற்குழுக் கூட்டத்தில் தமிழ்க் குழுக்களுடன் பேச்சுவார்த்தை, வடக்கு- கிழக்கு இணைப்பு, ஆறாவது திருத்தச்சட்ட நீக்கம் போன்ற முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டதாக நம்பப்படுகிறது.

** புளொட் இயக்கத்தின் முன்னாள் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான வாமதேவா பம்பாயில் போதைப் பொருள் தடுப்புப் பொலீசாரால் கைதுசெய்யப் பட்டுள்ளார். இவர் கைதானபோது இவரிடம் 1.4கி.கி. ஹெரோயின் இருந்தது. முன்னர் செங்கலடி வங்கிக் கொள்ளை மற்றும் பொலீஸ் நிலையத் தாக்குதல்கள் தொடர்பாக கைதான வாமதேவா, சிறையிலிருந்து நூறுபேருடன் தப்பியமை குறிப்பிடத்தக்கது.*

** முல்லைத்தீவில் நிகழ்ந்த பொதுக்கூட்டம் ஒன்றில், எல்லா இளைஞர்களும் புலிகளின்கீழ் கட்டாய இராணுவப் பயிற்சி பெறவேண்டும் என புலிகளது முள்ளியவளை அரசியற் பொறுப்பாளர் பிரசாத் கூறியதாக ஈபிடிபி அறிவித்துள்ளது.*

** கிழக்கின் தமிழ் அகதிகள் முகாம்களைவிட்டு வெளியேறி சொந்த இடங்களுக்குச் செல்லவேண்டும் என புலிகளால் பணிக்கப்பட்டதாக கொழும்புத் தமிழ்க் குழுக்கள் சில கூறியுள்ளன.*

** மொசாட்டிடம் பயிற்சிபெற்ற தமிழ்க்குழு புலிகளே என கொழும்பில் பலரும் பேசிக் கொள்கின்றனர். ஆனால் இன்றுவரை புலிகள் இதனை மறுத்தோ, வேறு அமைப்புகளைச் சாட்டியோ அறிக்கை விட்டதாகத் தெரியவில்லை.*

** மட்டக்களப்பு வாவிக்கு மேற்கே காட்டுப்புறமாக மயிலவட்டுவான், தீவிவட்டை போன்ற இடங்களில் ஒரே இரவில் 10அகதிகள் பாம்புதீண்டி இறந்துள்ளனர்.*

ஈபிடிபி, ரெலோ, புளொட் அமைப்புகள் அரசுடன் தற்போதைட யுத்தத்தில் நேரடியாக ஒத்துழைக்கின்றன. ஈபிஆர்எல்எஃவ் ஒத்துழைக்கிறதா என ரஞ்சனிடம் கேட்கப்பட்டபோது "இல்லை, அவர்கள் என்னை சொற்களால் தாக்குகின்றனர்" என அவர் கூறியுள்ளார்.

நீண்டகால இடைவெளிக்குப் பின் இயங்க ஆரம்பித்த யாழ் வைத்தியசாலை மீது விமானக் குண்டுவீச்சு நடாத்தப்பட்டதை மறுத்துள்ள அமைச்சர் ரஞ்சன் அதற்கு அருகில் வீழ்ந்த குண்டினாலேயே கண்ணாடிகள் உடைந்ததாகக் கூறியுள்ளார். இக் குண்டுவீச்சை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் கண்டித்திருந்தது. தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் நிர்வகிக்கப் பட்டுவரும் இவ் வைத்தியசாலையில் வாாட்டுகளின் எண்ணிக்கை 26இல் இருந்து 30ஆக அதிகரிக்கப் பட்டுள்ளது. ஏறத்தாழ 2000 வெளிநோயாளர்கள் அங்கு சிகிச்சை பெறுவதாகவும், நீர், மின்சாரம், மருந்து போன்றவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும், போதிய இரத்தம் கையிருப்பில் இல்லை எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ்நகரில் முஸ்லீம்கள் வெளியேறிய பகுதிகளுக்குள் எவரும் செல்ல முடியாதென புலிகள் தடை விதித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் தபாற் கந்தோர், வங்கிகள், அரச அலுவலகங்கள் ஓரளவு இயங்கத் தொடங்கியுள்ளன. போக்குவரத்து பெரும்பாலும் சைக்கிள், மாண்டுவண்டியாலேயே நிகழ்த்தப்படுகிறது. ஒரு போத்தல் மண்ணெண்ணெயின் விலை 20ரூபாவாக இறங்கியுள்ளது.

தற்போதைய யுத்த சூழலில் இலங்கையில் புலிகளும் அரசும் நேரடியாக பேசமுடியாது இருப்பதால், மேற்கு நாடொன்றின் தலைநகரில் (லண்டன் என்றே நம்பப்படுகிறது) புலிகளுடன் அரசு இரகசியப் பேச்சு நடாத்துவதாக சில உத்தியோகப் பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்காகவே அமைச்சர் ஹமீது இருவார காலம் 'வெளிநாடு' சென்றுள்ளதாக நம்பப்படுகிறது. இந்த விஜயத்தை உத்தியோகப் பற்றற்ற விஜயம் என்றே அரச வட்டாரங்கள் கூறியுள்ளன.

தற்போது இந்தியாவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் இலங்கை அரசையும், புலிகளையும் ஒரே சமயத்தில் பாதித்துள்ளது. காங்கிரசின் பொம்மை அரசாக விளங்கும் சந்திரசேகர் அரசு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் காங்கிரசின்

## கடைசியாக.......

கடைசியாக மாங்குளத்தில் நிகழ்ந்த மோதலில் மாங்குளம் அரச படைகளின் முகாம் புலிகளால் தகர்க்கப்பட்டுள்ளது. இந்த மோதலில் இருநூறு படையினரும், நூறு புலிகளும் கொல்லப் பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சுயாதீனமாக பத்திரிகையாளர்கள் செய்தி பெற முடியாததால் இரு தரப்பினதும் இழப்புகள் பற்றி வெவ்வேறான தகவல்கள் வெளியாகியுள்ளன. முகாமில் இருந்து தப்பி ஓடிய சில படையினரை அரசு ஹெலிகள் மூலம் மீட்டுள்ளது.

அரச படைகள் வெளியேறிய யாழ் கோட்டையை புலிகள் குண்டு வைத்துத் தகர்த்து வருகின்றனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

கொள்கைகளையே பிரதிபலிக்கும் என இந்தியப் பத்திரிகைகள் அனைத்தும் தெரிவிக்கின்றன. கடந்த காலங்களில் வி.பி.சிங் அரசு, தமிழீழப் பிரச்சனையை கருணாநிதி ஊடாகவே கையாண்டது. தற்போதைய மத்திய அரசு கருணாநிதியுடன் நல்லுறவைக் கொண்டிராததால் 'போராளிகள் விவகாரம்' கருணாநிதியால் கையாளப்படுவதை விரும்பாது. அண்மையில் கிழக்குப் பிராந்தியத் தளபதியாய் இருந்து பதவி உயர்வு பெறும் அட்மிரல் ராம்தாஸ் தமிழக அரசால் கைதாகும் போராளிகள் பலர் தண்டிக்கப் படாமலே விடுவிக்கப் படுகின்றனர் எனக் குற்றம் சாட்டியிருந்ததும், வி.பி.சிங் அரசின் இலங்கை தொடர்பான நடைமுறையில் இருந்து தற்போதைய அரசு மாறவேண்டும் என தமிழக காங்கிரஸ் உறுப்பினர் சிலர் குரல் கொடுத்ததும் இங்கு குறிப்பிடத் தக்கது. மறுபுறத்தில், தமது பதவிக் காலத்தில் இலங்கையில் தமது படையினருக்கும், தமது ராஜதந்திரத்துக்கும் ஏற்பட்ட இழப்புகளுக்கு இப்போதைய அரசை வைத்தே நிவாரணம் தேட காங்கிரஸ் முயலக்கூடும்.

## தமிழில் HISTORIOGRAPHY

பால் வெளித் தொகுதி
இலட்சம் கோடி சூரியர்கள்

எமது சூரியனிற்குச் சொந்தமான
இந்தப் பூமிக் கிரகம்

யுகங்களாகக் கணித்ததில்
4,32,000 வருடங்கள் உடைத்தாய
இக் கலியுகத்தில்

இலங்கை
மூன்றாம் உலக நாடுகளிலொன்று.

யாழ்ப்பாணம் கோட்டையிலிருந்து
சோழர் காலத்தை
மீட்க முயன்றதில்

மன்னர்கள் பிழைக்க
மனிதர்கள்
இறந்து போயினர்.

● சுகன் ●

நன்றி: தூண்டில்

கடந்தமாத சுவடுகளில் இடம்பெற்ற, நோர்வே பத்திரிகைகளில் வெளிவந்த 'தமிழர்கள் மாபியாப் பாணியில் பணம் சேர்க்கின்றனர்' என்ற கட்டுரை தொடர்பாகவும், அதற்கு விளக்கங் கொடுக்கும் வகையில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் த.சர்வேந்திரா கொடுத்த விளக்கத்தையும் இங்கே கருத்தில் எடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

வெளிநாடுகளிலே, அதுவும் பொதுவாக ஐரோப்பா, கனடாவிலே புலிகளுக்கு எதிரானவர்கள் அல்லது புலிகளுக்கு எதிரான மாற்றுக் கருத்துடைய சிலர் புலிகளுக்குப் பணம் கொடுக்காததால் மிரட்டப்பட்டுள்ளனர். இவ்விடயத்தை பாதிப்புக்குள்ளான சிலர் தனிப்பட்ட ரீதியில் பலரிடமும் தெரிவித்துள்ளனர். ஆனால் வெளிப்படையாகக் கூறின் நாட்டிலுள்ள தமது குடும்பங்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற பயங் காரணமாக மறைத்துள்ளனர். இவ்விடயத்தை அல்ரா அகதிகள் தொடர்பாளர்கூட வெளிப்படையாகக் கூறியுள்ளார். புலிகளை வெறுப்பவர்கள், புலிகள் மிரட்டிப் பணம் சேகரிக்கிறார்கள் என்ற பொய்ச் சேதியை பரப்ப வாய்ப்புகள் உண்டு. அதேசமயம் புலிகள் மிரட்டவும் வாய்ப்புண்டு. தற்சமயம் நோர்த் நோர்வேயில் புலிகள் மிரட்டிப் பணம் சேகரித்தனர் என்பதை நம்புவதற்கான காரணிகள் மிகக் குறைவே. புலிகள் மீதான எதிர்ப்புணர்வு காரணமாக இச்சேதி பரப்பப்பட்டது, அல்லது புலிகளது கொள்கைக்கு முரணானவர்களால் இச்சேதி பரப்பப்பட்டது என்பதை உண்மை என்று வைத்தால், அதை தகுந்த முறையில் விளங்கப்படுத்த புலிகளால், அல்லது புலிகளது ஆதரவாளர்களால் முடியவில்லை என்பதை நினைக்க விகடமாக உள்ளது. பத்திரிகைகளில் வந்த செய்திக்கு விளக்கங் கொடுக்கும் வகையில் ஒஸ்லோ தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த த.சர்வேந்திரா சுவடுகளுக்கு அளித்த பேட்டியில், இப் பொய்ச்சேதியைப் பரப்பியோர் யார் என்பதைத் தெளிவுபடுத்துப் பயன்படுத்திய சொற்றொடர்கள் வருமாறு. அதாவது, தமிழ்மக்களது சுயஉரிமைப் போராட்டத்தை நசுக்க முற்படும் ஸ்ரீலங்கா அரசு, சுயஉரிமைப் போராட்டத்துக்காக விட்டுக் கொடுப்பற்ற போராட்டத்தை நடத்தும் விடுதலைப் புலிகளை சர்வதேச ரீதியில் களங்கப்படுத்தவும், விடுதலைப் புலிகளது சர்வதேச செயற்பாடுகளை முறியடிக்கும் வகையில் மேற்கொண்டுவரும் சதிநடவடிக்கைகளின் ஓரங்கம் என வர்ணித்திருந்தார். ஆக மொத்தம் தமிழ்மக்களுக்குள் ஏற்பட்டிருக்கும் (தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அங்கமேற்ற விடுதலைக் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்டிருக்கும்) மோதல்கள், முரண்பாடுகளால் விளைந்ததே இது என்பதைத் தெளிவுபடுத்த இவர்களால் இயலவில்லை. இதற்காக இவர்கள் தற்சமயம் இலங்கை அரசை இதற்குள் இழுத்து தப்பித்துக்கொள்ள

நினைக்கிறார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

இன்று புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல்கள் காரணமாக, ஒருபுறம் இலங்கை அரசால் புலிகளை அழிக்கின்றோம் என்ற போர்வையில் மக்கள்மீது மேற்கொள்ளப்படும் காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்களும், மறுபுறம் புலிகளால் மேற்கொள்ளப்படும் மக்கள் மீதான ஜனநாயக மறுப்புகளும் இலங்கையில் வாழும் தமிழ் மக்களையும் வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களையும் அதிருப்தியுற வைத்துள்ளது என்பதே உண்மை. இதன் தாக்கத்தின் ஒரு வடிவம்தான் புலிகள் மிரட்டிப் பணம் சேகரிக்கிறார்கள் என்ற செய்தி பத்திரிகைகளில் பிரசுரமாவதற்கு ஏதுவாக அமைந்திருக்கலாம் என்று கருதலாம். இதன் அடிப்படையில்தான் நாம் இப்பிரச்சனையை நோக்க வேண்டும். புலிகள் நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் வன்முறையைக் கையாளுகிறார்கள் என்பதைப் பல இடங்களில் நிரூபித்துள்ளனர். இவற்றுள் குறிப்பாக நெதர்லாந்தில் ஒரு மனிதவுரிமை அமைப்பைச் சேர்ந்த தமிழர் ஒருவர் புலிகளால் மிரட்டப்பட்டு அமைப்பைக் கலைக்கவேண்டிய சூழலுக்கு ஆளானதும், கனடாவில் தாயகம் பத்திரிகையாளர்கள் அடிக்கடி மிரட்டலுக்கு உள்ளாவதும் தாக்குதலுக்கு உள்ளாவதும், 1986/ 87 காலப்பகுதிகளில் மேற்கு ஜேர்மனியில் தமக்கு வேண்டாதவர்களை புலிகள் வான்களில் ஏற்றிச் சென்று தாக்கியும், அவர்களது வீடுகளுக்குள் சென்று தாக்கியும், தொலைபேசி மிரட்டல்களை மேற்கொண்டும் வந்தனர். இதன் காரணமாக ஜேர்மனியில் புலிகளது நடவடிக்கைகளை அந்நாட்டு அரசு கட்டுப்படுத்தியமையையும், புலிகளது ஆதரவாளர்களது வதிவிட அனுமதிகள் பறிமுதல் செய்யப்பட்டதும் சிலர் இன்னும் சிறைக்குள் இருப்பதையும் இங்கே நினைவு கூரலாம். புலிகளது ஜனநாயக விரோத நடவடிக்கைகள் காரணமாக பல மேற்கு நாடுகளிலே தமிழர்கள் என்றால் பொல்லாதவர்கள் என்ற கருத்தைத் தோற்றுவித்துள்ளது. நோர்த் நோர்வேயிலே புலிகள் மிரட்டிப் பணம் சேகரித்தனர் என்ற செய்தி பல பத்திரிகைகளிலும் வெளியானபின் அதைப் பார்த்த நோர்வேஜியர்கள் பலரும் தமக்குத் தெரிந்த தமிழர்களைப் பார்த்து "Er du tiger?" (அதாவது, நீ புலியா?) என்று நையாண்டிகள் விட்டார்களாம். இதைப் பல தமிழர்களும் கூறியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எமக்கு எல்லா நாட்டு மக்களது அனுதாபமும் ஆதரவும் தேவை. அதை விடுத்து அவர்கள் எம்மீது அதிருப்தியும் ஆத்திரமும் கொள்ளும் நடவடிக்கைகளில் நாம் இறங்கினால் அது எமக்கு பாதகமான சூழ்நிலைகளையே உருவாக்கும் என்பதை இனியாவது புலிகள் கருத்திற் கொள்வார்களா?

– தீபன் –
ஒஸ்லோ

சுவடுகளுக்கு அனுப்பப்படும் படைப்புகள் பிரசுரிக்கப் படாதவிடத்து அவை திருப்பி அனுப்புவதில் உள்ள நடைமுறைச் சிக்கல் காரணமாக எம்மால் அவற்றைத் திருப்பி அனுப்ப முடிவதில்லை. படைப்புகளை அனுப்பும் வாசகர்கள் தம்முடன் ஒரு பிரதியை வைத்திருக்குமாறு வேண்டுகிறோம்.

சுவடுகள்

NAME OF 'REISEHUSET' WHICH HAS LATEST EQUIPMENT TO MAKE YOUR TRAVEL EASIER, CHEAPER, COMFORTABLE AND TIME SAVING WITH SPECIALLY TRAINED AND EXPERIENCED STAFF.

# REISEHUSET
TRAVEL AGENCY

## GATE WAY TO

- COLOMBO
- MALE
- MADRAS
- TRIVANTRAM
- TIRUCHI
- FAR EAST AND AUSTRALIA

**REISEHUSET**
TRAVEL AGENCY

RAM PARTAP
Managing Director

Calmeyersgate 13
0183 Oslo 1
Norway

Tlf. (02) 36 27 50
Fax. (02) 36 45 04
Tlx. 79819 REISE N

எயர் லங்காவின் 1989ம் ஆண்டிற்கான சிறந்த முகவர் விருதினைப் பெற்ற

REISEHUSET
TRAVEL AGENCY

* தாய் நாட்டிற்கோ அல்லது தென்னிந்தியாவுக்கோ (மெட்ரூஸ், திருச்சி, திருவனந்தபுரம்) பயணம் செய்யும் இலங்கையர்க்கு விசேட கழிவுபெற்ற பிரயாணச் சீட்டு வழங்குகிறோம்.

* ஒருவழிப் பயணத்துக்கும் (One way) விசேட கழிவுண்டு.

* உங்களின் சௌகரியமான பயணமே எமது நோக்கம்.

AIRLANKA
*It's a taste of Paradise*

- என்.எஸ்.எம்.ராமையா -

# ஒரு கூடைக் கொழுந்து

நன்றி: ஒரு கூடைக் கொழுந்து (வைகறை பிரசுரம்)

"அக்கா! எனக்கு எது நெறை?"

கொழுந்து இல்லாத கூடையின் தலைக்கயிறு தோள் வழியாக இடது கைக்குள் அடங்கியிருக்க, வெற்றுக் கூடை முதுகில் அசைந்து கொண்டிருந்தது. லெட்சுமியின் கேள்வி யார் காதில் விழுந்ததோ என்னவோ? பதிலே இல்லை. மற்றநாட்களாக இருந்தால் அந்த "வயசுப் பெண்கள்" குழுவினர் அவளை ஆளுக்கொரு பக்கமாக இழுப்பார்கள்.

"இங்கே வாடி லெட்சுமி! என்கிட்டே நிறை தாறேன்"

"ஐயோ லெட்சுமிக் குட்டி! என்கிட்டே நிறகட்டுண்டி"

நாலா பக்கத்திலிருந்தும் வரும் அழைப்பைக் கண்டு அவள் அரிசிப்பல் தெரியச் சிரிப்பாள். அவளுக்குச் சற்று கர்வமாகக்கூட, இவ்வளவு கிராக்கியா என்று.

அப்படிப் பட்டவங்கள் இன்று ஒரே மௌனம் அனுட்டித்தனர். எதற்கு இந்த மௌனம் என்று புரியாமல் அவர்கள் முகத்தைப் பார்த்தாள் லெட்சுமி. நிறை பிடித்துக் கொண்டுநின்ற அவளுடைய "செட்டு"கள் எல்லாம் சொல்லி வைத்தாற்போல முகத்தை ஒருமாதிரியாக தூக்கி வைத்துக் கொண்டு- கொந்தராப்புக் காசும் கொழுந்துக் காசுமாக "முதல் நம்பர்ச் சம்பளம்" வாங்குபவளை எரிச்சலோடு பார்க்கும் பிள்ளைக்காரி மாதிரி- ஓரப்பார்வை பார்ப்பதைக் கண்டதும் அவளுக்கு எரிச்சலாகக்கூட வந்தது.

"என்னடி ஆத்தா உங்களுக்கு வந்த வாழ்வு?" என்று ஒரு வெட்டுவிட்டுக் கடைசித் தொங்கலில் நிறைபோட்டுக் கொண்டிருந்த கங்காணிக் கிழவனிடம் போனாள்.

"கங்காணி அப்பச்சி! எனக்கு... "

வழக்கமாக அவளைக் கண்டதும், இருக்கும் இரண்டு முன்பற்களும் தெரியச் சிரித்தவாறு "என்ன ஆயி! இப்பத்தான் வாறியா? போ... போ... முப்பத்திரண்டாவது நிறை உனக்கு. ஐயா வர்றதுக்குள்ளை ஓடு" என்று கனியும்... கிழவன்கூட இன்றைக்கு சடசடத்தான். "வாறாக, தொரைச்சாணி அம்மா! வாங்க இப்பத்தான் விடிஞ்சதோ? முகறையைப் பாரு! நேரம் என்ன ஆவுது? சுணங்கிவாற ஆளுக்கு ஏன் வேலை கொடுத்தேன்னு 'நொப்பான்' குதிப்பதே! நீயா 'வதிலு' சொல்லுவே?"

விடியற்காலை வேளையிலே இப்படி வாங்கிக்கட்ட வேண்டி இருக்கிறதே என்று அவளுக்கு அங்கலாய்ப்பாக இருந்தது. ஆனால் கணக்குப்பிள்ளை 'ஐயா'விடமும் கங்காணியிடமும் அதைக் காட்டிக்கொள்ள முடியுமா? அப்புறம் தப்புவதாவது!

"சரி... சரி... அப்பச்சி! காலங் காத்தாலே பேசாதீங்க! என்னமோ, என்னைக்கும் போலே மத்தக் குட்டிக நெறை புடிச்சிருப்பாளுகவென்னு நெனைச்சேன். அவகளுக்கெல்லாம் இன்னைக்கு என்னமோ வந்திரிச்சு!"

"நீங்க பண்ணுற காரியங்களுக்கு நிறைவேறே புடிச்சுத் தருவாங்களோ?"- கங்காணிக் கிழவன் எரிந்து விழுந்தான். "தொலைஞ்சு போ! கடேசித் தொங்கலுக்கு"

கீழே இறக்கி வைக்கப்பட்ட வெற்றுக்கூடை மீண்டும் முதுகுக்குத் தாவியது. கடைசி நிறைக்குப் போய்க்கொண்டிருந்த லெட்சுமியின் பருவத்துப் பின்னழகை அந்தக் கூடையோ, சேலைமேல் கட்டியிருந்த முரட்டுப் படங்குச் சாக்கோ மறைக்கவில்லை.

வழக்கமாக கொஞ்சம் அதிகமாகவே இறாத்தல் போட விரும்பும் எடுவைக் காரிகள் முதல் தொங்கல், கடைசித் தொங்கலுக்கு போவதே இல்லை.

முதல் தொங்கல் என்றால் ஒழுங்கான நிறை

கிடையாது. எல்லாம் குறை நிறைகளாக ஆயிரந் தடவை ஏறியிறங்க வேண்டும். கடைசித் தொங்கல் என்றால் பிள்ளைக் காரிகளோடு 'மாரடிக்க' முடியாது. ஆடியசைந்து அம்மன் பவனிவருவதுபோல் எட்டு மணிக்குத்தான் வருவார்கள். ஒருமணி! நேரம் ஏதோ பெயருக்கு நாலைந்து இறாத்தலை எடுத்துவிட்டு ஒன்பது மணிக்கெல்லாம் "அடியே! எங்கொழுந்தையும் நிறுத்துர்றீ..." என்று பல்லைக் காட்டிவிட்டு லயத்துக்கோ பிள்ளைக் காம்பிராவுக்கோ போய்விடுவார்கள். அவர்களுடைய கொழுந்தையும் நிறுத்துக் கொள்ள வேண்டும்; கூடையையும் பார்த்துக் கொள்ள வேண்டும். போதாத குறைக்கு அவர்களுடைய நிறையையும் சேர்த்து எடுத்துப் போகவேண்டும். இந்தத் தொல்லைகளுக்காகத் தான் அவள் அங்குமிங்கும் போவதில்லை. அவளுடைய கலகலத்த சுபாவமும் எளிமையான அழகும் மற்றப் பெண்களுக்கு மத்தியில் ஒரு தனித்துவத்தை ஏற்படுத்தியிருந்தன. ஆகவே அவளை மற்றப் பெண்களும் போகவிடுவதில்லை. ஆனால் இன்றோ?

"ஆமாம்! இந்தப் 'பொட்டச்சிகளுக்கு' இன்னைக்கு என்ன வந்தது?" கடைசி நிறைக்கு வந்து நின்றாள். அந்த மலையிலேயே கடைசிநிறை. எல்லோரும் சேர்ந்து ஏதோ அவளை மட்டும் ஒதுக்கிவிட்டது போன்ற தனிமை உணர்வு மனதைப் பிழிய, கூடையை இறக்கிவைத்து, இடையில் கட்டியிருந்த படங்குச் சாக்கை அவிழ்த்து சேலையை சற்று முழங்காலுக்கு மேலே தூக்கி- இல்லாவிடில் தேயிலைச் செடி கிழித்துவிடுமே!-"

மீண்டும் படங்கைச் சுற்றிக் கட்டினாள். கறுப்புநிறக் கயிறு அரைஞாண் கயிறு மாதிரி இடுப்பைச் சுற்றி வளைத்தது. கூடைக்குள்



இருந்த தலைத்துண்டை உதறி, நெற்றியில் பூசிய இரட்டைக்கோடு விபூதி அழியாமல் தலையில் போட்டுக் கொண்டு, கூடைக் கயிற்றையும் தலையில் மாட்டிக் கொண்டாள். கடைசியாக பக்கத்தில் தொங்கிக் கொண்டிருந்த தலைத்துண்டின் பகுதிகளை கயிற்றை மறைப்பதுபோல் மடித்து கயிற்றுக்குமேல் போட்டுக் கொண்டாள். ஆயிற்று நிறைக்குத் தயார்!

அப்போதுதான் அவளைக் கவனித்த பக்கத்து நிறைக்கிழவி தன் பொக்கைவாயைப் பிளந்தாள்.

"என்னடி ஆயா அதிசயமா இருக்கு! என்ன இந்தப் பக்கமா காத்து வீசது!"

கிழவியை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, சூள்கொட்டிக் கொண்டாள்.

"என்னடி குட்டி கேக்குறேன் ச்சுங்கிறே?"

"ஒண்ணுமில்லே அம்மாயி! சும்மாதான் உந்தேன்"

"ஆயாயே! பொல்லாதவதான். சும்மா கூடவர்ற ஆளு இல்லே நீ, என்னதான் நடந்தது?"

லெட்சுமிக்குக் கோபம் வந்துவிட்டது.

"ஒப்புராணை! ஒண்ணுமில்லேங்கிறேன்"

"சரி... சரி... காலங்காத்தாலே ஆணையிடாதே"

மௌனமாகத் தேயிலைச் செடியைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு, பனியில் நனைந்து நின்ற கொழுந்துகளைக் கிள்ளத் தொடங்கினாள் லெட்சுமி. இரண்டு வீச்சிலே இரண்டுகையும் நிறைந்து விட்டது. காம்புப் பகுதியைத் திரும்பிப் பார்த்தாள். அப்போதுதான் கிழவி ஒவ்வொன்றாக மெல்ல மெல்லக் கிள்ளிக் கொண்டிருந்தாள். காலைப் பனிக்கும், குளிருக்கும் அவள் கரங்கள் நடுநடுங்கிக் கொண்டிருந்தன.

"அம்மாயி! பொலி சொல்றியா, கொழுந்தைப் போட்டுக்கிர்றேன்... " முதல்பிடிக் கொழுந்தைக் கூடைக்குள் போடும்போது 'பொலி' சொல்வது ஒரு மரபு. சகுனம் பார்ப்பது மாதிரி! கிழவி 'பொலி' சொன்னாள்.

"போடு அப்பனே, சம்முகா! பொலியே... பொலி... பொலி... பொலி..."

லெட்சுமிக்குக் கை வேகமாக விழத்துவங்கியது. பங்குனிமாதப் பச்சை பார்ப்பதற்கே ஓர் அழகு. எடுத்து வெறி கண்டவர்களுக்கோ, அது ஓர் இன்பபோதைதரும் விளையாட்டு. இளந்தளிர்கள் 'சடசட'வென ஒடிந்து கொண்டிருந்தன. ஆனால் இன்பப் போதையோடு அல்ல! மனதுக்குள்ளே சிநேகிதிகளின் பாராமுகமும் வண்டாக அரித்துக் கொண்டிருந்தது. அதற்கான காரணம் அந்திக்கொழுந்து அறுக்கும்போதுதான் அவளுக்குத் தெரிந்தது.

* * *

மாலை நாலுமணி சங்கு ஊதியதும் நிறையிலிருந்து இறங்கி அந்தி வெயிலில் உடல் வியர்வையால் புழுங்க எல்லா ஆட்களும் ஸ்டோருக்கு முன்னால் வந்து குழுமினார்கள். கூடையை இறக்கி வைத்துவிட்டுத் தலைத்துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள் லெட்சுமி. கூடையில் பொங்கி எழும்பி நின்ற கொழுந்தை ஐந்துவிரல்களும் விரிய உள்ளங்கையால் அமுக்கிவிட்டுக் கொண்டாள். பெரும்பாலும் எல்லா ஆட்களும் வந்தாயிற்று என்று தெரிந்தவுடன் கங்காணி பணிவாக- முதுகு கூன- கணக்கப்பிள்ளை ஐயாவிடம் போய் "ஆளுக எல்லாம் வந்திருச்சி! நிறுக்கலாந் தானுகளே!" என்று மெதுவாக விழுங்கிக்கொண்டு கேட்டான்.

செக்ரோல் புத்தகத்தில் ஏதோ கணக்குப் பார்த்துக் கொண்டிருந்த கணக்கப்பிள்ளை ஐயா நிமிர்ந்து "லேபர்" கூட்டத்தைப் பார்த்தார். எல்லோரும் வரிசையாகக் கூடையை வைத்துக்கொண்டு நின்றார்கள். விரிக்கப்பட்டுக் கிடந்த படங்குச் சாக்குக்கு முன்னால் போய் நின்று கொண்டார். தராசு மரம் வந்தது. தட்டுக் கூடை வந்தது. நாலு பெண்களும் வந்தார்கள், தராசுமரம் பிடிக்கவும் தட்டுக்கொட்டவும், ஆயிற்று. நிறுக்க வேண்டியதுதான். அப்போதுதான் ஏதோ ஞாபகம் வந்ததுபோல் 'ஐயா' ஒதுங்கி ஆட்களுக்கு முன்னால் வந்துநின்றார். அவர் அரைந்து வந்துநின்ற தோரணையும், ஆட்களைப் பார்த்த விதமும் ஏதோ தவறுதலாக கறுப்பாகப் பிறந்துவிட்ட வெள்ளைக்காரனைப் போலிருந்தது. பேச்சுங்கூட சுத்தத் தமிழாக இருக்காது. வெள்ளைத்துரை ஒருவன் சிரமப்பட்டு 'டமில்' பேசுவது போலிருக்கும். நாமாக இருந்தால் சிரித்திருப்போம். 'அது'கள் 'லேபர்' கூட்டந்தானே? என்ன தெரியும் அந்தக் 'கண்ட்றி'களுக்கு? 'அது'களுக்கு முன்னால் இப்படி ஐபர்தஸ்து பண்ணுவதில் ஒருசில விடலைப் பிள்ளைகளுக்கு என்னமோ ஒரு 'இது'!

ஆட்கள் எல்லோரையும் அலட்சியத்துடன்

ஒருமுறை பார்த்தார் ஐயா. வலதுபுறத்தில் இருந்து நேராக ஓடி வந்துகொண்டிருந்த பார்வை லெட்சுமியிடம் வந்ததும் சற்று நின்று மேலுங் கீழுமாக ஓடியது. பிறகு கங்காணி பக்கந் திரும்பி "கங்காணி" என்று கூப்பிட்டார். அதுவரை அவரின் செயலைக் கவனித்துக் கொண்டு என்னவோ ஏதோ என்று நின்ற கங்காணி ஓடிவந்து "ஐயா" என்றான். ஐயாப் பட்டம் போடும்போது ஏன்தான் முதுகு கூனுகிறதோ?

"லெட்சுமியை வரச் சொல்லுங்க"

கிழவனுக்கு விஷயம் புரிந்து விட்டது. லெட்சுமியை அனுதாபத்தோடு பார்த்துவிட்டு உரத்துச் சத்தமிட்டான்.

"இந்தா ஆயி! இப்பிடி வா. ஐயா கூப்பிடுறாரு..." லெட்சுமிக்கு பயத்தால் குடல் மார்புவரை ஏறி இறங்கியது.

"நானா அப்பச்சி?"

"ஆமாங்கிறேன்..."

லெட்சுமி வாய்க்குள்ளே பயத்தால் முனகிக் கொண்டாள்.

"ஐயோ! என்னா எழவு இது!"- ஏற்கெனவே வெயிலில் கன்றிப் போயிருந்த அவளது முகம் இப்போது பயத்தால் கூம்பியது. அந்தப் பெரிய கூட்டத்துக்கு முன்னால் உடம்பெல்லாம் கூசிக்குறுக வந்துநின்றாள். கைகளைப் பின்புறமாகக் கட்டி வலது குதிக்காலை ஊன்றி கட்டை விரலினால் தரையில் அரைவட்டம் வரைந்து கொண்டிருந்த கணக்கப்பிள்ளை ஏறிட்டு லெட்சுமியைப் பார்த்தார். லெட்சுமி தலைகுனிந்து கொண்டாள்.

"லெச்சுமி"

"ஏன்ங்க" - அவள் பார்வை சற்று மேலேறியிறங்கியது.

"நாலைஞ்சு நாளைக்கு முந்தி இருபத்தைஞ்சாம் நம்பர் மலையிலே கொழுந்து எடுத்தாயே, அன்னைக்கு நீ ஒரு மணிக்கு எத்தனை றாத்தல் எடுத்தே...?"

தனக்குள் இருந்த நினைவு மெல்ல வெளிவந்தது ஆம், ஐம்பத்தி ஏழு.

"அம்பத்தி ஏழுங்க"

"அம்பத்தி ஏழா? நான்கூட மறந்துட்டேன். ஆனா ஆளுக மறக்கமாட்டாக போல இருக்கு..." பொறுப்புக் கலந்த ஒரு பார்வை ஆட்கள்மீது ஓடியது.

"லெச்சுமி இன்னொரு முறை, அதேமாதிரி, ஒன்பது மணிக்கும் ஒருமணிக்கும் ஊடே அம்பத்தி ஏழு றாத்தல் எடுத்துக்காட்ட முடியுமா?"

லெட்சுமியின் புருவங்கள் கேள்விக்குறியாக வளைந்தன. மீண்டும் அதேமாதிரி ஐம்பத்தி ஏழு இறாத்தலா ஏன்...? எதற்காக...? கங்காணி பக்கந் திரும்பினாள்.

"அப்பச்சி! ஐயா என்ன இப்பிடிக் கேட்கிறாரு...?"

"என்னைக் கேட்டா? ஐயாவையே கேளு..."

"ஐயா"வைக் கேட்க முடியுமா? ஆனால் தன்னைக் கேட்பதாக நினைத்துக் கொண்டு பேசத் தொடங்கினார். அவர் முகம் சொல்லக் கூடாத விஷயத்தைச் சொல்ல சங்கடப்படுவதைப் போலச் சுருங்கியது.

"லெச்சுமி! உங்க எல்லாருக்கும் நல்லாத் தெரியும், கணக்கப்பிள்ளைக்கு 'பொம்புளைக் கேஸ்' எவ்வளவு ஆபத்தானதுன்னு. அதிலேயும் நான் கல்யாணங் கட்டாதவன். அப்படிப்பட்டவங்களுக்கு சும்மா கட்டுக்கதையைக் கட்டிவிட்டாக்கூட நெசம்னு எங்க மேலிடம் நம்பும். இது உனக்கு நல்லாத் தெரியும். உன்னைவிட நல்லா எடுக்கக்கூடிய ஆளுக உனக்கு முந்தியே பேரு பதிஞ்சு எத்தனையோ வருஷம் 'சர்வீசு' உள்ள ஆளுக இங்கே இருக்கு. அவுகளை எல்லாம்விட போனவருஷம் வேலைக்கு வந்த நீ ஐம்பத்தி ஏழு றாத்தல் எடுத்தது எல்லாருக்கும் ரொம்ப சந்தேகத்தைக் குடுத்திருக்கு. ஆனா இன்னம் யாராவது என்கிட்டே நேரே கேட்கலை. அவுங்களுக்குள்ளே பேச்சு நடக்குதாம்..."- கங்காணி, பேச்சு விரசமாய்ப் போவதைக் கவனித்துவிட்டு ஊடே புகுந்தான்.

"இப்ப... அது கிடந்துட்டு போகுதுங்க..."

"இல்லை கங்காணி! நான் இந்தமாதிரி 'பப்பிளிக்கா' விசாரிக்கப் படாதுதான். ஆனா விஷயம் என்சம்பந்தப்பட்டது. அதனாலதான் 'ஒடச்சு'ப் பேச விரும்புறேன். அதோட லெச்சுமி எங்களுக்கு சொந்தக்காரச்சுன்னு ஒரு பிரச்சனை இருக்கு. அதனாலேதான் ஒடச்சுப் பேச நினைக்கிறேன்..."

லெட்சுமி பக்கந் திரும்பினார்.

"லெச்சுமி என் நிலமை புரியும்னு நினைக்கிறேன். உன்னாலே மறுபடியும் எடுத்துக்காட்ட முடியுந்தானே?"

குனிந்திருந்த தலை சட்டென்று நிமிர்ந்தது. ஐயாவை, கங்காணியை அப்புறம் ஆட்களை

ஒருமுறை சிலிர்த்துப் பார்த்தது. தூங்கிக் கொண்டிருக்கும் புலியை விலாவில் குத்தினால் இப்படித்தான் துள்ளி எழுந்து முறைத்திருக்கும்.

"என்ன புள்ளே மௌனமாக்கிறே! ஐயா கேக்கிறாரு வதிலு சொல்லு!"

"எதைச் சொல்வது? 'ஜடா' பூடகமாகப் பேசிவிட்டு சும்மா இருந்துவிட்டால், அந்தக் 'கறை' நீங்கி விடுமா?" ஐயா முகத்தை ஏறிட்டு வெறித்துப் பார்த்துச் சொன்னாள லெட்சுமி.

"யாரு முடியாதுன்னா? என்னால எடுக்க முடியும். எடுத்துக் காட்றேன்" - பொங்கிவந்த கண்ணீரை மறைப்பதற்காகத் தலைகுனிந்து கொண்டாள். மேட்டிலிருந்து பள்ளத்துக்கு சரேலென இறங்கும் சாரைப் பாம்பு மாதிரிக் கண்ணீர் வழிந்தது. குழுமி நின்ற ஆட்கள் மௌனமாக நடப்பைக் கவனித்துக் கொண்டு நின்றார்கள். உள்ளுக்குள்ளே 'என்னதான் நடக்கிறது பார்ப்போம்' என்கின்ற மனநிலை இருந்தாலும், வெளிக்குப் 'பசு'வாக நின்று கொண்டிருந்தார்கள்.

பொதுவாக தோட்டத்துப் பெண்களுக்கு இது ஒருவிதமான மனநிலை. நேரடியாக ஐயாவை, கங்காணியைப் பகைத்துக் கொள்ளவோ வாதாடவோ முடியாது பயம். ஆனால் தங்கள் புகைச்சலை சுற்றி வளைத்து அவர்கள் காதுகளுக்கு எட்டும்படி செய்துவிடுவார்கள். விஷயம் உடைபடும்போது எல்லோரும் நல்ல பிள்ளைகளாகக் காட்சியளிப்பார்கள்.

"ஐயோ கடவுளே! எவளோ 'பொடசக்காரி' இப்பிடி அநியாயமாய்ச் சொல்லியிருக்கிறாளே!" என்று அவர்கள் அங்கலாய்க்கும்போது இந்தப் பூனையும் பால்குடிக்குமா கதைதான்.

எல்லோரையும் ஒருமுறை பார்த்துவிட்டு ஐயா கூறினார்:

"ரொம்பச் சந்தோஷம் லெச்சுமி அதேமாதிரி மறுபடியும் எடுக்க முடியுங்கிறே. முடியுமோ முடியாதோ எனக்குத் தெரியாது" அவளைக் கூர்ந்து பார்த்துக் கொண்டு கூறினார்.

"நீ கட்டாயம் எடுத்துக் காட்டத்தான் வேணும். இல்லையோ..." அவர் முகம் கடுகடுத்தது. "அப்புறம் நான் பொல்லாதவனா இருப்பேன்"

தலைத்துண்டை எடுத்து முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டாள் லெட்சுமி. அமைதியாக அவர் பேச்சை ஏற்றுக் கொண்டாள். அவளைப்




சுவடுகள் சந்தா விகிதம்
நோர்வே, சுவீடன், டென்மார்க் 300 NKR
ஐரோப்பிய நாடுகள் 400 NKR
ஏனைய நாடுகள் 500 NKR

வங்கிக் கணக்கிலக்கம் 160752 16032

தொடர்புகட்கு
SUVADUHAL
Herslebs Gate 43
0578, Oslo 5
NORWAY

சுவடுகள் விளம்பர விகிதம்
பின் அட்டை 400 NKR
உள் அட்டை 350 NKR
முழுப் பக்கம் 250 NKR


பயமுறுத்தும் கட்டளையோ பழிவாங்கலோ அல்ல! அவள் கண்ணியத்துக்கு விட்ட சவால்!

* * *

சின்னதொரு தகர லாம்பு மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. அடுப்பில் சாம்பல் பூத்துக்கிடந்த நெருப்பைக் குனிந்து ஊதிவிட்டான் ஆறுமுகம். நெருப்பு இலேசாகக் கனன்றது. பக்கத்தில் கட்டிக் கிடந்த

தேயிலை மிலாருக் குவியலில் இரண்டொரு குச்சியை இழுத்து 'படக் படக்'கென்று ஒடித்து, அடுப்பில் வைத்து மீண்டும் ஊதினான். குப்பென்று தீப்பிடித்தது. குளிருக்கு அடக்கமாக கைகளை நெருப்புக்கருகே காட்டியவாறு ஏறிட்டு லெட்சுமியைப் பார்த்தான். அவளும், அவன் என்ன சொல்லப்போகிறான் என்பதைத்தான் எதிர்பார்ப்பது போல அவனையே கவனித்துக் கொண்டிருந்தாள். அடுப்பருகே சற்று நெருங்கி உட்கார்ந்தவாறு ஆறுமுகம் கேட்டான் "ஆமா! இப்ப என்னதான் செய்யப் போறே?"

கனன்று எரிந்த தீயின் மஞ்சளும் சிவப்பும் கலந்த சுவாலை ஒளி அவன்மீது வர்ணப்பூச்சு செய்து கொண்டிருந்தது.

"பெரிசா அத்தனை கூட்டத்துக்கு மத்தியிலே வீறாப்பு பேசிட்டாப்புலே பத்தாது சொன்ன மாதிரி செய்யணும் முடியுமா உன்னாலே?"

வலது காலை மடக்கிப் பாதத்தை சுவர் மீது பதித்து, சுவரில் சாய்ந்தவாறு அவனைப் பார்த்துச் சிரித்தாள் லெட்சுமி.

"முடியாதுன்னு தெரிஞ்சா சபதம் போடுவேனா?"

"ஆ! கிழிச்சீங்க. அன்னைக்கு என்னமோ நான் போத்துக்கு வாறப்போ ரெண்டு மூணு 'ரப்பு' எடுத்துக் குடுக்காட்டி எடுக்குறவுக இல்லே...?"

லெட்சுமியின் எதிர்காலக் கணவன் அவன். சாயந்தர வேளைகளில் அவள் வீட்டுக்கு வந்தால் கொஞ்சநேரம் எல்லாருடனும் பொதுவாகப் பேசிவிட்டு லெட்சுமியுடன் தனியாகக் கொஞ்சம் பேசுவான். அம்மாதிரிச் சமயங்களில் லெட்சுமியின் 'ஆயாளும் அப்பனும்' கௌரவமாக ஒதுங்கி விடுவார்கள். அவனும் வரட்டுக் கௌரவத்துடன் திண்ணையில் இருந்தவாறு இரண்டு பேச்சுப் பேசிவிட்டு ஓடிவிட மாட்டான். குடும்பப் பிரச்சனை, வேலைப் பிரச்சனை எல்லாம் அவன் காதுக்கும் சற்று ஈயப்படும். இரவு ஏழரை எட்டு மணிவரைக்கும் பேசிக் கொண்டிருந்துவிட்டு தன் லயத்துக்குப் போய் விடுவான். அப்படிப்பட்ட காதலனோடு உலகையே மறந்து போதையிலே ஏதேதோ உளறிக் கொட்டிச் சிரிக்க வேண்டிய வேளையிலே-

வயிற்றுப் பிரச்சனைதான் காதல் பேச்சாக இருந்தது. ஐம்பத்தி ஏழு இறாத்தல் பிரச்சனைகூட அவனால் வந்து விடிந்ததுதான். ஆண்களுக்கு வேலை ஒருமணியோடு முடிந்துவிடும். ஆனால் பன்னிரண்டு மணிக்கே கங்காணியிடம் பல்லைக் காட்டிவிட்டு நழுவிவிடும் துணிச்சல் பேர்வழிகளில் அவனும் ஒருவன். அப்படி ஒருநாள் பகல் 'சோத்து'க்குப் போய்க் கொண்டிருக்கும்போது தான் அவள்-லெட்சுமி- மலையின் 'வாங்கி' ஓரத்தில் தனியாக நின்று கொழுந்து எடுத்துக் கொண்டிருந்தாள். அவளோடு சற்றுப் பேசப் போனவன் பேசிக் கொண்டே கொழுந்து கிள்ளிக் கொண்டிருந்தான். உழைக்கும் கையல்லவா? வாய்ப் பேச்சை மறக்காத போது கையும் உழைப்பை மறக்கவில்லை. சாகும்வரை அது மறப்பதில்லை. அந்தக் கொழுந்துதான் ஐம்பத்தாறு இறாத்தலாக இருந்து ஐம்பத்தேழு பிரச்சனைகளையும் கிண்டிவிட்டிருந்தது.

"அப்ப என்னதான் செய்யிறது?"

"நானே எடுக்கிறேன். முடிஞ்சமட்டும் எடுக்கிறது, முடியாட்டி துண்டு வாங்கிக்கிட்டு அடுத்த மலைக்கு போறேன். மலையிலே இருந்தாத்தானே ஐயா மேலே சந்தேகப் படுவாங்க?"

பெருமூச்சோடு ஆறுமுகம் எழும்பினான். "என்னமாச்சும் பண்ணு!" என்று சொல்லிக் கொண்டு தோளில் கிடந்த மப்ளரைத் தலையிலே முண்டாசாகக் கட்டிக் கொண்டு புறப்பட்டான். லெட்சுமியின் தாய் மருமகனைக் கண்டதும் பவ்வியமாக எழும்பி ஒதுங்கிநின்று விட்டு உள்ளே ஓடிவந்தாள்.

"ஆயி! அத்தானுக்கு தேத்தண்ணி ஊத்திக் கொடுத்தியா?" என்றாள்.

"குடிச்சுட்டுத்தான் போறாக" வயிற்றுப்புறம் அரைத் தூக்கம் தூங்கிக் கொண்டிருந்த நாய்

"ஆமா, இப்பிடி செஞ்சா என்ன?"- அவனுக்கு ஒரு யோசனை.

"அன்னைக்கு மாதிரி பன்னிரெண்டு மணிக்கு வந்து எடுத்துத் தாவா?"

"ஐயய்யோ!"- அவளுக்கு.

"இனி எல்லாருக்கும் என்மேலதான் கண்ணிருக்கும். இன்னொருத்தர் எடுத்துக் குடுக்கிறதே குத்தம். அதுவும் இப்பவோ?" இரண்டு கரங்களாலும் கன்னத்தைப் பொத்திக் கொண்டு தோள்களைக் குலுக்கினாள். "வேறே வெனை வேண்டியதில்லை"

ஒன்று ஆறுமுகத்தைக் கண்டதும் இரண்டுதரம் குலைத்துவிட்டு வழக்கமாக வருகிற ஆசாமி

என்று தெரிந்ததும் மீண்டும் சுருண்டு படுத்தது.

* * *

ஒரு மணிக் கொழுந்து நிறுவையாகிக் கொண்டு இருந்தது. அது நல்ல கொழுந்து உள்ள மலை; ஆகவே எல்லோரும் சாப்பிடப் போகாமல் நின்று எடுத்திருந்தார்கள். நாற்பது ஐம்பது என்று இறாத்தல் விஷமாக ஏறிக் கொண்டிருந்தது. படங்குச் சாக்கில் ஓர் ஆள் உயரத்துக்கு கொழுந்து எழும்பி நின்றது. சாக்கிலே கொழுந்து அமுக்கம் பெண்களும் சாக்குப் பிடிக்கும் பெண்களும் நின்று கொண்டிருந்தனர். நிறுப்பதற்காக காத்து நின்ற வரிசை மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. லெட்சுமியின் முறை வந்தது. சாக்குக்காரன் லெட்சுமியின் கூடையைத் தூக்கினான். அது கல்லாகக் கனத்தது. அடியிற் கையைக் கொடுத்துத் தூக்கித் தட்டிற் கொட்டப் பார்த்தான் முடியவில்லை. காலால் மிதித்து அமுக்கப்பட்ட கொழுந்து சீமெந்து மாதிரி இறுகிப் போயிருந்தது. மாமூல்படி தனது முழங்காலால் கூடையின் வாயிற்புறம் இரண்டு மோது மோதி நாலைந்துதரம் உலுப்பினான். கொழுந்து பிரிந்து கொட்டத் தொடங்கியது. கட்டி மண்ணாக பொல பொலவென உதிர்ந்து கொட்டிய கொழுந்து, தட்டைக் கூடையில் நிரம்பி, தராசு அடிதொட்டி எழும்பி, கோபுரம் கட்டியதைப் பார்த்ததும் கணக்கப்பிள்ளையைத் திரும்பிப் பார்த்தாள் லெட்சுமி.

ஐயா குவிந்து நின்ற கொழுந்தைப் பார்த்தார். கொழுந்தா அது? நார் பிடித்த வெறும் முற்றல் இலையும் மொட்டப் புடுங்குமாக இதையெல்லாம் எடுத்துட்டா சரியா? கங்காணியைக் கூப்பிடு என்றார்.

"என்ன கங்காணி கொழுந்தா இது?... லெட்சுமிகிட்ட கொழுந்து இன்னிக்கு எடுக்கவா சொன்னீங்க?"

"ஆமாங்க! ஒன்பதுமணி நிறுவைக்குப் பொறகு வந்து இன்னிக்கு எடுத்துக் காட்டுறேன்னு சொல்லிச்சுங்க. சாச்சிக்கு நாலு ஆளைவைச்சு எடுக்கச் சொன்னோங்க"

"சரி, ஆனா இப்பிடியா எடுக்கிறது? நாருக் குச்சியும் முத்தல் எலையுமா இதா கங்காணி கொழுந்து?"

"துப்பரவு பண்ணித் தரச் சொல்லுறேன். றாத்தலைப் பாருங்க"

தராசுமரம் பிடிக்கும் பெண்களைப் பார்த்தார். அந்தப் பெண்கள் தராசில் கயிற்றை மாட்டித் தூக்கினார்கள்.

தூக்கிய கைகளே நடுங்கின. தராசில் றாத்தல் காட்டும் கம்பி 'ஜம்' என்று மேலே ஏறி கீழே இறங்கி ஆடி நின்றது அறுபத்தி ஒன்று!

சொன்னதுக்கு மேலே நான்கு றாத்தல் கூட இருந்தது. "அறுவத்தியோர் றாத்தல் இருக்குது கங்காணி. யாரு வேணும்னாலும் வந்து பாத்துக் கொள்ளலாம்"

ஐயா ஒதுங்கி நின்றார். ஆனால் யாரும் போய்ப் பார்க்கவில்லை. அவ்வளவுக்குத் துணிந்து யார் போவார்கள்?

தராசு பிடிக்கும் பெண்களின் கைகள் வேகமாக நடுங்கத் தொடங்கின. தட்டை இறக்கி வைக்கும்படி கையை அமர்த்தி விட்டுக் கங்காணியைப் பார்த்து ஐயா கூறினார்.

"ஆனா கங்காணி இந்த ஆறுவத்தியோர் றாத்தலையும் தரமுடியாது. இருபது றாத்தல் வெட்டப் போறேன். கொழுந்திலே அவ்வளவு பழுது இருக்குது"

லெட்சுமிக்குத் தூக்கிவாரிப் போட்டது; கங்காணிக்குந்தான்.

"ஐயா!" கங்காணிக் கிழவன் வெறித்துப் பார்த்தான். விடுவிடுவென்று லெட்சுமி அருகில் போய் அவளது வலதுகையின் ஆட்காட்டி விரலைப் பிரித்து அவர்முன் காட்டினாள். அந்த விரலின் ஓரப்பகுதிகள் இரண்டும் தோல் கிழிந்து இரத்தங் கசிந்து உறைந்து போயிருந்தன.

"இதைப் பாத்துவிட்டுப் பேசுங்க ஐயா. இது நல்ல கொழுந்தோ கெட்ட கொழுந்தோ, இவ்வளவையும் எடுத்தது இந்தக் கையி! இந்த றாத்தலைத் தரமாட்டேன்னு சொல்லுறீங்க?"

லெட்சுமியின் கைகளைப் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டார். அவர் கை தானாகவே துண்டை வாங்கிக் காலைக் கொழுந்தின் றாத்தலோடு அறுபத்திஒரு றாத்தலையும் கூட்டிப் போட்டுத் திருப்பிக் கொடுத்தது.

* * *

சபதம் நிறைவேறா விட்டால் மற்றமலைக்கு மாறிப் போகிறேன் என்று சொன்னவள் சபதம் நிறைவேறிய பின்பும் அந்த மலையில் நிற்க விரும்பவில்லை. அவள் போன பிறகுதான் 'ஐயா'வுக்கு அவள்மீது உண்மையிலேயே காதல் பிறக்கத் துவங்கியது!


[யாவும் கற்பனை]

# அப்பாவிச் சனங்கள்

(மனித உரிமைகட்கான யாழ் பல்கலைக் கழக ஆசிரியர்கள் அமைப்பு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இருந்து ஒரு பகுதி)

கோட்டை அருகே நிகழும் யுத்தங் காரணமாக யாழ். வைத்தியசாலையில் இருந்து நோயாளிகள் அனைவரும் வெளியேற்றப்பட்ட பிறகு, மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை மிகமுக்கிய, அவசர சிகிச்சைகளை மேற்கொண்டது. ஆனால் இங்கும் குண்டுவீச்சு நிகழ்த்தப் பட்டது. 6குண்டுகளில் 4வெளியே வீழ்ந்தன. இப்பகுதியில் புலிகள் நின்றிருக்கக்கூடும்; சீருடையில் அவர்கள் தமது வாகனங்களுடன் வைத்தியசாலையுள் வந்திருக்கக் கூடும். ஆனால் இவ்வாறு இருப்பது யுத்தகாலத்தில் சட்டத்துக்கு புறம்பானதல்ல. தவிரவும் இவ்வைத்தியசாலை அரசின் மிகச் சிறிய உதவிகளுடன் பொதுமக்களுக்காக மிகமுக்கிய கடமையை ஆற்றிக் கொண்டிருந்தது.

யாழ்நகரின் முக்கிய கடமைகள் யாவும் இருமைல் தொலைவிலுள்ள முத்திரைச் சந்திக்கு மாற்றப்பட்டிருந்தன. நீண்டதூர பஸ்களின் தொடக்க இடமாக இது இருந்தது. சிறுவியாபாரிகளால் அத்தியாவசியப் பொருட்கள் விற்கப்படும் கடைகள் தொடங்கப் பட்டிருந்தன. இதை அனுமதிப்பதற்குப் பதிலாக இந்தப் பகுதி விமானத் தாக்குதலுக்குரிய இடமாகியது. இதை மன்னிப்பதற்காக கூறப்படக்கூடிய ஒரேயொரு காரணம், இப்பகுதியில் புலிகள் பலவந்தமாக ஒருவீட்டில் குடியேறியதுடன்,



கொழும்பு செல்ல அனுமதி வழங்கும் இடமாகவும் பயன்படுத்தியமையே. யுத்தப் பாதிப்புக்கு உள்ளான நூற்றுக் கணக்கான பொதுமக்கள் தமது விண்ணப்ப முடிவு தெரிவதற்காக நாட்கணக்கில் வரிசையாகக் காத்திருந்தனர். நல்லூர் சென்.ஜேம்ஸ் தேவாலயத்தின் எதிர்த்திசை முடக்கில் இருந்த இந்த அலுவலகம், தாக்குதலுக்கான இடமாகியது. ஒரு குண்டு தேவாலயத்தின் அருகே வீழ்ந்து- நல்ல வேளையாக வெடிக்கவில்லை- தேவாலயத்தில் தஞ்சம் அடைந்திருந்த 500பேர் மேல் புழுதிவீசியது. இன்னொரு குண்டு இருவரை காயப்படுத்தியது. இந்த இலக்கு மக்கள் செறிந்து வாழும் இடத்தில் அமைந்திருக்கிறது. "பொம்பர்கள் வரும்போது, புலிகள் அலுவலகக் கதவுகளை மூடிவிட்டு பஜேரோ ஜீப்களில் ஏறி மறைந்து விடுகின்றனர். விசாவுக்காக காத்திருக்கும் நூற்றுக்

கணக்கான மக்கள், பயணிகள், அன்றாடத் தேவைகளுக்காகக் கடைக்கு வந்தவர்கள் அரசின் கைகளில் அநாதரவாக விடப்படுகின்றனர்" என எரிச்சலுற்று ஒருவர் கூறினார்.

வாகனங்களைத் தாக்கும்போது ஒரு பொறுப்பான அரசின் கடமை இலக்கின் தன்மை பற்றி உறுதி செய்து கொள்வது. விமானத் தாக்குதல் செய்வோர், எல்லா வாகனங்களும் புலிகளின் வாகனங்களே என்ற முடிவுடன் ஆரம்பிப்பது போலத் தோன்றுகிறது. பெரியளவில் பயணிகள் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது

காயப்படுத்தப் பட்டுள்ளனர். மறுபுறத்தில் புலிகளின் வாகனங்கள் எப்போதும் தப்பிவிடுகின்றன.

புலிகளால் பொறுப்பேற்கப்படும் பொதுமக்களின் வீடுகள், கீழிருந்து சிறு தாக்குதல்கள் தொடுக்கப் படுவதால், விமானத் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. புலிகள் இதனால் பெரும்பாலும் எதையுமே இழப்பதில்லை. அவர்களிடம் நல்ல பதுங்கு குழிகள் உள்ளன. ஒரு வீடு அழிக்கப் பட்டால் அவர்கள் பெறுவதற்கு ஏராளமான வீடுகள் மிச்சம் உள்ளன. நாட்டின் வளமும் மக்களின் உயிருமே அழிக்கப் படுகின்றன. குண்டுகளுக்கே பணம் பெறச் சிரமப்படும் அரசு, இந்த வீடுகளை மீளக் கட்டி எழுப்புவதற்கான பணம், நிர்வாகத் திறன், ஈடுபாட்டைக் கொண்டிருக்குமா என்பது கேள்விக்குரியதே.

உணவு, மருந்து வடிவத்தில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அரசால் அனுப்பப்படும் உதவிப் பொருட்கள் தேவையை விட மிகக் குறைவாகவே உள்ளன. பல அகதிகள் பட்டினியாலும், நோயாலும் இறந்துள்ளனர். சிலர் தற்கொலையும் செய்துள்ளனர். பெரும்பாலும் உதவிப் பொருட்கள் மக்களால் தங்கள் சொந்தச் செலவிலேயே கொண்டு செல்லப் படுகின்றன;

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் கார்ட்டர், மற்றும் அமெரிக்கப் புரவலர் டொமினிக் டி மெனில் ஆகியோரின் பெயரால் வருடாந்தம் வழங்கப்பட்டு வரும் கார்ட்டர் மெனில் விருது இலங்கையின் சிவில் உரிமைகள் இயக்கத்துக்கு வழங்கப் பட்டுள்ளது. மனித உரிமைகளை தமது நாடுகளில் மேம்படுத்த உழைக்கும் அமைப்புகளுக்கே இந்த விருது வழங்கப் பட்டு வருகிறது. மனித உரிமை மீறல்களை ஆவணப் படுத்த அமைப்புகள் எடுக்கும் தீவிர துணிச்சலையும் கௌரவித்தே விருது வழங்கப் படுகிறது. ஒரு லட்சம் அமெரிக்க டொலர்களைக் கொண்ட இவ்விருது எதிர்வரும் டிசம்பர் மாதம் 10ம் திகதி நியூயோர்க்கில் வழங்கப் படும். இந்த விருதுக்கு கௌதமாலாவில் இயங்கிவரும் மனித உரிமை அமைப்பு ஒன்றும் இவ்வருடம் தெரிவாகியுள்ளது.

நிவாரணப் பொருட்களைக் கொண்டு சென்று உறவினர்களிடம் கையளிக்கும் தேவாலயம் ஒன்றுக்காக வெள்ளவத்தையில் மக்கள் வரிசையில் நிற்கின்றனர். தன்னால் பாதிக்கப் பட்ட மக்களின் தேவைகளைப் பற்றி அரசு பெரிதாக எதையும் புரிந்து கொள்வதில்லை.

அரசு முழு மனதுடன் தனது மக்கள் தொகையில் பெரும் பகுதியை படையின்முன் கைவிட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் வாழ்பவர்கள தமிழர்கள் என்பதாலேயே அங்கு அரசு குண்டுவீச்சை நிகழ்த்துவதாக கொழும்பில் பொதுவாகப் பேசப்படுகிறது.

<u>அரசியல் நிலைமை</u>

அரசியல் தீர்வுக்கான யோசனைகள்

முன்வைக்கப்பட வேண்டும் என்றும், மாற்றுக் கருத்துகள் வெளிவர அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் இப்போது பரவலாக உணரப்படுகிறது. புலிகளுக்கு மாற்றீடு உள்ளது என தமிழ் மக்கள் அறிய தொடர்புச் சாதனங்களும் அவ்வாறான மாற்றுக் கருத்துகளை வெளிக் கொணர ஊக்குவிக்கப் படவேண்டும். நம்பிக்கை பற்றிய எதிர்பார்ப்பை வழங்குவதற்கு விமானப் படையின் பலம் பயன்படுத்தப் படலாம். ஆனால் தொடர்புச் சாதனங்கள் யுத்த முழக்கம் இடுகின்றன, தமிழ் மக்களின் துயரங்கள் முற்றாக இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன. சமஷ்டித் தீர்வு வழியில் அரசியற் தீர்வுக்கான சில யோசனைகள், றோமன் கத்தோலிக்கப் பேராயர், நல்லூர் கந்தசாமி ஆலய அதிபதி, பிஷப் அம்பலவாணர் ஆகியோரால் கையொப்பமிட்டு யூலை 15ம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பப் பட்டன. இதுவே மக்களால் கூடியளவு உருவாக்கப் படக்கூடியது. இதற்குப் பதிலளிப்பது போல சில நாட்களின் பின்னர் றோமன் கத்தோலிக்க ஆலயத்தின் அருகே மனிதக் கழிவுகளைக் கொண்ட பரல் ஒன்று விமானத்தில் இருந்து வீசப்பட்டது.

தொடர்ந்த வாரங்களில் குறி நோக்கி சரியாகச் செலுத்தப்பட முடியாத பரல் குண்டுகள் வீசப்பட்டன. இந்த நிகழ்வுகள் தமிழ் மக்கள் மீதான அலட்சியப் போக்கைத் தெளிவாகக் காட்டுகின்றன.

யாழ் மாவட்ட மக்கள் எட்டு லட்சம் பேரையும் குடாநாட்டை விட்டு வவுனியாவுக்கு வெளியேற்றி விட்டு, குடாநாட்டின் மீது தாக்குதல் தொடுப்பது பற்றிய பாதுகாப்பு அமைச்சரின் யோசனை ஒரு நல்ல யோசனை போல தெற்கில் தோற்றம் தரலாம். ஆனால் அவர் இதுபற்றி எந்த தமிழ்க் குழுவுடனாவது, சமய நிறுவனங்களுடனாவது, பொது நிறுவனங்களுடனாவது இதன் நடைமுறை பற்றி ஆலோசித்திருப்பாரா? தமிழ் மக்களின் சார்பில் பேசுவதற்கு புலிகளை விட வேறு யாரும் இல்லை என்பது போல அரசு நடந்து வந்திருக்கிறது, வருகிறது. அத்துடன் எந்த ஜனநாயக மாற்றீட்டை ஊக்குவிப்பதிலும் ஈடுபாடு காட்டத் தவறியுள்ளது●

---

இலக்கியத்துக்கான நோபல் பரிசை இம்முறை மெக்சிக்கோ நாட்டைச் சேர்ந்த கவி ஒக்டாவியோ பாஸ் (Octavio Paz) பெற்றுள்ளார். முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள இவர், பிரான்ஸ், சுவிஸ், ஜப்பான் ஆகிய நாடுகளில் மெக்சிக்கோவின் தூதுவராகவும் கடமை புரிந்துள்ளார்.

- செய்தியாளன் -

---

*ஒக்டோபர் மாதம் நோர்வே முழுவதும் ரெட்பாணா நிறுவனத்தினால் 'தொலைக்காட்சி நிதிசேகரிப்பு' நடாத்தப்பட்டது. இதன்போது 13 கோடி நோர்வீஜிய குரோணர்கள் சேர்க்கப்பட்டுள்ளது. இது நோர்வே நிதிசேகரிப்பு வரலாற்றில் ஒரு சாதனையாகும்.*

*-வதனா-*

நோர்வேயில் இருந்து விடுமுறைக்காக வந்திருந்த வடபகுதி இளைஞர் ஒருவரைச் சந்தித்தபோது அவர் இப்போது முற்றிலும் மாறியிருந்தார். நோர்வேக் கல்லூரியில் அனுமதி கிடைத்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இங்கிருந்து போனவர் அவர். தலைமயிரைப் பெண்களைப் போல் வளர்த்து ஆளை அடையாளம் காண முடியவில்லை.

இங்கு இருக்கும் போது சுத்தமான "பச்சைத் தண்ணீர்" அவர். விளையாட்டுக்குக்கூட சிகரெட், மது தொடவும் மாட்டார்.

கொழும்புக்குத் திரும்பியதும் ஒரு ஒட்டல் விருந்தில் வைத்து அவரது அபார வளர்ச்சி தெரிந்தது. முன்பெல்லாம் பியரும் தொடாத இளைஞர் இப்போது தங்கு தடையின்றி விஸ்கி குடித்தார். ஒரு கையில் மதுக்கிண்ணம். மறுகையில் சிகரெட் புகைந்தது.

பேச்சுவாக்கில் இந்த அசாத்திய மாற்றத்தைப் பற்றிக் கேட்டபோது அவர் சொன்னார்.

(1)"நோர்வே நாட்டு குளிருக்கு ஏதாவது மதுவகை குடித்தாக வேண்டும். இல்லாவிட்டால் உடம்பு தாங்காது. விஸ்கியும் சிகரெட்டும் அங்கே எமக்கு இரண்டு கண்கள்"

ஒரு அப்பாவி இளைஞரே இப்படி அடியோடு மாறிப் போயிருந்தால், ஏனையோரைப் பற்றி கற்பனை செய்து பார்க்கத் தேவையில்லை.

"கள்ளுண்டார் நஞ்சுண்டார்" என்ற திருவள்ளுவர் வாசகம் எங்கே போய்விட்டது?

நோர்வே நாட்டில் எமது இளைஞர்கள், யுவதிகள் அதிகம் பேர் கல்லூரி அனுமதி கிடைத்து சென்று வாழ்கிறார்கள். அவர்களது வாழ்க்கைமுறைகள் பற்றி இந்த இளைஞர் கூறினார்.

"கல்லூரியில் படிக்கின்ற காலத்தில் நாம் விடுதிகளிலேயே தங்கினோம். பெரும்பாலும் இங்கிருந்து சென்ற ஒவ்வொருவருக்கும் நோர்வே மாணவிகளே "ரூம் மேற்" ஆக இருப்பார்கள். நோர்வே பெண்கள் சிறுவயதிலேயே அபார உயிர்விட்டிருக்க வேண்டும். தவிரவும் உலகிலேயே விஸ்கியும் சிகரெட்டும் விலைகூடிய நாடான நோர்வேயில் இரண்டையும் கண்களாக எவருமே வைத்திருக்க முடியாது. வைத்திருந்தால் 'தேபான்' ஸ்ரேஷன்களில் திருவோடுதான் ஏந்தவேண்டும்.

2. இங்கு பாடசாலை (Folkchøyskole) அனுமதி கிடைத்து வருவோர் பற்றி இவர் என்ன உளறுகிறார்? இவருக்கு ஒருவேளை 'ரூம் மேற்' நோர்வேஜியப் பெண்ணாக இருந்திருக்கலாம். அதற்காக பெரும்பாலான இளைஞர்கள் அவ்வாறு இருப்பார்கள் என எப்படி இவர் கூறமுடியும்? Folkchøyskole இல் படித்த தமிழர்கள் இவரைக் கண்டால் உதைப்பார்களோ தெரியவில்லை.

தவிரவும் இங்குள்ள பெண்களுக்கு ஆங்கிலத் தேர்ச்சி பெரிதாக இல்லை எனவும், இதனால் தமது ஆங்கிலம் பெரிதாகத் தெரிவதாகவும் கூறுகிறார். எமது ஆங்கிலம் எப்படி என்பது எமக்கே தெரியும். எமது ஆங்கிலத்தைக் கண்டு வியப்பதற்கு அத்தனைதூரம் மோசமான நிலையில் நோர்வேஜிய இளம்பெண்கள் இல்லை. எங்களைவிட மிகமிக அழகான அநேக ஆபிரிக்கர்கள் ஆங்கிலம் கதைக்கிறார்கள்.

(3) இங்கு வாழும் தமிழ்ப் பெண்கள் பியர் குடிப்பதைப் பார்த்திருப்பதாகவும், தாமெல்லாம் (ஆண்கள்) எந்த மூலைக்கு என்றும் கூறுகிறார். பியர் குடிக்கும் பெண்கள் இங்கு இல்லை என்று யாரும் கூறவில்லை. ஆனால் இவர் கூறுகிற தொனியில் இங்கு அநேக பெண்கள் முழுமூச்சாக பியர் குடிப்பதுபோலத் தோன்றுகிறது. ஆனால் இலங்கையிலேயே பெண்கள் குடிப்பது புதிய ஒன்றல்ல. மிகவும் வறிய பெண்கள் (கொழும்பில்) மது அருந்துவதுமுதல், மிகப் பணக்காரர்கள் விடுதிகளில் அருந்துவதுவரை நான் பார்த்திருக்கிறேன். தவிரவும் பெண்கள் குடிப்பது தவறு என்று நினைத்தபடியே இவர் இதைக் கூறுகிறார். பெண்கள் இலங்கையில் விரும்பினேன். தவிரவும், இனிமேலாவது இலங்கை செல்லும் எமது நண்பர்கள் பொறுப்பற்ற விதத்தில் பிழையான அபிப்பிராயங்கள் உருவாக காரணமாக இருக்கக் கூடாது என விரும்புகிறேன்.

வீரகேசரிக்குப் பேட்டி வழங்கிய அந்த நண்பர் தனது கருத்துகள் சரியானவை என்று உறுதியாக நம்பினால் எனக்கு அவர் கடிதம் எழுதுவார் என நம்புகிறேன்.

இதே வீரகேசரியில் கலாநிதி சி.மௌனகுரு அவர்கள் வேறொரு பக்கத்தில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதில், கலாசாரம் என்பது என்ன என்று சில அடிப்படைக் கேள்விகளை எழுப்பியுள்ளார். அவரது தர்க்கத்தில் இருந்தே உதாரணம் ஒன்றைக் காட்ட விரும்புகிறேன். "கலாசாரம் காலந்தோறும் மாறும் என்ற உண்மை உணர்ந்தோர் இதுதான் கலாசாரம் என்று விடாக்கண்டனாக இரார். பரத்தமை ஒழுக்கம் சங்ககாலத் தமிழ்க் கலாசாரம். பரத்தையிடம் செல்வது பிழை, ஒருத்தனுக்கு ஒருத்தியே என்பது பின்னாளில் ஊன்றிய கலாசாரம். மாமிசம் அருந்திய கலாசாரம் பண்ணைய தமிழ்க் கலாசாரம். மரக்கறிக்கு மாறியது இடைக்காலத்தில் தமிழ்க் கலாசாரம். இன்று மரக்கறி/ மாமிசம் இரண்டும் உண்பது எமது கலாசாரமாகி விட்டது. கலாசார சின்னங்கள் எல்லாமே இவ்வாறுதான்" என்கிறார் கலாநிதி மௌனகுரு.

கலாசாரம் என்பது இவ்வாறு காலத்தோடு மாறுவது போலவே இடங்களோடும் மாறுபடும். உதாரணமாக கடந்த நூற்றாண்டில் தமிழகத்தில் இருந்து மொறீஷியஸ், பிஜி, இலங்கை, சீச்செல்ஸ் போன்ற நாடுகளுக்கு இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் தமது சூழல்கருதி தமது வாழ்க்கை முறைகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தினர். ஐரோப்பிய நாடுகளுக்கு வரும் தமிழர்களும் இவ்வாறான மாற்றங்களை தமது வாழ்வில் ஏற்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது.

உடல்வளர்ச்சி கொண்டவர்கள். ஆசியநாட்டு இளைஞர்களை அவர்களுக்கு மிகவும் பிடிக்கும். (சிரிக்கிறார்) நாங்கள் கறுப்பர்களாக இருப்பதால் போலும்.

(2) அவர்களிடம் (நோர்வேஜியப் பெண்களிடம்) ஆங்கில தேர்ச்சி பெரிதாக இல்லை. எமது ஆங்கிலம் அவர்களுக்குப் பெரிதாகத் தெரிகிறது. ஒரு இளைஞனும் யுவதியும் தனியறையில் தங்குவதை அவர்கள் பெரிதாக நினைப்பதில்லை. அதுவே எமக்கு சாதகமாக அமைந்து விடுகிறது"

அந்த இளைஞர் கூறிய ஏனைய கதைகளை இங்கே விபரிக்க முடியாது.

"இலங்கைக்குத் திரும்பி வந்து வாழும் எண்ணம் உங்களுக்குக் கிடைக்காதா?" என்று கேட்டால் பதில் வெறுப்பாக வந்தது.

"இங்கு வந்து எப்படி வாழ்வது? அந்த வாழ்க்கை நன்றாகப் பிடித்து விட்டது. அங்குள்ள சுதந்திரம், உல்லாசம் இங்கு வருமா?

(3) இங்கிருந்து போன பெண்கள்கூட நிறைய மாறிப்போய் விட்டார்கள். பல பெண்களை வெள்ளைக்காரப் பெண்களிடம் இருந்து அடையாளங் காண முடிவதில்லை. ஒருசில விருந்து நிகழ்ச்சிகளின் போது எமது பெண்கள் பியர் குடிப்பதைப் பார்த்திருக்கிறேன். நாங்கள் எல்லாம் எந்த மூலைக்கு? அப்படியானவர்கள் மீண்டும் இங்கு வருவதற்கு விரும்புவார்களா?"

இப்படி ஒரு நோர்வேத் தமிழ் இளைஞர் பேட்டி வழங்கி, அது வீரகேசரியில் வெளிவந்துள்ளது. பொதுவாக ஐரோப்பிய நாடுகளில் எமது கலாசாரம் சீரழிவதாகவும் குறிப்பிட்ட அந்தக் கட்டுரைபற்றி இங்குள்ள பலருக்கும் கோபம். காரணங்கள் இரண்டு. ஒன்று இந்தப் பேட்டியை வழங்கியவர் தனது 'விலாச'த்தைக் காட்ட இவ்வாறான பொய்களை அவிழ்த்திருக்கிறார். இவரது பொய்களை ஒவ்வொன்றாய்ப் பார்க்கலாம்.

1. இவரது முதலாவது கூற்று உண்மையானால் 90%ஆன தமிழர்கள் இங்கே (விஸ்கி குடியாததால்) குடிப்பது எத்தனை வீதமோ அதைவிட இங்கு அதிகமாக எம் பெண்கள் குடிப்பதில்லை என்பது எனது நம்பிக்கை. அப்படிக் குடித்தாலும் அதைப் பிழையென்று நான் கூறவிரும்பவில்லை. ஏனெனில் இலங்கையைவிட இங்கு குடிக்கும் ஆண்களது வீதம் சற்றே அதிகம். ஆனால் இந்த நபர் கூறியதுபோல கண்களாகக் குடியையும் புகையையும் கருதுமளவு பலரின் நிலை மோசமாகவில்லை என்பது உறுதியான நம்பிக்கை.

இந்த நபர் தான் கூறிய செய்திகட்கு ஆதாரமாகச் சில படங்களைச் சமர்ப்பித்திருப்பார் போலும். இவரது (?) படங்கள் இரண்டும் (கண்கள் கறுப்பாக்கப்பட்டு) ஒன்று மதுவுடன், மற்றது மாதுவுடன் பிரசுரமாகியிருந்தன. இத்தனைக்கும் தனது பெயரை வெளியிடாமல் இந்தத் தகவல்கள் வெளிவர வேண்டும் என்று அவர் விரும்பியுள்ளார். வீரகேசரியை வாசிக்கும் இலட்சக்கணக்கான வாசகர்களது மனங்களில் நோர்வேத் தமிழர்கள் பற்றி எந்தவித அபிப்பிராயம் ஏற்படும்? கட்டுரையாளர் நோர்வேயில் இருந்து வந்தவர்களில் இவரை மட்டும் சந்தித்தது போலத் தோன்றுகிறது. ஏனெனில் இவரது அபிப்பிராயம் தவிர நோர்வே பற்றிய வேறு தகவல், அபிப்பிராயம் கட்டுரையில் கிடையாது. இவரது பிழையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நோர்வே பற்றியும், வேறு ஒருசிலரது தகவல்களைக் கொண்டு ஜேர்மன், பிரான்ஸ் பற்றியும் வீரகேசரியில் பிரசுரமான இக்கட்டுரை வாசிப்பவர்களுக்கு ஒரு சுவையாக இருக்கக் கூடும். ஆனால் நோர்வேயில் உள்ள 4000 பேர்களதும் பெற்றோர், நண்பர்கள் என்ன அபிப்பிராயம் கொள்வர்?

இக் கட்டுரைபற்றி பலர் வீரகேசரிக்குக் கடிதம் எழுதவேண்டும் என்று கருத்துத் தெரிவித்தனர். இவர்கள் இங்குள்ள வேலை நெருக்கடிக்குள் நேரம் இல்லாமல் கடிதம் எழுதாது விட்டிருக்கக்கூடும். ஆனால் நாம், நான் கடிதம் எழுதுவதைவிட நோர்வேயிலேயே இதை அம்பலத்துக்குக் கொண்டுவந்து சர்ச்சைக்கு உள்ளாக்க வேண்டும் என


ஐரோப்பாவில் எமது கலாசாரம் சீரழியவில்லை என்று நிறுவுவது எனது நோக்கமல்ல. அது இலங்கையிலேயே சீரழிகிறது. சூழலைச் சாதகமாக்கி வீணாகும் சில அம்சங்கள் இங்கு உள்ளன என்பது உண்மைதான். ஆனால், மொட்டையாக 'குடிக்கிறார்கள் ஆகவே கெட்டுப் போகிறார்கள்' என்று கூறுவதால் எதுவுமே நிகழப்போவதில்லை. இன்றைய சூழலில் எமது வாழ்முறை பற்றியும் எமது அடையாளங்களை இங்கு எவ்வாறு பேணப்போகிறோம் என்பது பற்றியும் விரிவான ஆய்வுகள் தேவை. இவ்வாறான ஒரு ஆய்வைத்தான் ஈழத்தமிழர் சமூகம் ஐரோப்பாவில் வேண்டி நிற்கிறது: குற்றச்சாட்டுகளை அல்ல.



## நடையர் பார்வையில்



## நாட்டு நடப்புகள்



e bodies of two JVP suspects left on the roadside in Tangalle, 1989; they were reportedly victims of plainclothes forces

# A human rights crisis

Gross and widespread human rights violations in Sri Lanka have persisted for more than seven years against ... to the government ... powers to arrest suspected opponents of the gov... them incommunicado without cha...

# கிழிபடும் இலங்கை அரசின் முகத்திரை

இலங்கையரசு கடந்த இருவருட காலங்களில் நடாத்திய மனிதவுரிமை மீறல்கள் சர்வதேச ரீதியில் அம்பலப்படுத்தப் பட்டுள்ளன. 1987- 1989 காலப்பகுதியில் இலங்கையில், முக்கியமாகத் தென்பகுதியில் நடந்த அரசின் மனிதவுரிமை மீறல்கள் பல சர்வதேச ரீதியில் அம்பலமாகியுள்ளன.

1987- 1989 காலப் பகுதியில் இலங்கையில் ஏறத்தாழ 60,000 இளைஞர்கள் அரச படைகளாலும், அரசின் கூலிப் படைகளாலும், ஜே.வி.பி. கெரில்லாப் படையினராலும் மிருகத்தனமான முறையில் கொல்லப்பட்டது பற்றி ஏற்கெனவே செய்திகள் வெளிவந்துள்ளன. இச்செய்தி பற்றி நிரூபிக்க சான்றுகள் பெறமுடியாத நிலை உள்ளபோதும், அண்மையில் இலங்கை சென்ற ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டத்தரணிகள் அடங்கிய குழு இத்தகவல்கள் பற்றி உறுதிப்படுத்தும் தகவல்களை வெளிக் கொணர்ந்துள்ளது.

கடந்த மாத இறுதியில் இலங்கை சென்ற இந்தக் குழுவில் கிறிஸ்ரின் ஒற்றி, அலெக்ஸ் ஸ்மித் ஆகிய பிரிட்டிஷ் தொழிற் கட்சியைச் சேர்ந்த ஐரோப்பிய பாராளுமன்ற

உறுப்பினர்களும், சட்டத்தரணிகளான பேணாட் டேவிட் (பெல்ஜியம்), கோர்ஜல் குறால் (நெதர்லாந்து) ஆகியோரும் சென்றிருந்தனர். இவர்களின் இலங்கை விஜயத்தில் பல அதிர்ச்சி தரும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கண்டியிலும் தென்பகுதியிலும் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் பற்றி ஆராய இப்பகுதிகளுக்கு விஜயஞ் செய்த இக்குழு ஒருவார காலத்தில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்களையும் பாதுகாப்பு அமைச்சரையும் இராணுவ அதிகாரிகளையும் சந்தித்தது.

இக்குழு கண்டுபிடித்த தகவல்கள் பற்றிக் குறிப்பிடுகையில், படையிலிருந்து விலகிச் சென்றவர்கள், விலக்கப்பட்டோரால் இவ்வாறான மனிதவுரிமை மீறல்கள் நிகழ்த்தப்பட்டதாக இராணுவ அதிகாரி ஒப்புக் கொண்டதாகவும், 1987முதல் ஏராளமான இளைஞர்கள் தெற்கில் காணாமற் போனமைக்கு தீவிரவாத இளைஞர்கள் காரணம் எனவும் தம்மிடம் கூறப்பட்டதாக குழு கூறியுள்ளது.

காணாமற் போனோர் பற்றிய விசாரணைகள் சுயாதீன அமைப்பால் ஆராயப்பட வேண்டும் என்பதையும், இலங்கைக்கான வெளிநாட்டு உதவிகள்– மனித உரிமை நிலைகள் அபிவிருத்தி அடைவதுடன் தொடர்பு படுத்தப்பட வேண்டும் என்பதையும் இக்குழு வலியுறுத்தியுள்ளது.

இக்குழுவிடம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சில அத்துமீறல்களையும், ஜே.வி.பி. காலத்தில் நிகழ்ந்த அத்துமீறல்களையும் ஒப்புக்கொண்டதாக குழுவினர் கூறியுள்ளனர். மனித உரிமைகள் மீதான ஐ.நா.துணைக்குழு 1991 பெப்ரவரியில் இலங்கைக்கு விஜயஞ் செய்யவுள்ளதாக அமைச்சர் தெரிவித்ததாக குழுவினர் தெரிவித்தனர்.

இலங்கையில் நிகழ்ந்த மனிதவுரிமை மீறல்கள் பற்றிய பல ஆவணங்களையும், காணாமற் போனோர் பற்றிய பல தகவல்களையும் இந்தக்குழு இலங்கையில் இருந்து வெளியே கொண்டுவர முயற்சி செய்தபோது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இந்தச் சான்றுப் பொருட்கள் அனைத்தும் விமான நிலைய அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டன.

சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினரான மஹிந்த இராஜபக்ஷ ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றபோதும், இவ்வாறு ஆவணங்கள் பொலீசாரால் சட்டவிரோதமான முறையில் பறிமுதல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

– நாட்டான் –

---

* அடுத்த பத்து வருடங்களில் குறைந்தது 5கோடி சிறுவர் மரணங்களைத் தடுக்க இரண்டரை பில்லியன் டொலர்கள் தேவைப்படுகிறது. இத்தொகையைத் திரட்டுவதில் பலசிரமங்கள் எதிர்நோக்கப் படுகின்றன. இதேதொகை ஒவ்வொருநாளும் உலகில் இராணுவ நோக்கங்களுக்காகச் செலவிடப்படுகிறது.

* இந்தியாவில் பிறக்கும் பெண் குழந்தைகளில் 25%இனர் 15வயதை அடையமுன் இறக்கின்றனர். வளர்ந்தபிறகு திருமணத்துக்கு பணம் செலவாகும் என்ற காரணத்தால் பிறந்தவுடன் பெண் குழந்தைகள் கொல்லப்படுவது இந்தியாவின் சில இடங்களில் இப்போதும் நிகழ்கிறது.

– சிறுவன் –

# செய்திகள்

செப்.1.

* செங்கலடிக்கும் ஏறாவூருக்கும் இடையே காணாமற் போன வண.பிதா ஹேவியரை மீட்டுத்தருமாறு மட்டக்களப்பு சமாதானக்குழு ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

* காத்தான்குடியை அடுத்த மூன்று கிராமங்களில் 5 பள்ளிவாசல்களும் 55வீடுகளும் எரிக்கப்பட்டுள்ளன.

* கண்டியில் சிவிலுடை அணிந்த படையினருக்கும் பொலிசாருக்கும் இடையே சிறுமோதல் நிகழ்ந்தது.

செப்.2.

* வன்னி மாவட்டத்தில் ஊரடங்கு அமுல்செய்யப் பட்டுள்ளது.

* வட- கிழக்கு அகதிகளுக்கு வாடகைக் கப்பலில் உணவுப் பொருட்கள் அனுப்ப தொண்டர் ஸ்தாபனங்கள் தீர்மானித்துள்ளன.

செப்.3.

* முல்லைத்தீவு முகாமைப் புலிகளின் முற்றுகையில் எதிர்நோக்குவதாக புதிய பா.உ. பராராஜசிங்கம் கூறியுள்ளார்.

* அரசியற் கட்சிகளின் தூதுக்குழு ஒன்று கிழக்கே செல்கிறது.

செப்.9.

* வவுனியாவில் புளொட் புதிய சந்தையொன்றை திறந்துள்ளது.

செப்.10.

* கிழக்கின் பெரிய அகதிமுகாம்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என கிழக்கு சென்று திரும்பிய அரசியல் பிரமுகர்கள் சிலர் கூறியுள்ளனர்.

செப்.11.

* மட்டக்களப்பு சத்துருக் கொண்டானில் இரு தினங்களுக்குமுன் கைதான நூற்றுக்கும் மேற்பட்டோரை விடுவிக்குமாறு த.வி.கூ. கூறியுள்ளது.

* மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த ரெலோ உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

செப்.12.

* திருமலையில் நிறுவப்பட இருந்து, பின் தெற்கே நிறுவப்படத் திட்டமிடப்பட்ட அனல்மின் நிலையத்தால் சூழல் மாசடையும் என சர்வோதயத் தலைவர் ஆரியரத்ன கூறியுள்ளார்.

செப்.15.

* ராமேஸ்வரம் அருகே 10இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டு உயிரிழந்தனர்.

செப்.16.

* கோட்டையருகே சுட்டுவீழ்த்தப்பட்ட விமானம் கண்டுபிடிக்கப் பட்டதாக அரசு அறிவித்தது.

செப்.17.

* கட்டுநாயக்கா விமானநிலையத்தில் சு.க.பா.உ. மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து பொலிசாரால் பறிக்கப்பட்ட மனிதவுரிமை மீறல் தொடர்பான ஆவணங்களை ஐ.நா.சபை கேட்டுள்ளது.

* பா.உ.கள் வந்த பஸ் ஒன்று படையினரால் தாக்கப்பட்டதாக அனுரா, தினேஷ் சபையில் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

செப்.23.

* கிழக்கில் முஸ்லீம் ஊர்காவற் படையை கலைக்குமாறு 6தமிழ்க் கட்சிகள் கோரியுள்ளன.

செப்.26.

* மட்டக்களப்பில் இருந்து வாழைச்சேனை, கல்முனை பஸ்சேவைகள் ஆரம்பித்தன.

* வந்தாறுமூலை அகதிமுகாமில் மலேரியா பரவியுள்ளது.

* யாழ்க் கோட்டை முகாமைவிட்டு அரசபடைகள் முற்றாக வெளியேறியுள்ளன. கோட்டை முகாமில் புலிக்கொடி பறக்கிறது.

செப்.27.

* எதிர்க் கட்சிகளும் அரசும் பேசி இனப்பிரச்சனைக்கு உடன் தீர்வுகாண வேண்டும் எனத் தொண்டமான் கேட்டுள்ளார்.

செப்.28.

* மலையக மக்கள் காணிப் பங்கீடு, வேலைவாய்ப்பில் பெருமளவு புறக்கணிக்கப் படுவதாக விவசாயத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் கிருஷ்ணசுவாமி கூறியுள்ளார்.

செப்.30.

* இலங்கை இனப்பிரச்சனைக்கு இராணுவ ரீதியில் தீர்வுகாண முடியாது என இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் கூறியுள்ளார்.

ஒக்டோபர் 1

* எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த 21 பா.உ.க்கள், ரிச்சட் டி சொய்சா கொலை தொடர்பாக விசாரணை செய்ய சுதந்திரமான ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளார்.

* ஆயுதக்குழு ஒன்றால் மிரட்டப்பட்ட வந்தாறுமூலை முகாம் அகதிகள் படிப்படியாக வெளியேறுகின்றனர்.

* 1991 பட்ஜெட்டில் 1178 கோடி ரூபா பாதுகாப்புச்

இருந்து மீட்க அரசபடைகள் முயற்சி செய்கின்றன.

* ஸ்ரீமா தலைமையில் 18 எதிர்க்கட்சிகள் இனப்பிரச்சனை தொடர்பாக ஜனாதிபதியைச் சந்தித்தன.

* மட்டக்களப்பு அகதிமுகாம்களில் தொற்றுநோய் அபாயங்கள் உள்ளன என தொண்டர் ஸ்தாபனங்கள் கூறியுள்ளன.

செப்.4.

* முல்லைத்தீவு முகாம் கட்டுப்பாட்டில் வந்துள்ளதாகவும், 55புலிகளும் 11படையினரும் பலியானதாகவும் அரச செய்திகள் கூறுகின்றன.

* மட்டக்களப்பில் 6உதவிஅரச அதிபர் பிரிவுகளில் சிவில்நிர்வாகம் தொடங்கியது.

* கண்டிக்கு வந்த கிழக்கு மாகாண அகதிகள் பலர் பிச்சையெடுத்து வாழ்கின்றனர்.

செப்.5.

* சாம் தம்பிமுத்துவின் இடத்துக்கு ஜோசப் பரராஜசிங்கம் பாராளுமன்றத்தில் நியமிக்கப் பட்டுள்ளார். இவர் தவிகூ ஐச் சேர்ந்தவர்.

* கிழக்கில் பாதிக்கப்பட்ட முஸ்லீம் மக்களுக்கு ஈரான் ஒருஇலட்சம் ரூபா உதவியுள்ளது.

* 17 எதிர்க்கட்சிகள் 4அமைச்சர்களை சந்தித்துப் பேசின.

செப்.6.

* வட- கிழக்கு மக்களிடையே நல்லெண்ணத்தை ஏற்படுத்த அரச பா.உ. க்கள் அப்பகுதி மக்களிடம் செல்லவேண்டும் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

* வவுனியாவில் 6அரச படையினர் பலியாகினர்.

* வடக்குப் பகுதி மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை செஞ்சிலுவைச் சங்கம் அனுப்பிவைக்கும்.

செப்.7.

* விலைவாசி உயர்வு, பஸ்கட்டண உயர்வை ஆட்சேபித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் திடீர் சத்தியாக்கிரகம் செய்தனர்.

செப்.8.

* மட்டக்களப்பு மக்கள் பட்டினிச்சாவை

* யாழ்க் கோட்டை முகாம் பகுதியில் தீவிர மோதல் தொடர்கிறது.

செப்.18.

* மட்டக்களப்பு சமாதானக்குழு தலைவர் அருணகிரிநாதன் தனது பதவியைத் துறந்துள்ளார்.

* யாழ்க் கோட்டை கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப் பட்டதாக அரசு அறிவித்துள்ளது.

செப்.19.

* கோட்டையில் இருந்து வெளியேற்றப்பட்ட 192 பொலிசார், படையினர் கொழும்பு வந்தனர்.

* இந்தியாவுக்குத் தப்பிச்செல்ல முயன்ற 312பேர் கடலில் கைதாகி திருமலை முகாமொன்றில் வைக்கப்பட்டுள்ளனர்.

* முஸ்லீம்களுக்கு தனிமாகாணம் அமைக்கப்படின் வடக்கு- கிழக்கு இணைப்பை முஸ்லீம் காங்கிரஸ் ஆதரிக்கும் என அஸ்ரப் கூறியுள்ளார்.

செப்.20.

* வாழைச்சேனை காகிதஆலை குடிநீர்க் கிணற்றுள் நஞ்சு கலக்கப்பட்டுள்ளது.

செப்.21.

* புத்தளம் வெள்ளமுந்தல் கிராமத்தில் 40சிங்கள மக்கள் கொல்லப் பட்டனர்.

* அரச- புலிகள் பேச்சு நடந்தபோது 20,000 ரோச் பற்றரிகளை வடக்கே அனுப்ப உத்தரவு கொடுத்தது யார் என்று அனுருத்த ரத்வத்த (ச.க.பா.உ.) கேட்டுள்ளார். (ஜொனிக் கண்ணிவெடிகளில் பற்றரிகள் பாவிக்கப்படுகின்றன)

* வடக்கு- கிழக்கில் புதிதாக குடியேற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை என அமைச்சர் ரஞ்சன் கூறியுள்ளார்.

செப்.22.

* யாழ்க் குடாநாட்டில் மீண்டும் ஊரடங்கு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

* 40 பா.உ.கள் சபைக்கு வெளியே விலைவாசி, பஸ்கட்டணத்தை குறைக்கக்கோரி ஆர்ப்பாட்டம் நடாத்தினர்.

செலவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 2

* முஸ்லீம்கள் கிழக்கில் தனி மாகாணசபை கேட்டால் அங்கு சிறுபான்மையினராக உள்ள சிங்கள மக்களும் தனிமாகாணசபை கேட்க நேரிடலாம் என சப்ரகமுவ மாகாணசபை உறுப்பினர் சேமபால கந்தவின்ன கூறியுள்ளார்.

ஒக்டோபர் 3

* கல்முனை கடற்கரையில் 5தமிழர்களது சடலங்கள் ஒதுங்கின.

* கிழக்கில் முகாமைவிட்டு வெளியேறிய அகதிகள் உணவு, தங்குமிடம் இன்றி அவதியுறுகின்றனர்.

ஒக்டோபர் 4

* வடக்கு- கிழக்கு இணைப்புத் தொடர்பாக தமிழ்-முஸ்லீம் கட்சிகள் இணக்கம் கண்டாலே சமூக முடிவு காணலாம் என அமைச்சர் ஹமீது கூறியுள்ளார்.

* கொழும்பு- வவுனியா புகையிரத சேவை ஆரம்பித்துள்ளது. மதவாச்சியில் இருந்து வவுனியாவரை ஹெலி பாதுகாப்பு வழங்கியது.

* மகாத்மா காந்தியின் பிறந்த தினத்தை ஒட்டி 500 நகரசுத்தித் தொழிலாளர்கள் இனிமேல் மதுபானம் அருந்தமாட்டோம் என உறுதி எடுத்துள்ளனர்.

ஒக்டோபர் 5

* கிழக்கு அகதிகள் முகாமைவிட்டு புலிகளால் வெளியேற்றப் பட்டதற்கு ஆதாரம் உள்ளதாக டெலோ செயலர் கருணாகரன் கூறியுள்ளார்.

* திருமலையில் புனர்வாழ்வுப் பணியில் தாம் ஈடுபடவுள்ளதாக புளொட் கூறியுள்ளது.

* செட்டிகுளத்தில் 7படையினர் கொல்லப்பட்டனர்.

ஒக்டோபர் 6

* வாழைச்சேனையில் கடந்த இரு மாதங்களில் படையினராலும் ஊர்காவற் படையினராலும் கைதான 200பேர் பற்றிய விபரம் தருமாறு உறவினர்கள் அரசைக் கோரியுள்ளனர்.

* வடக்கு- கிழக்கு புனர்வாழ்வுக்கென 150கோடி ரூபா ஒதுக்கப் பட்டிருப்பதாக அமைச்சர் ரணில்

விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

* கோட்டை முகாமைவிட்டு வெளியேறுமாறு புலிகளை அரசு வற்புறுத்தியுள்ளது. செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோட்டையை ஒப்படைக்க புலிகள் மறுத்ததாக அரசு கூறியுள்ளது.

ஒக்டோபர் 7

* பாராளுமன்ற குண்டுவெடிப்பு வழக்கின் 5எதிரிகளில் மூவர் விடுவிக்கப் பட்டனர்.

* தலைமன்னாரில் பதனிடும் வசதிகள் இல்லாமையால் ஏராளமான மீன்கள் கடலில் தள்ளப்படுகின்றன.

ஒக்டோபர் 8

* இனப்பிரச்சனைத் தீர்வு பற்றிப் பேச ஜனாதிபதி சுதந்திரக் கட்சிக்கும் மற்றும் சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளாத சமஜமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, புதிய சமஜமஜஜக் கட்சி, ஈரோஸ், ஈஎன்டிஎல்எஃவ் போன்ற அமைப்புகளையும் அழைத்துள்ளார்.

* கல்முனையில் இருந்து கொழும்பு வந்த 32 தமிழ் இளைஞர்கள் படையினரால் அம்பாறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஒக்டோபர் 9

* இந்திய கடவுச் சீட்டுப் பெற்ற மலையக மக்கள், வாக்குறுதிக்கு மாறாக நாட்டைவிட்டு வெளியேறுமாறு வலியுறுத்தப்படுவது தொடர்பாக ம.ம.மு. தலைவர் சந்திரசேகரன் அமைச்சர் ரஞ்சனுடன் பேசவுள்ளார்.

ஒக்டோபர் 10

* புலிகளுடன் பேசும்போது ஏனைய தமிழ் அமைப்புகளுடனும் அதேகாலத்தில் பேசவேண்டும் என ஐந்து தமிழ் அமைப்புகள் கோரியுள்ளன.

ஒக்டோபர் 11

* வடக்கு- கிழக்கு இணைப்பு இல்லாவிடில் நெருக்கடி தொடரும் என தொண்டமான் எச்சரித்துள்ளார்.

* புலிகளுடன் அரசு நிபந்தலையின்றிப் பேசாது என அமைச்சர் ரஞ்சன் கூறியுள்ளார். ஆயுதங்கள் கையளிக்கப் பட்டாலே பேசலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஒக்டோபர் 12

* யாழ்க் கோட்டையில் பறக்கும் புலிக்கொடியை நாசமாக்க 48மணிநேர காலக்கெடு விதிக்கப் பட்டதாக ரஞ்சன் கூறியுள்ளார். கோட்டை தாக்கப்படின் யாழ். வைத்தியசாலை திறப்பது தாமதமாகும் என செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

ஒக்டோபர் 13

* வடக்கு- கிழக்கு நிரந்தர இணைப்பில் தீர்வு சாத்தியம் எனவும், அங்கு ஒரு சபையா இருசபைகளா இயங்குவது என்பதை தமிழ், முஸ்லீம் கட்சிகளே தீர்மானிக்க வேண்டும் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

* பாராளுமன்றக் குண்டுவெடிப்பில் எஞ்சிய இரு எதிரிகளும் விடுவிக்கப் பட்டனர். எனினும் 5 எதிரிகளும் மீண்டும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

* யாழ்க் கச்சேரியில் 40% ஆனோரே கடமைக்கு வருகின்றனர்.

* யாழ் வைத்தியசாலைக்கு உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் 7கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 14

* முஸ்லீம் கட்சிகளுடன் வடக்கு- கிழக்கு இணைப்புத் தொடர்பாக 6தமிழ்க் கட்சிகள் பேசவுள்ளன.

ஒக்டோபர் 15


* யுத்தம் நிறுத்தப்பட்டு புலிகளுடன் அரசு பேசவேண்டும் என மட்டுநகரில் தமிழ்- முஸ்லீம் பிரமுகர்களது சமாதான மாநாடு வேண்டுகோள் விடுத்துள்ளது.

* இலங்கை, கௌதமாலா மனிதவுரிமை அமைப்புகள் இரண்டுக்கு காட்டர் விருது வழங்கப்பட்டுள்ளது.

## ஆஹா ஜனநாயகம்!

கடந்த சுவடுகளில் விலைவாசி ஏற்றம், பஸ்கட்டண உயர்வு, மக்கள்பற்றி எழுதியிருந்தேன். கடந்தமாதம் எதிர்க்கட்சியைச் சேர்ந்த 40எம்.பி.க்கள் பஸ்கட்டணம், விலைவாசி ஏற்றம் ஆகியவற்றைக் கண்டித்து இ.போ.ச. பஸ்சொன்றில் கட்டணம் செலுத்தாது பாராளுமன்றம்வரை அரச எதிர்ப்புக் கோஷங்களைக் கோஷித்தபடி பயணம் செய்தனர். இத்தகைய குறைந்தபட்ச ஜனநாயக நடவடிக்கைகளைக்கூடப் பொறுத்துக் கொள்ளாது அரசாங்கம் சிலகாடையர்களை ஏவி அந்த பஸ்சை இடைமறித்து எம்.பி.க்களை தாக்குதலுக்கு உள்ளாக்கியது. இதுபற்றி எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பாராளுமன்றத்தில் குரலெழுப்பிய போதும் அரசு இதற்கு மௌனம் சாதித்தது. தாக்குதலில் ஈடுபட்டோரில் ஒருவர் பொலீஸ் அதிகாரி என்பது பின்னர் தெரியவந்துள்ளது.

- வ.கமலி -




அத்தியாயம் 11

எல்லாம் ஒரே மங்கலாய்க் கிடந்தது. ஒண்டையும் பாக்க முடியேலை. கண்களிலைதான் ஏதேன் பழுது வந்துட்டுதோ? அல்லாட்டி கண்டபடி கற்பனை பண்ணுறேனோ? என்னப்பா நடக்குது. ஒண்டும் விளங்கேல்லை. மஞ்சல் மஞ்சலாய் ஏதோ பறக்குது. கறுப்பு வர்ணத்திலை இடைக்கிடை வெள்ளைக் கோடு போட்ட முகில்கள் மாதிரியும், பஞ்சுப் பொதியள் மாதிரியும் என்னைக் கடந்து போறது என்ன? வரிவரியாயும் கட்டங் கட்டமாயும் உடுப்புகள் அணிந்த பெரிய சிறிய உருவங்கள் எல்லாம் எனக்கு முன்னாலை வந்து நிண்டு டான்ஸ் ஆடுறமாதிரி ஆடிக்கொண்டு நிக்குதுகள்... நீலக் கலரிலை ஒரு பெண்ணுருவம் ஸ்தூலமாய்த் தெரியுது. அதுவும் அலைகளுக்கு இடையில ஆடியசைஞ்சு மறையப் பாக்குது. கண்ணைத் துடைச்சுப் போட்டு மீண்டும் வலிந்து பார்த்தாலும் அது என்னை நையாண்டி பண்ணுறது மாதிரித்தான் கிடக்குது. பறந்து... பறந்து... கறுப்புச் சட்டை அணிந்ததுபோல் வெளவால்கள் வந்தன. கிறீச்சுக் கிறீச்செண்டு அதுகள் போடுற சத்தம் காதையடைக்குது. இந்தச் சனியள் இந்தநேரத்திலை எங்கே வருகுதுகள்... இந்த வெளவால்கள் எந்த இரையைத் தேடிப் பறக்கின்றன? வெளவால்கள் தலைகீழாகத்தான் துாங்குமாம். ஆனால் இதுகள் சாதாரணமாக நேரே பறக்குதுகள். துாங்கவில்லை, நடக்குதுகள். அதுகளின்ரை பல்லுகள் மனிசரின்ரை பல்லுமாதிரி, றகுலாப்படப் பல்லுமாதிரி... கிறீச் கிறீச், இதென்ன சத்தம்... காதடைத்து... கையைக்கூட எடுத்துப் பொத்த முடியாதாம். சோவென்று வீசுற இந்தக் காத்து வேறை. சாடையாகக் குளிருது. மயிரெல்லாம் புல்லரித்து காய்ச்சல் காயுறமாதிரிக் கிடக்குது. ஏன் பல்லுகள் கிடுகிடுவெண்டு

அடிக்குதெண்டு தெரியேலை. கறுப்பு வர்ணத்திலை வெள்ளைக் கோடுபோட்ட அந்தப் பஞ்சு உருவங்கள் மீண்டும் முன்னாலை. இதென்னடா சனியங்கள். இதுகளை அடிச்சுக் கலையுங்கோ... கையும் ஏவுதில்லை, காலும் ஏவுதில்லை. இதுகள் ஏன் திரும்பத் திரும்ப வருகுதுகள்? அதுகளுக்கிடையில ஒரு தொப்பிபோட்ட உருவம் மிதந்து மிதந்து வருகுது. ஆர் அது? அது இங்கிலீசுப் படத்திலை வாற cowboy மாதிரி... அதென்ன குதிரையோ 'கொண்டா' மோட்டபைக்கோ தெரியேலை. அதுக்குப் பின்னாலை கனக்க ஆக்கள் வாறமாதிரிக் கிடக்கு. அந்த ஆக்களும் தொப்பி போட்டிருக்கிறாங்கள். வௌவால்கள் நடந்து வாறமாதிரி பாய்ந்து வாறாங்கள். கையில என்ன மினுங்குது. புதுத் துவக்கு! புதிய மின்சாரத் துவக்கு! தலைமை உருவம் ராசாக்கள் சிரிக்கிற மாதிரி பலமாகச் சிரிக்குது. இந்தச் சிரிப்பு... இந்தச் சிரிப்பு... எங்கையோ நான் கேட்டிருக்கிறேன். எங்கையோ நல்லாப் பழகின சிரிப்பு... ஓம்! இது



சுரேசின்ரை சிரிப்பு. உருவங்கள் துவக்கோடை ஓடிவருகுதுகள். பத்துப் பதினைஞ்சுபேர் சுற்றிவளைச்சு என்னைத் துவக்கு முனையில... எப்படித் தூக்கினார்கள்? நான் எந்த வாகனத்தில போகிறேன்? நான் எப்பிடிப் பறக்கிறேன்? பறக்கிறேனா அல்லது மிதக்கிறேனா? நடக்கிறேன்தான். என்னை இந்தக் கரும்பாறைமேல் இவர்கள் ஏன் கிடத்துகிறார்கள்? நான் இவர்களுக்கு என்ன செய்தேன்? என்னால் ஏன் கத்தவோ பேசவோ முடியாதாம்? நான் ஊமையாகி விட்டேனா? அந்த உருவங்கள் சற்று நகர்ந்து துப்பாக்கியை என் உடல் முழுவதும் குறிபார்ப்பது வேடிக்கைக்கா அல்லது உண்மையில் என்னைச் சுடத்தானா? நான் என்ன சமூகவிரோதியா? அவர்கள் குண்டுகளையும் பொருத்தி விட்டார்கள். இனிச் சுட்டுவிரலை அசைக்க வேண்டியதுதான். என்கதை முடிந்தது. தலைவன்... அந்தத் தொப்பிச் சுரேசின் குரல் பெலமாகக் கேட்கிறது. இப்பொழுது நான்- கத்தவேணும் பேசவேணும். இப்ப கத்தேலாட்டி இனி எண்டைக்குமே கத்தேலாது.

கத்து-

பேசு-

சத்தமிடு-

"டேய் சுரேஷ் கொஞ்சம் பொறு!"

"தம்பி ரகு ஏன்ரா கனவிலை இப்பிடிக் கத்துறாய்... அவள் போட்டாள், போனவள் ஏதோ நல்லதுக்குப் போட்டாள் எண்டு அம்மாளைக் கும்பிடு. எனக்கும் எனி அழேலாது"

அம்மா ஈஸ்வரி கொட்டாவியுடன் இதைச் சொன்ன பொழுதுதான் கனவு என்று கண்டுகொண்டான் ரகுநாதன். எழுந்து குசினிக்குள் போய் ஒருபேணி தண்ணி குடித்துவிட்டு வந்தான். கனவைப் பற்றி யோசித்தான். என்னையறியாமல் என்மனம் சுரேஷில் பழிபோடுவதும்... அவன் என்னைப் பழிவாங்குவதுமாய் ஏன் நினைக்கிறது? கால ஓட்டத்தில் ஓரலையாக தூயஇலட்சியம் என தம்முள் ஒன்றை வரித்துக் கொண்டவர்கள் அதற்காகப் போரிடுவதில் அல்லது வாழ்வதில் என்ன தப்பு? நான் வேணுமெண்டு கனவு காணவில்லை. கனவு தானாக வருகிறது. என் பயஉணர்வா? அல்லது குற்றஉணர்வா? அல்லது என் தங்கைமேலும் நண்பன்மேலும் கொண்ட பாசஉணர்வா? என்னஉணர்வு என்னகத்தே குடிகொண்டு இப்படி ஒரு கனவை உருவாக்கியது? இந்தக் கேள்விக்கு யாரிடம் போய் விடை கேட்கலாம்? உணர்வுகளை அறிவுமயப்படுத்தும் கலைதெரிந்தவன் யார்? உணர்வுகளுக்குப் பெயர் சூட்டும் வல்லவர்கள்தான் உள்ளார்கள். ஆனால் இன்ன உணர்வுக்கு இன்ன பெயர் என்று தெரிவு செய்வதிலும் சூட்டிய பெயரைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கும் அவர்களுக்கு எந்த அறிவுத் தொகுதி காரணமாய் இருந்தது?

சடாரெனச் சரிந்து கைகள் இரண்டையும் கால்களுக்குள் போட்டு... கண்களைமூடி... நித்திராதேவியே தயவுசெய்துவா! நான் யோசிக்கக் கூடாது. நான் என்னை மறக்க வேண்டும். உன்னை ஒரு 'நித்திராதேவி' என முதல்முதல் அழைத்தவன் என்னைப்போல் ஒருவன் என நினைக்கிறேன். உன்னைப் பெண்மையாக்கி தேவியாக்கி அணைக்கவேண்டும் எனும் ஆவல் கொண்டவன். அவன் எப்படியும் போகட்டும் தயவுசெய்து என்னிடம் வா!

சரி! இண்டைக்கு நித்திரை வந்தாப்போலைதான். இண்டைக்கு சிவராத்திரி. சேட்டை மெதுவாக எடுத்துக் கொண்டு சத்தங் கேளாமல் கதவைத்

திறந்து வெளியிலை வந்தான் ரகுநாதன். பளிச்செண்டு பகல்போல நிலவு. ஒரே அமைதியாய் ஊரும் ஒழுங்கையும் அடங்கிக் கிடந்தது. மெதுவாக இப்பிடியே றோட்டாலை நடந்துபோய்... கொயிலடியில இருக்கலாம். இருந்துகொண்டு அரசமரத்துக்கு ஊடாக அந்த இலைகளுக்கு ஊடாக நிலவைப் பாக்க ஆனந்தமாய் இருக்கும். கேற்றைத் தாண்டி றோட்டில காலை வைச்சான். வைச்ச உடனைதான் யோசிச்சான். இப்ப திடீரென ஒரு ஜீப் வந்தால் என்ன நடக்கும்? நான் ஒரு பயங்கரவாதி! அல்லாட்டிச் 'சென்றிக்கு' நிக்கிற ஏதாவதொரு இயக்கப் பெடியள் வந்தால் என்ன நடக்கும்? எனக்குக் campலை கொண்டுபோய் விசாரணை. "எட தம்பியளே எனக்குத் தமிழீழமும் வேணும் நிலவும் வேணும்" எண்டு சொன்னா என்ன செய்வாங்கள்?

திரும்பி கேற்றுக்குள்ளாலை வீட்டுக்குள் போனான். 'டேட சுரேஷ் என்ரை தங்கச்சியை உன்ரை இயக்கத்துக்குள்ளை இழுத்த உன்னாலை என்னை ஏனடா இழுக்க முடியாமல் போச்சு? என்னையும் தயவுசெய்து உன்னோடை இழுத்து வைச்சிரு. நான் இனி ஒண்டும் பேசேலை. நான் உன்ரை நண்பன்தான்' எண்டு யோசித்தான்.

சேட்டைக் கழற்றி எறியேக்கை சந்திராவின்ரை கடிதத்தைப் பொக்கற்றுக்கை வைச்சது ஞாபகத்துக்கு வந்தது. எடுத்துப் பதினெட்டாவது தடவையாகப் பார்த்தான். அவனையும் அறியாமல் கண்ணீர் வந்தது. விறுவிறு எண்டு ஒரு கொப்பியை எடுத்து ஒரு கடதாசியைக் கிழித்தான். அவனுக்குத் தெரியும் இருந்த எல்லாச் சிகரெட்டையும் பத்தி முடிச்சாச்சு. பேப்பரையாவது சுருட்டி ஒரு புகைவிடுவம்.

(தொடரும்)



* "மன்னா! பத்துக் கோழி, ஐந்து மாடு, இரண்டு சோத்துப் பார்சல்கள் ஆகியன கப்பமாகக் கேட்டு ஓலை வந்திருக்கிறது..."

"எந்த எதிரிநாட்டு மன்னன் அனுப்பியிருக்கிறான்?"

"மன்னா எதிரிநாட்டு மன்னனல்ல... 'இயக்கம்' அனுப்பியிருக்கிறது!"

- ஈழத்தோன் -

எனது நண்பரின் சின்னம்மா ஊரில் நடக்கும் விடயங்களை சுவைபட எழுதுவார். அண்மையில் எழுதிய கடிதத்திலிருந்து...

இங்கு பொருட்கள் எல்லாம் யானை விலை, குதிரை விலை தான்!

அடுத்த வீட்டு சின்னப்பிள்ளைக்கு முதலாவது பிறந்தநாள் கொண்டாடினார்கள். ஏதாவது பரிசுப்பொருள் வேண்டுவதானால் கையில் காசு இல்லை ஏதாவது சிற்றுண்டி செய்யப் போவதானால் பொருட்கள் இல்லை.

கடைசியில் மண்டையை உடைத்து யோசித்து முடிவுசெய்தேன். அந்த வீட்டுக்காரர்களுக்குப் பிரயோசனமாக இருக்குமென்று ஒரு கிலோ சீனியைப் பரிசுப் பொருளாக எடுத்துச் சென்றேன். நாங்கள் சூழலுக்கு ஏதுவாக வாழப் பழகிக் கொண்டோம்.

**நி.கு- இப்போது சீனியின் விலை 65 ரூபா.**

- செய்தி கேட்டோன் -

*உண்மையை எழுதினால் என்ன நேருமோ என்று பயந்து உண்மையை மறைக்கும் இலங்கைப் பத்திரிகைகளிடையே ஒரு துணிச்சலான முயற்சி 'சரிநிகர்'. இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான அமைப்பின் (MIRJE) மாதாந்தப் பத்திரிகை. வருட சந்தா 15 டொலர்கள். இதன் சகோதரப் பத்திரிகைகள் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் வெளிவருகின்றன.*

*முகவரி:* **Sarinigar,**

**MIRJE,**
**6, allo avenue,**
**COLOMBO 3**
**Sri Lanka**

# தீர்ப்பு மக்களிடம்

வடக்கு கிழக்கு மக்களுக்கு எதிராக அரசு நடத்தி வரும் யுத்தத்திற்கு இப்போது வயது மூன்று மாதம். அகதிகளின் எண்ணிக்கை இப்போது பத்து லட்சத்தை எட்டிவிட்டது. இவ்வகதிகளில் பெரும்பாலானோர் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும்தான்.

யுத்தத்தில் கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் எண்ணிக்கை கணக்கிலடங்கா. புள்ளி விபரங்களுக்குள்ளால் குருதி சிந்துகிறது.

முன்னெப்போதும் இல்லாத தன்னம்பிக்கையுடன் அரசும் புலிகளும் மோதுவது போலத் தோன்றுகிறது. எல்லா யுத்தங்களைப் போலவே இந்த யுத்தத்திலும் 'தர்மம்' என்று எதுவுமே கடைப்பிடிக்கப் படவில்லை.

இரு பகுதியிலுமே பொது மக்களின் கருத்துத் தளம் (Civil society என்ற கருத்தில்) குரல்வளை நெரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. உண்மை 'பங்கருக்குள்' ஒளித்துவிட்டது. "பத்து நாட்களில் யாழ்ப்பாணம் பஸ்மம்" என்று சொன்னவர்களின் சந்தடியையும் காணவில்லை!

யுத்த வெறியிலும் ஓயாத அம்புலன்ஸ் இரைச்சலுக்குள்ளும் கொழும்பு அரசியல் 'சுத்துமாத்து'களுக்குள்ளும் திருவிழா அமளிகளுக்குள்ளும், திருவிழா கோலாகலங்களுக்குள்ளும் வடக்கு கிழக்கு மக்களின் சுயநிர்ணய உரிமை 'காணத்துப்' போயிற்று.

போகிற போக்கில் வடக்கு கிழக்கில் மக்கள் வாழ்கிறார்கள் என்பதே தலைநகரில் உள்ளவர்களுக்கும் வெளியுலகுக்கும் மறந்து போய்விடும் என்று தோன்றுகிறது. இந்த நிலையில் கொழும்பில் இப்போது மையம் கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கட்சிகள், முன்னணிகள், இயக்கங்கள் என்ன செய்கின்றன? அவர்களுடைய நிலைப்பாடு தமிழ், முஸ்லிம் மக்களுக்கான அவர்களுடைய கடப்பாட்டுடன் பொருந்தி வருகிறதா என வினா எழுப்ப

வேண்டியுள்ளது.

இந்த தமிழ்க் குழுக்கள் அனைத்தும் விடுதலைப் புலிகளின் இயக்க விதிவசத்தால் (ஒன்றுக்கு மேலே எப்போதும் வேண்டாம்) இந்தியாவிலும் இலங்கையிலும் ஒதுங்கியவர்கள் என்பது ஒருவகையில் புரிந்து கொள்ளப்படக் கூடியதாயினும் இன்றைய யுத்தம் தொடர்பாகவும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றியும் அவர்களுடைய நிலைப்பாடு கேள்விக்குரியது.

அப்பாவி மக்களே பாதிக்கப் படுகிறார்கள் என்று அவ்வப்போது குரலெழுப்பினாலும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காமல் அரசு யுத்தத்தில் ஈடுபடுவது மக்களுக்கு எதிரானது என்பதை அவர்கள் முதன்மேப்படுத்தத் தவறிவிட்டார்கள். இது இலங்கை அரசின் அடிப்படை அம்சமான சிங்கள பௌத்த பேரினவாத வேரை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பதைக் காட்டுகிறதா அல்லது பிரதான எதிரி சிங்கத்தில் இருந்து புலிக்கு மாறிவிட்டதைக் காட்டுகிறதா?

எவ்வளவு அராஜக வாதிகளாகப் புலிகள் இருந்த போதிலும் யுத்தம் இருக்கும்வரை வடக்கு கிழக்கு மக்களின் சுயநிர்ணய உரிமை - புலிகளைப் பற்றிக் கவலைப் படாமலேனும் - அங்கீகரிக்கப் படும்வரை, ராணுவம் சிங்கள பௌத்த ராணுவமாக இருக்கும்வரை புலிகளை அவர்கள் வெல்வதோ அல்லது அவர்களை தனிமைப் படுத்துவதோ இயலாது.

இன்னொரு புறத்தில் இந்தத் தமிழ் குழுக்கள் தாங்கள் சொல்வது போல விடுதலைப் புலிகளுக்கான ஜனநாயக மாற்று அமைப்புகள்தானா? கடந்த காலங்களும் கசப்பான அனுபவங்களும் "இல்லை" என்ற பதிலை நம் முகத்தில் அறைகின்றன.

சாத்தான் வேதம் ஓதுவது போல இவர்களது ஜனநாயகம்கூட மூடியே தவிர முகமல்ல. இவர்களது ஜனநாயகம்தான் ஊரடங்கு போட்டு தேர்தலுக்கு வேட்பு மனு தாக்கல் செய்தது. இவர்களது ஜனநாயகம்தான் துப்பாக்கி முனையில் மக்களை வாக்களிப்பித்தது. இவர்களது ஜனநாயகம்தான் யாழ்ப்பாணத் தினசரிகள் அத்தனையையும் தடை செய்தது.

(அரசின்) 'ஜனநாயக வழி'க்கு வந்து விட்டதாக சொல்லப்படும் இந்த இயக்கங்கள் தங்கள் கடந்த கால ஜனநாயகத்தை விருப்பு வெறுப்பின்றி காய்தல் உவத்தல் இன்றி சுய விமர்சனம் செய்ய வேண்டும்.

தங்களது இரத்தக் கறை படிந்த கரங்களையும் குருதியில் கொப்புழித்த வாய்களையும், மக்களுக்கு முன்னால் ஒப்புதல், சுயவிமர்சனம் என்ற வேள்வித் தீயில் மாசகற்ற வேண்டும்.

'கெஞ்சினால் மிஞ்சுவர் மிஞ்சினால் கெஞ்சுவர்' என்ற உண்மையை இலங்கை அரசாங்கத்துடனான உறவில் இவர்கள் கடைப்பிடிக்க முடியும் என்று தோன்றவில்லை.

ஏனென்றால் இவர்கள் தமிழ் மக்களுக்கும் அவர்களது உரிமைப் போராட்டத்துக்கும் எதிராக இலங்கை அரசு நடத்தும் தனது அடக்குமுறை யுத்தத்தை, புலிகளின் ஜனநாயக விரோத அராஜகத்துக்கு எதிரான யுத்தமாக பிரச்சாரித்து வருவதை மறுக்கவில்லை. அதாவது அரசின் அத்துமீறிய நடவடிக்கைகளை இவர்கள் கண்டிக்க ஒருபோதும் தயாராகவில்லை.

மக்களிடம் இருந்தும் அவர்களின் நலன்களில் ஏலவே அந்நியமாகிவிட்ட இவர்களால் ஒருபோதும் அரசை மிஞ்ச முடியாது. இலங்கை அரசிடம் 'கெஞ்சி' எதையும் பெற்றுவிட முடியாது என்பது தமிழ் மக்களின் கடந்த 40 ஆண்டு காலப் பாடம். அரசை 'கெஞ்சவோ' 'மிஞ்சவோ' வக்கற்ற நிலைக்குள் வந்து நிற்பவர்கள் இவர்கள்.

புலிகளை ∴பாசிஸ்டுகள் ஜனநாயக விரோதிகள் என்ற இவர்கள் தம்மளவில் தாமும் அவ்வாறு நடந்து கொள்வதுடன் இவ்வியல்புகளில் புலிக்கும் புலியான இலங்கை - இந்திய அரசுகளுடன் நட்புறவுக் கூட்டு மற்றும் அந்நியோன்னியங்களைக் கொண்டிருந்தவர்கள்\ இருப்பவர்கள்.

இவர்களின் 'ஜனநாயகம்' என்ன என்பது இவர்களுக்குப் புரியாமல் இருக்கலாம். ஆனால் அதை புரிந்து கொள்ளாமல் இருக்க மக்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல. ஈரோஸின் தலைவர் பாலகுமார் ஒரு முறை சொன்னார் 'ஒரு காலம் வரும் அப்போது மக்கள் எல்லா இயக்கங்களையும் தூக்கி வீசுவார்கள்' என. உண்மையில் இவர்களிடம் இருக்கிற ஒரே நோக்கம் புலிகளை முற்றாக அழிப்பது, அரசிடம் இருப்பதோ புலிகளின் பெயரால் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தையே நசுக்குவது.

இரண்டு பேரும் தத்தமது நோக்கத்தில் புலி அழிப்பில் ஒன்று சேர்ந்துள்ளனர். முடிவு இருவருக்குமே மக்கள் நலன் பற்றிய ஒரு கிஞ்சித்தளவான அக்கறையும் கிடையாது என நிரூபிப்பதே.

அழிக்கப்படுவது புலிகள் அல்ல, அகதிகளாவது புலிகள் அல்ல, நசுக்கப்படுவதும் புலிகள் அல்ல, மாறாக தமிழ் முஸ்லிம் மக்களும் அவர்களது உரிமைகளுமே! இவர்களுக்கு உண்மையில் மக்களின் நலனில், தமிழ் முஸ்லிம் மக்களின் உரிமைப் போரில் அக்கறை இருந்தால் குண்டுத் தாக்குதலை நிறுத்தும்படி கோருவதற்குப் பதில்

யுத்தத்தை நிறுத்தும்படியும், உணவு விநியோகத்தைக் கோருவதற்குப் பதில் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்படியும் கோரவேண்டும். அதற்காகப் போராட வேண்டும்.

புலிகளின் "பாசிஸப்" பிரச்சினை தமிழ் மக்களின் பிரச்சினை. அதை தனியாக அணுக வேண்டும். ஆனால் தமிழ் மக்களின் வாழ்வுப் பிரச்சினை அதுவல்ல. அது அவர்களின் உரிமைப் பிரச்சினையான சுயநிர்ணய உரிமை பற்றிய பிரச்சினை. அதைப் பற்றிப் பேசாது வேறு எதைப் பற்றியும் பேசுவது அர்த்தமற்றது.

மக்களுக்கு எதிராக யுத்தம் நடத்தும் அரசிடம் மக்கள் கொல்லப்படுவது குறித்து முறையிடுவது வேடிக்கையிலும் வேடிக்கையானது.

நிபந்தனை அற்று யுத்தத்தை நிறுத்தும்படியும் வட கிழக்கு மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்படியும் கோருவதன் மூலமே, அதைச் செய்ய நிர்ப்பந்திப்பதன் மூலமே வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு (ஏதாவது செய்ய விரும்பினால்) இந்தக் கட்சிகள் ஏதாவது செய்யமுடியும்.

சரிநிகர் சொல்ல விரும்புவதெல்லாம் இதுதான்: புலிகள் ∴பாசிஸ்டுகளாகவே இருக்கட்டும். ஆயுத வெறி பிடித்த கொலையாளிகளாகவே இருக்கட்டும். தமிழ் மக்கள் அந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வார்கள். அரசுக்கும் மக்களுக்குமான பிரச்சினையில் முக்கியமானது அது அல்ல! மக்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்குவதும் யுத்தத்தை நிறுத்துவதும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதும் மட்டுமே எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க உள்ள ஒரேயொரு மார்க்கம். இதைவிட வேறு குறுக்குவழி கிடையாது.

இலங்கை அரசு அதைச் செய்யாதவரை பொருளாதாரச் சீரழிவில் இருந்தும் அந்நியத் தலையீடுகளில் இருந்தும் இலங்கையை இலங்கை மக்களை ஏன் இந்த அரசு தன்னையேகூட பாதுகாத்துக் கொள்ள முடியாது●

நன்றி: சரிநிகர்

23

INDISK DARBAR VEGETAR

MAT
OG VINHUS

- STEDET FOR BEST INDISK MAT I BYEN
- SPENNENDE VEGETAR RETTER
- PIZZA
- RIMELIGE PRISER!

Kl. 16-23 (søn. 14-23).
Tlf.: 67 47 04.

Smedgt. 49, (Ing. Jens Bjelkesgt.) Oslo 6